விலை ரூபா: 14.00 (கொழும்பு விலை ரூபா: 17.00) பக்கங்கள்:-(08+16) Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

திருமணப் பட்டுப்
புடைவைகளின் கைராசியான
ஸ்தாபனம்

ரவி அன் ராஜ்
சில்க்ஸ்
77, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்
T.P:- 021-2469

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 20 திங்கட்கிழமை (05.08.2002) தொலைபேசி 3378 ஒலி 229

### லக்ஸ்மன் கதிர்காமரை பிரதமராகக் கொண்ட

# நல்லிணக்க அரசு அமைக்க திரை மறைவில் முயற்சி!

## சதித்திட்டம் அம்பலமாம் அரசியலில் பரபரப்பு

(அரசியல் நிருபர்)

**தேசிய நல்லிணக்க அரசொன்றை அமைப்பதற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.**

**தற்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டே இந்த அரசு அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும் பிரதமர் மற்றும் ஒரு சில அமைச்சர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை அடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளின் மத்தியில் தேசிய நல்லிணக்க அரசொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவாதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய நல்லிணக்க அரசொன்றை அமைத்து அதன் மூலம் ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்துவதே இதன் நோக்கம் என அறியப்படுகிறது.

தற்போது பாராளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்களில் 113 பேர்களின் ஆதரவைப் பெற்று அவர்கள் மூலம் பொருத்தமான ஒருவரைப் பிரதமராக்குவதற்கு முயற்சிகள் நடைபெறுவதாக அறியப்படுவதுடன் முன்னாள் வெளிவிவகார அமைச்சர்

(02ம் பக்கம் பார்க்க)

## பரீட்சை முடிவுகள் இணையத்தளத்தில் வெளியாகின

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்று முடிந்த க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று இணையத்தளத்தில் வெளியிடப்பட்டன.

WWW.Doenets.lk என்ற இணையத்தள முகவரியினூடாக மாணவர்கள் பரீட்சைப் பெறுபேறுகளை அறிந்துகொள்ள முடியும்.

அதேவேளை உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த வாரமே இணையத்தளத்தில் வெளியிடப்படுமென செய்திகள் வெளியாகி இருந்தமைகுறிப்பிடத்தக்கது.

(த)

## புலிகளின் தலைவர் பிரபாவுடன் நேரடியாகப் பேசத் தயார்!

### ஜனாதிபதி சந்திரிகா சண்டே ரைம்ஸ்க்கு தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை சந்தித்து பேச்சு நடத்துவதற்கு தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் "சண்டே ரைம்ஸ்" ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டியிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நேரடியாக சமாதானப் பேச்சில் ஈடுபடத் தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா அப் பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்.

(02ம் பக்கம் பார்க்க)

## ஆளுங்கட்சியைச் சேர்ந்த 18எம்பிகள் பொ.ஐ.முக்கு ஆதரவு

## நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாக பயன்படுத்தும் காலம் வந்துவிட்டது

### ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரங்கள் முழுவதையும் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ளதென்று, ஜனாதிபதி சந்

கட்சியின் புனரமைப்புக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இதனால் நாட்டை பாதுகாக்கவும் மக்களின் துன்ப துயரங்களைப் போக்கவும் தனது நிறைவேற்று அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்த

(02ம் பக்கம் பார்க்க)

## கலாநிதி சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் 18 பேர் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு தெரிவித்திருப்பதாக அக்கட்சியினுடைய பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம

தற்போது ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்குள் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடியை அடுத்துதே இவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு தெரிவிக்க முன்வந்திருப்பதாக அவர் மேலும்

# ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரங்கள் முழுவதையும் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ளதென்று, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புனரமைப்புக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் நடவடிக்கைகளால் மக்கள் பெரும் சிக்கல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனால் நாட்டை பாதுகாக்கவும் மக்களின் துன்ப துயரங்களைப் போக்கவும் தனது நிறைவேற்று அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்த

(02ம் பக்கம் பார்க்க)

வலம்புரி உடன்
வாரமலர்
சங்கு நாதம்
தவறாது கேட்டு வாங்குங்கள்

(கொழும்பு)

அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் 18 பேர் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு தெரிவித்திருப்பதாக அக்கட்சியினுடைய பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவவித்துள்ளார்.

தற்போது ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்குள் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடியை அடுத்துதே இவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு தெரிவிக்க முன்வந்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# 30 ஆயிரம் மில்லியன் ரூபாவை சந்திரிகா கையாடியுள்ளார்!

## அமைச்சர் எஸ்.பி திடுக்கிடும் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வெளிநாட்டு நிதியத்திலிருந்து 30 ஆயிரம் மில்லியன் ரூபாவை கையாடியுள்ளதாலேயே சமுர்த்தி நிவாரணத்தை 25 சத வீதத்தால் குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக சமுர்த்தி இளைஞர் விவகார அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியை கருத்திற் கொண்டு இந்த நிவாரண வெட்டை அமுல்படுத்துவதாகவும், அடுத்த வருடம் முதல் வெட்டப்படும் நிவாரணத்தை மீளவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும்

(02ம் பக்கம் பார்க்க)

# அன்ரன் பாலசிங்கம் நோர்வே செல்வார்

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு வருவதற்கு முன்னர் நோர்வேக்கு செல்லவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நோர்வே செல்லவுள்ள அவர் அங்கு ஒருவார காலம் தங்கியிருந்து அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான ஆரம்பக் கட்டப் பேச்சு

(02ம் பக்கம் பார்க்க)

# யாழ். பல்கலைக் கழகத்தில் விரைவில் தகவல் மையம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாசார நிறுவனமும், (யுனஸ்கோ) யாழ் பல்கலைக்கழகமும் இணைந்து டென்மார்க் அரசின் உதவியுடன் தகவல் மையம் ஒன்றை வெகு விரைவில் யாழ்ப்பாணத்தில் அமைக்கவுள்ளது. இதற்கு பல்கலைக் கழக மூதவையும் அங்கீகாரம் அளித்துள்ளது.


இத் தகவல் மையத்தினூடாக ஊடகவியலாளர்களுக்கு டிப்புளோமா பயிற்சி ஒன்று அளிக்கப்படவிருக்கின்றது.

180 லட்ச ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இத் தகவல் நிலையம் தொடர்பான பூர்வாங்க ஆரம்ப வேலைகளுக்கான ஆய்வுகளை மேற்கொள்ள டெல்லியில்

(02ம் பக்கம் பார்க்க)

கையில் இருக்கும் நகைகளுக்கு
கச்சிதமான கைமாற்று
ஹற்றன் நஷனல்
அடகு வைக்கும் வசதி

ஒரு பவுணுக்கு ரூ. 5500/- அடகுப்பணம்! மாதாந்த வட்டி 1.83% மட்டுமே!



- அதி கூடிய அடகுப்பணம்
- மிகக் குறைந்த வட்டி
- விரைவான சேவை
- தவணை முறையில் மாதாந்தம் மீளச் செலுத்தும் வசதி
- அடகு நகைகளுக்கு இலவச காப்புறுதி
- கணனி மூலம் மதிப்பீடு செய்யப்படுவதால் தங்க நகைகளுக்குச் சேதம் ஏற்படாது
- உயர் பாதுகாப்பும் கொடுக்கல் வாங்கல்களில் பூரண இரகசியமும் பேணப்படும்

மேலதிக விபரங்களுக்கு ஹற்றன் நஷனல் வங்கி யாழ் கிளையுடன் தொடர்பு கொள்ளவும்
ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
[C/4634]

## சிறு விளம்பரம்

### தையலர் தேவை

தையல் அனுபவமுள்ள நான்கு மைல் சுற்றுவட்டாரத் தூரத்துக்குள் தையல் கடைக்கு வந்து செல்லக் கூடிய மகளிர் இருவர் தேவை நேரில் சமுகமளிக்கவும். 'சத்தியா' (ஜோதிட நூலாசிரியர்) 3ம் ,மைல் - ஆனைக்கோட்டை.

T.P-021-2753 (2753)


# புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல்படுத்துவதில் அரசு தாமதம்

## கூட்டமைப்பினரிடம் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இடம்பெற்றுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல்படுத்துவதில் ஏற்பட்டுவரும் தாமதங்கள் குறித்து வெளிநாட்டுத் தூதராலயங்களுக்குத் தெரிவிக்குமாறும் அதுகுறித்த விளக்கங்களை அளிக்குமாறும் தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பினரை தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கேட்டுள்ளார்.

தமிழ்க்கட்சிக்கூட்டமைப்பு எம்-பிக்களை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனை நேற்று முன்தினம் கிளிநொச்சியில் சந்தித்துப் பேசும்போதே மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசஉரியமுறையில் பயன்படுத்தத் தவறுமானால் வடக்குகிழக்கு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் ஹர்த்தால்கள் அனுஷ்டிப்பது சம்பந்தமான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுமாறும் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் தமிழ்ச்செல்வன் கேட்டுள்ளார். (ம)

# ஏ-9 வீதியில் வேகத்தை கட்டுப்படுத்தும்படி

## தமிழீழ காவல்துறை அறிவிப்பு

(கல்வயல்)

ஏ-9 வீதியில் தற்போது வாகனப் போக்கு வரத்து அதிகரித்துக் காணப்படுவதால் முகமாலைக்கு அப்பால் அதிகூடிய வேகத்தில் வாகனங்களைச் செலுத்த வேண்டாமென தமிழீழ காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

இவ்விதியை மீறும் வாகனச் சாரதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென காவல்துறை எச்சரிக்கைசெய்துள்ளது

இதேவேளை முகமாலைக்கு அப்பால் வீதியும்,பாலங்களும் கடுஞ் சேதமடைந்துள்ளமையும்இங்கு குறிப்பிடத்தக்கது. (ஷ-111)


### களஞ்சியப் பொறுப்பாளர் தேவை

கணக்கியல் அறிவும், களஞ்சியப் பொறுப்பாளர் அனுபவமுடைய பெண் தேவை. 07-08-2002-ல் நேரில் வரவும். காலை 9-00 - 12-00 வரையில்

(i) கல்விச் சான்றிதழ்
(ii) அனுபவச் சான்றிதழ்களுடன் சமுகந்தரவும்

The Peninsula Group
127/10, Temple Road,
Nallur

(C-4811)



உ

### வில்லூன்றி புனித தீர்த்தம் ஆடி அமாவாசைப் பெருவிழா

08 - 08 - 2002 வியாழக்கிழமை

● தீர்த்தோற்சவம்

காலை 6-45 மணி வசந்தமண்டப பூஜை
காலை 8-00 மணி தீர்த்த வாரி
காலை 9-00 மணி முதல் 10-00 மணி வரை தீர்த்தக் கட்டத்தில் அனுக்கிரகம்
காலை 10 மணி சுவாமி கோவிலுக்கு எழுந்தருளல்

● பிதிர்க் கடன்கள்

காலை 8-15 மணிக்கு தீர்த்தவாரி முடிந்தவுடன் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தர்மபரிபாலன சபை, வில்லூன்றி தேவஸ்தானம்
பரிபாலனசபை, வில்லூன்றி புனிததீர்த்தம்

(5776)



### யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

### பதவி வெற்றிடம் அலுவலக உதவியாளர் (PEON)

யாழ்ப்பாணம் வணிகர்கழகப் பணிமனையில் அலுவலக உதவியாளருக்கான (Peon) வெற்றிடம் ஒன்று நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பதாரி இருபத்தைந்து(25) வயதிற்கு மேற்பட்டவராகவும் குறைந்தது க.பொ.த.சாதாரண தரம் சித்திபெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.விண்ணப்பங்கள் 10.08 2000ற்கு முன்னர் நேரடியாகவோ தபால்மூலமாகவோ கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

165,மானிப்பாய் வீதி.
யாழ்ப்பாணம்.

(கி-4810


# பருத்தித்துறையில் அடையாளஅட்டை பதிவு இன்றும் நடைமுறையில்

(மந்திகை)

பருத்தித்துறை 524வது பிரிகேட் காரியாலயத்தினுள் அமைந்துள்ள வீடுகள் இந்து கிறிஸ்தவஆலயங்கள் இறங்குதுறையில் கடமையாற்றும் ஊழியர்கள் செல்லும்போது நுழைவாயில்களில்அடையாள அட்டைகளைப் பதிவுசெய்த பின்பே செல்லவேண்டிய அவலநிலை உள்ளதாக சம்பந்தப்பட்டோர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

கொட்டடிபிள்ளையார்ஆலயம்,கோட்டுவாசம் அம்மன் கோவில் மற்றும் பாடசாலைகள் ,என்பனஇம்முகாமின்எல்லைப்பரப்புள் அமைந்துள்ளதால் கல்விசார் உத்தியோகத்தர்கள் தவிர ஏனையோர் அப்பகுதிக்கு செல்லும்போதும் அங்கிருந்து வெளியேறும் போதும் அடையாளஅட்டையை ஒப்படைத்து விட்டுச் செல்லவேண்டிய அவலநிலையிலேயே உள்ளனர்.

அரசு விடுதலைப்புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு பலமாதங்கள் சென்ற பின்பும் இத்தகையநிலைமை தொடர்வது குறித்து பலரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (க-25)

# இராணுவ காப்பரண்களுக்கு ஒருலட்சம்பனைமரம்தறிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில் 60ஆயிரத்திற்குமேற்பட்ட பனை மரங்களை சிறிலங்காஇராணுவம் தனதுஇராணுவத்தேவைகளுக்காக தறித்தெடுத்துள்ளதாக பனைஅபிவிருத்திச் சபைத் தலைவர் பி.சிவபாதம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும்தெரிவிக்கையில் கூறியிருப்பதாவது.

சிறிலங்காஇராணுவம் தனது பாதுகாப்புக்கு இராணுவ காவல்அரண்கள் அமைப்பதற்கென யாழ்குடாநாட்டில் 60ஆயிரம் பனைமரங்களையும் மன்னாரில் 35ஆயிரத்திற்கும் அதிகமான பனைமரங்களையும் தறித்துஎடுத்துள்ளனர்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டபின்னரும் கூட நாகர்கோவிலில் இருந்து கிளாலிவரையான பகுதிகளில் பெருந்திரளான மரங்களை இராணுவம் தறித்துள்ளது என்றும் பனை அபிவிருத்திச் சபைத்தலைவர் தெரிவித்துள்ளார். (ம)

## 30ஆயிரம்

அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நிவாரணம் வழங்குவதன் மூலம்வறுமையை முற்றாக ஒழித்துவிட முடியாது என்றும் அவர்கூறியுள்ளார். (த)

## நிறைவேற்று

வேண்டியநிலைமை ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி மேலும்கூறியுள்ளார்.

இதேவேளை தற்பொழுது நாட்டில் நடைமுறையில் இருக்கும் 2ம்குடியரசு அரசியல் யாப்பில் ஜனாதிபதிக்கு எல்லையற்றவகையில் நிறைவேற்று அதிகாரம் இருப்பதாகவும் அதனை ஜனாதிபதி தற்பொழுது பயன்படுத்தி அரசஇயந்திரத்தை முடக்கி ஆட்சியைபறிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்துவெளியிட்டுள்ளனர். (இ)

## நல்லிணக்க-

லஷ்மன் கதிர்காமரை பிரதமராக்கும் திட்டமொன்று அம்பலத்துக்கு வந்துள்ளதாக இலங்கை வானொலி தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

லஷ்மன் கதிர் காமரைப் பிரதமராக்குவதன் மூலம் சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்த முடியுமென்று கருதுவதாகவும் இலங்கை வானொலி தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளது.

அரசை மாற்றும் திட்டம் அம்பலத்துக்கு வந்ததை அடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அவசர அவசரமாக அமைச்சரவையைக் கூட்டி விசேட கலந்துரையாடல் ஒன்றை நேற்று நடத்தியுள்ளார்.

இன்று முப்படைத் தளபதிகளையும், பொலிஸ்மா அதிபரையும் பிரதமர் சந்திக்கவுள்ளார்

இது இவ்வாறு இருக்க அரசுக்கு தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடி தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நேற்று இரவு நீண்ட நேரம் நடைபெற்ற போதும் இச் செய்தி எழுதும் வரை எந்த விதமான முடிவும் எட்டப்படாத நிலையில் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர். (வ)

# யாழ்.மத்தியின் முன்னணிப்பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்று முடிந்த க.பொ.த உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று இணையத் தளத்தில் வெளியிடப்பட்டன.

இதன்படி யாழ்மத்தியகல்லூரியின் முன்னணிப் பெறுபேறுகள் வருமாறு வர்த்தகம் 3ஏ-ஒருவர்(ப.ஜெகதீஸ்வரன்)கணிதம் 2ஏ,பி இருவர் (யோ.தனஞ்செயன், சே.ஜெசன்)3பி ஒருவர்,ஏ2பி 4பேர் 2பி சி8பேர்,பி2சி 15பேர் (த)

# மீன்பிடி டிப்ளோமா ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தீவக மற்றும் யாழ் கல்வி வலயங்களுக்குட்பட்ட மீன்பிடியியல் டிப்ளோமா ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ் கல்வி வலயத்திலும், வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட மீன்பிடியியல் டிப்புளோமா ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன்கிழமை மு.ப 10 மணிக்கு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் கல்வி வலயத்திலும் இடம் பெறவுள்ளதாக மீன்பிடியியல் கற்கை நெறி இணைப்பாளர் அறிவித்துள்ளார். (த)

# விளம்பரப் பலகை எரிந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் பழைய பிரதான நுழைவாயிலருகே வைக்கப்பட்டிருந்த வர்த்தகக் கண்காட்சி தொடர்பான விளம்பரப் பலகை ஒன்று நேற்று இரவு எரிந்து நாசமாகியது.

இரவு 9-30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தை அடுத்து ஸ்தலதிற்குவிரைந்த தீயணைப்புப் படையினர் தீமேலும் பரவவிடாமல்தமது கட்டுப்பாட்டின்கீழ்கொண்டு வந்தனர். (த)

# ஸ்ரீ. சு.க-ஐ.தே.க இன்று கூடுகின்றது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றின் நிறைவேற்றுக்குழுக்கள் இன்று தனித்தனியாக அவசர அவசரமாகக்கூடவுள்ளனர்.

ஜனாதிபதிசந்திரிக்காகுமாரதுங்காவுக்கும் பிரதமர்ரணில் மற்றும் அமைச்சர்களுக்கும் இடையே எழுந்துள்ள முறுகல் நிலையை அடுத்து ஏற்பட்டுள்ள அரசியல்நெருக்கடி தொடர்பாக ஆராய்வதற்கே இருகட்சிகளினதும் நிறைவேற்றுக்குழுக்கள் அவசரமாக கூடுகின்றன . (ம)

## புலிகளின்

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் புலிகளின் தலைவர் பிரபாகரனை நேரடியாக சந்தித்து பேச்சு நடத்த முன்னர் விருப்பம் தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## அன்ரன்

வார்த்தைகள் தொடர்பாக நோர்வே வெளிவிவகார அமைச்சருடன் ஆராயவிருப்பதாகவும் அதன் பின்னரே அவர் வன்னிக்கு வரவிருப்பதாகவும் தெரியவருகிறது. (ம)

## யாழ்: பல்கலை

இருந்து யுனெஸ்கோ தகவல் நிலையத்தினர் இம்மாதம் 8ம் திகதி யாழ். பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இப்பயிற்சிநிறுவனம் யாழ்நகர மண்டபத்தில் (சிற்றி ஹோல்) அமைக்கப்படஉள்ளதாக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார். (ம)

## தமிழக முதல்வர் ஜெயலலிதா தமிழரை ஆதரிப்பவர்களை அச்சுறுத்தி வருகிறார்

### சங்கானை க- கோ- மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

எமது தமிழினம் அடக்கி யொடுக்கப்பட்டு துன்பப்படும் இவ்வேளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். அத்தகைய நிலையை உலகின் பார்வைக்குக் கொண்டு வந்தவர்களில் வை. கோ வும், பழ. நெடுமாறனும் அடங்குவர். இது ஒவ்வொரு தமிழனுக்குமுரிய கடமையாகும். இதனையே இவர்களும் செய்திருக்கிறார்கள். இதில் என்ன தவறிருக்கிறது? தேசியம், சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டை முன்வைத்து சமாதான சகவாழ்வு வாழ முனைந்திருக்கும் இவ்வேளையில் எமது போராட்டத்தை இழிவுபடுத்தும் நோக்கோடும் எம்மை ஆதரிப்போரை அச்சுறுத்தும் நோக்கோடும் செயற்பட்டுவருகிறார் செல்வி ஜெயலலிதா.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளரைத் தொடர்ந்து பொடா தடைச் சட்டத்தின் கீழ் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறனும் கைது செய்யப்பட்டிருப்பது குறித்து சங்கானைக் கல்விக் கோட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

ஈழத் தமிழருக்காகத் தம்மை அர்ப்பணித்துச் செயலாற்றியோரான தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறனும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலர் வை. கோபாலசாமியும் கைது செய்யப்பட்டதை எமது மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

அடக்குமுறை ஆட்சியின் கீழ் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, தன்னுடைய தனிப்பட்ட கோபத்தை அவர்கள் மேல் காட்டுகிறார். ஓர் இனம்அடக்கிஒடுக்கப்பட்டால் அதனை உடைத்து தனது இனத்தை வாழவைக்க நினைப்பது யதார்த்தமானது.

முன்னைய தலைவர்களில் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஊன்று சக்தியாக நின்றவர். அவர் வழி நின்று செயற்படும் முதலமைச்சர் எமது கொள்கையை ஏற்று மதித்து நடப்பார் என்று நம்பினோம். ஆனால் மாறாகச் செயற்படுகின்றார். மொத்த தமிழ்ச் சமூகத்திற்கும் களங்கம் ஏற்படுத்துகிறார் என்றுள்ளது. (உ)

## ஐ.தே.முன்னணியும் ஜனாதிபதியும் பரஸ்பரம் உறவை பேணவேண்டும்

### பட்டி வீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதெனின் ஐக்கியதேசிய முன்னணி தலைமையிலான அரசும்ஜனாதிபதியும் பரஸ்பரம்நெருக்கமான உறவுகளை பேணிச் செயற்பட வேண்டுமென லங்கா சமசமாசக் கட்சியின் தலைவர்பட்டிவீரக்கோன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கும் இடையிலான தொடர்புகள் துண்டிக்கப்படுவதனால் சமாதான முயற்சிகளுக்குமுட்டுக்கட்டை ஏற்படுகின்றது.

கடந்த கால ஆட்சியின் போது கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் புகைப்படக்கருவிகள் ஆகியவற்றின் இறக்குமதிகள் குறித்து தற்போதைய அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் நல்லதுஅல்ல.

ஊழல்கள் ஒழுங்கீனங்கள் ஏற்பட்டால் அதனை விசாரணை செய்வதற்கு சுயாதீன ஆணைக்குழு ஒன்றை அரசு நியமிக்க வேண்டும் அவ்வாறின்றி ஊடகங்கள் மூலம் பிரச்சினைகளை எழுப்புவதால் இருதரப்பினருக்கும் இடையே மேலும் பிரச்சினைகளே அதிகரிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த கால ஆட்சியின் போது இடம்பெற்ற ஊழல் குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக பொலிஸ்விசாரணைகள் எவ்வித பயனையும் தராது என்பதனால் ஜனாதிபதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது எனவும்சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் இணக்கப்பாடு எதுவும் இல்லையென்பதால் இது குறித்து அக்கட்சிக்குள் இணக்கப்பாடு ஏற்படுவது அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (க-8)

## தென்மராட்சியில் முதல் கட்டமாக 195 வீடுகள் நிர்மாணிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்தத்தின் போது, சேதமடைந்த வீடுகளில்முதற்கட்டமாக தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 195 வீடுகள் நிர்மாணிக்கப் படவுள்ளன.

இதன் பிரகாரம் கல்வயல் கிராமசேவையாளர் பிரிவில் 45 வீடுகளும், நுணாவில் மத்தியில் 30 வீடுகளும் மட்டுவில் கிழக்கில் 60 வீடுகளும் நுணாவில் மேற்கில் 45 வீடுகளும் சாவகச்சேரி நகரப்பகுதியில் 15 வீடுகளுமாக 195 வீடுகள் அமைக்கப்படும்.

ஒவ்வொரு வீட்டின் பெறுமதி 50 ஆயிரம் ரூபாவாக இருக்கும் எனவும் இதற்குரிய கட்டடப் பொருட்களை தென்மராட்சி பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாக வழங்கப்படும் என அறியப்படுகின்றது.

ஆசிய அபிவிருத்திவங்கி தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் 500வீடுகளையும் 50 கிணறுகளையும் அமைப்பதற்கு நிதியுதவி அளிக்கச் சம்மதம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, முதற்கட்டமாக அமைக்கப்படவுள்ள 200 வீடுகளின் பயனாளிகளை அவ்வப்பகுதி கிராம சேவையாளர்கள் சேதங்களின் அடிப்படையில் தெரிவு செய்துள்ளனர்.

இப்பயனாளிகளுக்கான கூட்டமொன்று பிரதேச செயலர் செ. ஸ்ரீ நிவாசன் இன்று காலை நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது. (க-77)

## தனக்குத்தானே உளியால் குத்தியவர் ஆஸ்பத்திரியில்

(மந்திகை)

தனது வயிற்றில் உளியால் குத்திய குடும்பஸ்தர் ஒருவர் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் சரவெட்டிப் பகுதியில் அண்மையில் இடம் பெற்றது.

பிரஸ்தாப நபர் மதுபானம் பருக ஆரம்பித்ததை அடுத்து அவரமைத்துனர் ஆலோசனைகூறமுற்பட்டதையடுத்து இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்தே இச் சம்பவம் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (க-23)

## கண்ணாடி வழங்கல்

வலிமேற்கு பிரதேச சபையின் அனுசரணையுடன் மானியவிலையில் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு வலிமேற்கு பிரதேசசபை காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. (க-3)

## இன்று கலந்துரையாடல்

வன்னியிலிருந்து சண்டிலிப்பாய் J/142 பிரிவில் மீளக் குடியமர்ந்தோருக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9.30 மணியளவில் மேற்படி கிராம அலுவலர் காரியாலயத்தில் இடம்பெற உள்ளது.

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினர் இக்கலந்துரையாடலை ஏற்பாடு செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது (க-260)

## பச்சிலைப்பள்ளி மக்கள் மீளக்குடியமர்கின்றனர்

(கல்வயல்)

பச்சிலைப்பள்ளி மற்றும் பளைப்பகுதி மக்கள் படிப்படியாக மீளக்குடியேறி வருகின்றனர்.

தற்காலிக குடிசைகளை அமைத்து குடியமரும் இம் மக்கள் குடிசைகளை வேய்வதற்குத் தேவையான கிடுகுகளைப் பெறுவதில் பெருஞ் சிரமங்களை எதிர் நோக்குவதாகக் கூறப்படுகிறது.

இம் மக்கள் கால்நடை வளர்ப்பு மற்றும் வ்வசாய நடவடிக்கைகளிலும்ஈடுபட்டு வருகின்றனர்.

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்றும் அங்கு செயற்படத் தொடங்கியுள்ளது. (ஷ-111)

## தேசிய உற்பத்திக்கொள்கை அடுத்த மாதம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தேசியஉற்பத்திக்கொள்கை சம்பந்தமான நகல் சட்ட மூலம்பிரதமர்ரணில்விக்கிரமசிங்காவினால் அமைச்சரவையில் அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அரச நிறுவனங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு இந்த சட்ட மூலம் வழிவகுக்கும் என தொழில்வேலை வாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 'உற்பத்தியும் தரப்படுத்தலும்' சம்பந்தமான 3வது தேசியமாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (க-8)

## இரவு வேளைகளில் விநோத ஒலிகளை எழுப்பும் இளசுகள்

### கோப்பாய் மக்கள் புகார்

(கோப்பாய்)

இரவுவேளைகளில்வீதியால் பயணம்செய்யும் இளைஞர் கோஷ்டியினர் விநோத ஒலிகளை எழுப்பியவாறு பெரும் அட்டகாசம்புரியும் சம்பவங்கள் கோப்பாய் பகுதிகளில் தினசரி இடம்பெற்று வருவதாக அப்பகுதி பொதுமக்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப் படுகிறது.

தகாதவார்த்தைகளை இக் கோஷ்டியினர் பேசுவதாகவும் மரணஓலங்களை எழுப்பியவாறு செல்வதால் வீதிககு அருகாமையில் வசிப்போர் பெரும் இடைஞ்சலை எதிர் நோக்குவதாகவும், நிம்மதியாக நித்திரைசெய்ய முடியாதிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (க-79)

### திருமலையில் குடியமர்வோரின்

## வசதிகளைப் பூர்த்தி செய்ய ரூ.35 இலட்சம் கையளிப்பு

(திருகோணமலை)

திருகோணமலைமாவட்டத்தில் மீளக்குடியமரும்மக்களின் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக 35 இலட்சம் ரூபாவிற்கான காசோலையை துறைமுக கப்பல் போக்குவரத்து அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தலைவருமான ரவூப் ஹக்கீம் திருமலை மாவட்ட செயலாளர்நெலும் தெனியவிடம் கையளித்துள்ளார்.

இவ்வைபவம் நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து திருமலை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் சுமார் 500க்கும் அதிகமான குடும்பங்கள் மீளக் குடியேறியுள்ளன.

இவர்களுக்கு தலா36ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதாகவும்,அதேவேளை இன்னும் 2 ஆயிரம் குடும்பங்கள் திருமலை மாவட்டத்தில் மீளக் குடியேற்றப்படவுள்ளனர் எனவும் அமைச்சர் மாவட்ட செயலகத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

வடக்கு பிரதேசத்தில் மீளக் குடியமர்வோருக்கு அரசு 60 ஆயிரம் ரூபா வீதம் வழங்கி வருவது போன்று, கிழக்குப் பிரதேசத்திலும் அத்தகைய தொகையினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அங்கு அவர் மேலும் தெரிவித்தார். (ஷ-8)

### பிந்துனுவெவ புனர்வாழ்வு நிலைய

## பொறுப்பாளருக்கு நட்டஈடு நீதிமன்று உத்தரவு

(கொழும்பு)

பிந்துனுவெவ புனர்வாழ்வு நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு 1 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா நட்டஈடாக வழங்கப்பட வேண்டுமென்று மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அவரை சட்டத்திற்கு மாறாக தடுத்து வைத்ததினால் மனுதாரரின் அடிப்படையுரிமை மீறப்பட்டுள்ளதுஎன்று நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் 60,000 ரூபாவும், நான்காவது பிரதிவாதியான பிரதி பொலிஸ்மா அதிபர் புண்ணிய டீ. சில்வா தனது சொந்த பணத்திலிருந்து 60,000 ரூபாவும் 1ம், 2ம், 3ம் பிரதிவாதிகளிடமிருந்து தலா 10,000 ரூபாவும், செலவுதொகையாக அரசாங்கம் மேலும் 20,000 ரூபாவும் வழங்கவேண்டுமென நீதியரசர்கள் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளனர்.

மனுதாரரான அபயரத்ன பண்டா, எதிர்மனுதாரர்களாக சி.ஐ.டி. பணிப்பாளர் கீர்த்தி கஜநாயக்க, இன்ஸ்பெக்டர் வின்டன், பிரதிப் பொலிஸ்மாஅதிபர் புண்ணிய டீ சில்வா ஆகியோரை குறிப்பிட்டிருந்தார். (க)

## ஆங்கில வள நிலையம் விருத்தி செய்யப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட ஆங்கில வள நிலையத்தை விருத்தி செய்வதற்கு வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு உறுதியளித்துள்ளது.

இந்நிலையத்திற்கென கணனிகள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளதை அடுத்து இதுவிரைவில் கணனிமயப்படுத்தப்படவுள்ளது.

இவ் அபிவிருத்தி வேலைகள் மூன்று மாத காலத்திற்குள் பூர்த்தி செய்யப்படுமெனவும் ஆசிரியர்கள் இந்நிலையத்திற்குச் சென்று ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் வடக்கு-கிழக்கு மாகாண ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ஞான. குமாரசாமி தெரிவித்தார். (ஷ-19)

# வடக்கு - கிழக்கின் யுத்த அவலங்கள் குறித்து

# தென்பகுதி கல்விமான்களுக்கு எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வடக்கு-கிழக்கில் நீண்ட காலமாக இடம்பெற்ற யுத்தத்தின் தாக்கங்கள் அழிவுகள் பற்றிய பூரணமான விளக்கங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து சென்ற கல்விமான்களால் தென்னிலங்கை கல்விமான்களுக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

கொழும்பு இலங்கைமன்றக் கல்லூரியில் அண்மையில் கடந்தமாத பிற்பகுதியில் இடம்பெற்ற கல்வியாளரின் மாநாட்டிலேயே இவ்வாறான விளக்கம் அளிக்கப்பட்டது.

அரசியல், அரசியல் யாப்பு, ஜனநாயகம் பற்றிய ஓர் அறிக்கை பேராசிரியர் சி. க. சிற்றம்பலத்தினால் தமிழ்ப் பிரதேசத்தில் சமூக, பொருளாதார, மனிதஉரிமைகள் போரினால்எவ்வாறுபாதிகப்பட்டுள்ளனஎன்பதுபற்றிச் சு.இராசதுரையினாலும் விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டன.

இதேபோன்றுசமாதானநடவடிக்கைகள், யுத்த நிறுத்தம் மற்றும் பேச்சு வார்த்தைகள் தொடர்பான அறிக்கைஒன்று பிதா. ஜி. புலேந்திரனால் சமர்ப்பிககப்பட்டதுதெற்குப் பல்கலைக்கழகத்தில் இருந்து வந்த ஒரு சில கல்விமான்களின் தப்பபிப்பிராயங்களைப் போக்கி அவர்களுக்கு யதார்த்த நிலையை தெளிவுபடுத்தத் தமக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததாக யாழ் பல்கலைக்கழகக் கல்விமான்கள் கூறுகிறார்கள்.

இக்குழுவில் இடம் பெற்ற பேராசிரியர் சபா.ஜெயராசா பேராசிரியர் இரா சிவச்சந்திரன், கலாநிதி க. சிவபாலன், வி.பி.சிவநாதன், க.சிவராசா மற்றும் திருமதி.ரோ.பரராசசிங்கம் அனைவரும் குழுநிலை கலந்துரையாடலின் போது தமிழ்ப் பிரதேசத்தில்போரின் தாக்கங்கள் பற்றியும், சமாதானத்தின் அவசியம் பற்றியும் தெற்கு ப் பல்கலைக் கழகக் கல்விமான்களுக்கு விளக்கிக்கூறினார்கள்.

தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளைச் சிங்கள மக்களிடமிருந்து பெற வேண்டிய அவசியம் இல்லை எனக் கூறும் ஒரு சில தெற்குப் பல்கலைக்கழகக் கல்விமான்களுடன் நடத்திய கலந்துரையாடல் மறக்க முடியாத நிகழ்ச்சியாகும் எனவும் இக் கல்விமான்கள் தெரிவித்துள்ளனர்.

இறுதியில் எதுவித கருத்து வேறுபாடும் இன்றிச் சகல கல்விமான்களாலும் ஒருமித்த குரலில் நிரந்தரச் சமாதானத்திற்கான ஒரு பிரகடனம் தயாரிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இக்கல்விமான்களின் குழு தொடர்ந்தும் நிரந்தர சமாதானத்திற்காக தமதுபங்களிப்பைச் செய்வதெனவும் அதற்கான செயற்திட்டங்கள் தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்துவதெனவும், தீர்மானிக்கப்பட்டது.

தற்போது நடை முறையிலிருக்கும் போர் நிறுத்தம்முற்றான சமாதானமல்லஇது ஒரு ஆரம்பம். எப்படியிருப்பினும் தற்பொழுது நிலவும் எதிர்மறையான சமாதானத்தை நேர்நிலையான சமாதானமாக்குவதற்கு இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவேண்டும்.

தாமதம் இன்றி சரியான தயாரிப்புடனும் கூடிய அரசியல் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறும் எதிர்க்கட்சியுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்துமாறும் அரசாங்கக் கட்சியையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் வேண்டுகின்றோம்.

ஜனநாயக ரீதியிலமைந்த உரையாடல்கள், கலந்துரையாடல்கள் தொடர்பாக சமாந்தரமான செயல்முறையை ஆரம்பிப்பதன் மூலம் சமாதானம், இன இணக்கப்பாடு என்பவற்றைக் கருதி பொதுவான அணுகுமுறையொன்றைகடைப்பிடிக்குமாறு சகல சமுதாயங்களையும் சேர்ந்த சகல அரசியல் கட்சிகளையும் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறான பல்வேறு காப்பட்ட தீர்மானங்கள் அம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன (க)

## இன்று ஒரு நாள் கருத்தரங்கு

(ஆனைக்கோட்டை)

விவசாய புள்ளி விபர திணைக்களத்தால் வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக விவசாயிகளின் புள்ளி விபரத்தை திரட்டும் நோக்கில் இன்று திங்கட் கிழமை காலை 9.00-4.00 மணி வரையும் சண்டிலிப்பாய் பிரிவு கிராம சேவகருக்கு ஒரு நாள் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இதன் மூலம் விவசாய நிலங்கள் பற்றியும், தற்சமயம் பயன்படுத்தப்படும் நிலத்தின் பரப்பளவு பற்றியும் அறிய முடிவதுடன் நிவாரண நடவடிக்கைகளைஎதிர்காலத்தில் செய்யமுடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் என். வேதநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்என தெரியவருகின்றது. (க-201)

## ஆடி அமாவாசை விரதம்

(கல்வயல்)

இந்துக்களின் முக்கிய விரதங்களில் ஒன்றான ஆடி அமாவாசை எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை அனுட்டிக்கப்படவுள்ளது.

இம்முறை கீரிமலை புனித தீர்த்தக்கரைக்குச் சென்று பிதிர்க்கடன்களை நிறைவேற்ற மக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வில்லூன்றி தீர்த்தக்கேணியிலும் பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தந்தையை இழந்தோர் அவர்களது சிரார்த்த தினத்தை இத்தினத்தில் விரதமாக அனுஷ்டிப்பது வழக்கமாகும்.

இதேவேளை சில வணிகர் கழகங்களும் இத்தினத்தை விடுமுறை தினமாக அறிவித்துள்ளன. (ஷ-111)

# தொழிலாளர் தமது உரிமையைபெற சட்ட அறிவு அவசியமாகும்

### யாழ். மா தொ.தி. பிரதி. பணிப்பாளர் தெரிவிப்பு

(ஈச்சமோட்டை)

தொழிலாளர்கள் தமது நலன், பாதுகாப்பு சட்ட அறிவினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் தமதுஉரிமைகளை வென்றெடுக்கலாம்.

இவ்வாறு யாழ். மாவட்ட தொழில் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் ஆர்.தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அனுசரணையுடன் நடத்தப்பட்ட தொழிலாளர் கல்வி மேம்பாட்டு வேலைத் திட்டம் யாழ். மாவட்டதேசிய இளைஞர் சேவைகள் மன்ற கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தொழிற் சங்கங்கள் பல யாழ்ப்பாணத்தில் உள்ள போதும் அவற்றில் பெரும்பாலனவை சட்ட ரீதியான பதிவுகளை மேற்கொள்ளாதிருப்பதனால் அவர்களால் ஊழியர்களுக்கான சட்ட ரீதியான போராட்டங்களிலோ தீர்வு காணும் வழிகளிலோ ஈடுபட முடியாதுள்ளது.

மேலும் பல நிறுவன, தனியார் வியாபாரஸ்தல உரிமையாளர்கள் ஊழியர்களின் நலனிலோ, பாதுகாப்பிலோ அக்கறை இன்றிச் செயற்படுவதோடு சட்டங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றனர். குறிப்பாக, EPF, ETF செலுத்தாதும் உரிய சம்பளம் வழங்காதும் உள்ளனர்.

சட்டரீதியாக இப் பிரச்சினையை அணுகுவதற்கு முன்வருபவர்கள முறைப்பாடுகளை எமக்கோ, தொழிலாளர் நீதிமன்றங்களிலோ தெரிவிக்க வேண்டும்.

மனித வளத்தின் பாதுகாப்பையும் உச்சப் பயனையும் பெற்று யாவரும் சிறப்புற இயங்க வேண்டுமாயின் தொழிலாளர்சட்டத் திட்டங்களை யாவரும் அறிந்து வைத்திருப்பதோடு நீதியோடு செயற்படுவதும் பாதிக்கப்படும்போது அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதும்அவசியமாகும் என்றார். (க-69)

## இலங்கையின்

விதைகளின் முளைதிறன் 35 முதல் 50 வீதம் வரையாகும். எனவே யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில்அழிந்த 12 இலட்சம் பனை மரங்களுக்கு ஈடாக பனம் விதை நடுகைமேற் கொள்ளவேண்டியிருப்பின் 30 இலட்சம் பனம் விதைகள் நடுகைக்குட்படுத்துதல் வேண்டும். அவ்வளவு தொகையான பனம்விதையை இவ்வருடம் நடுகை செய்வதற்கு பெறமுடியாது விடினும் குறித்த 12இலட்சம் பனம் விதைகளையாகுதல் நாம் நடுகைசெய்வது அவசியமாகும்

அதற்காக வடகிழக்குமாகாணத்தில் எமது துறைசார் நிறுவனங்கள் அனைத்தும் காலத்தின் தேவையறிந்து திட்டமிட்டுசெயற்படுவதுடன்இங்கு வாழுகின்ற அனைத்து மக்களும் பனம் விதை நடுகைக்கு தங்களால் ஆகக்கூடிய ஒத்துழைப்பினை வழங்கி பனம் விதையை நாட்டி எதிர்கால சந்ததிக்கு மாசற்ற சூழலையும், சிறந்த மழை வீழ்ச்சியையும் ஏற்படுத்துவதுடன் வட. கிழககுமாகாணத்தில்கிராமிய பொருளாதார மேம்பாட்டிற்கு வழி செய்வதுடன் எதிர்காலச் சந்ததிக்கான ஊட்டச் சத்து மிக்க உணவுப் பொருட்களையும் உறைவிடப் பயன்பாட்டு பொருட்களையும் பெற்று தன்னிறைவு அடைந்து எமது தாயகத்திலிருந்துபனை வள உற்பத்திகளைவெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துஅன்னியச் செலாவணிகளைமீதப்படுத்தக்கூடிய தேசிய மூலவளமான பனை வளத்தை முறையாக வளர்த்தெடுப்பதற்கு அனைவரும் உறுதியுடன் இவ்வருடம் செயற்படுவோம்.

'பனை வளம் பெருக்கி
பயன் பல பெற்று
மனை வளம் சிறக்க
மகிழ்வுடன் வாழ்வோம்.'

## இன்று நூல் வெளியீடு

(திருநெல்வேலி)

ஊடகவியலாளர் கனக ரவியின் 'இந்தமழைஓயாதோ' கவிதைத்தொகுதி நூல் அறிமுகவிழா இன்று பி.ப.3.00 மணிக்கு யாழ். பலநோக்கு கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை யாழ். மாவட்ட பதில் நீதிபதி மு திருநாவுக்கரசுவும், நூல் அறிமுக வுரையை கவிஞர் முருகையனும் நிகழ்த்தவுள்ளனர். (க-43)

# பொறுமையைச் சோதித்தால் போராட்டத்தில் ஈடுபடுவோம்

### வடமராட்சிமாணவர் ஒன்றியம் எச்சரிக்கை

(மந்திகை)

புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலாக்கப்பட்டு 160 நாட்கள் பூர்த்தி அடைந்துள்ள நிலையில் வடமராட்சி பிரதேசத்திலுள்ள அனைத்துபாடசாலைகளிலிருந்தும் இராணுவத்தினர் உடனடியாக வெளியேற வேண்டும், எமது பொறுமையினை இனியும்சோதனையிட முயன்றால் நாம் போராட்டத்தில் குறிப்பதனைத் தவிர வேறுஎந்தவழிவகையும்கிடையாது என்பதனை தெளிவுபடுத்துகின்றோம்;

வடமராட்சி மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

கல்வி என்பது தமிழ் மாணவர்களை பொறுத்த வரையில் அது ஒரு கவசம் மக்களது இயல்பு வாழ்க்கையின் ஒரு அத்திபாரம் அதுமட்டுமல்ல அடிப்படை உரிமை இவற்றினை மறுத்து பாடசாலைகளை இராணுவ முகாம்களாகவும் அதனை சுற்றிமுட்கம்பி வேலிகள்அமைப்பதும் மாணவர்களின் உரிமையினைபறித்தெடுக்கும் செயலாகும்.

உயர்பாதுகாப்பு வலயம் எனக் கூறிக்கொண்டுபாடசாலைகளிலும், பொதுமக்களின் வாழ்விடங்களிலும், வணக்கஸ்தலங்களிலும் படையினர் தங்கியிருப்பதனை மாணவர் சமுதாயம் இனி ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.

பாடசாலைகளில் தொடர்ந்துஇராணுவத்தினர் தங்கியிருப்பது எமது கல்வி செயற்பாட்டினை சீர்குலைக்கும் நடவடிக்கை கல்விகற்பதற்கு கட்டிடங்கள் மட்டும் போதாது கற்பதற்கும் கற்பிப்பதற்கும் நல்லதொரு புறச் சூழல் அவசியம் என்பதனை வலியுறுத்துகின்றோம்.

ஆயுதம்தாங்கிய ராணுவத்தினர் பாடசாலைகளிலும், பாடசாலைப்புறச் சூழலிலும் நிலைகொண்டு இருக்கும் வேளை அதன் மத்தியிலிருந்து கொண்டு கற்றலில் ஈடுபட முடியுமா? ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடமுடியுமா? எந்த வேளையில் என்ன நடக்குமோ என்ற பாதுகாப்பற்ற இடத்தில் அச்சவுணர்வுடன் இருந்து கற்பது எப்படி? என வினா வெழுப்பப்பட்டுள்ளது. (உ-23)

# இவ் ஆண்டு இறுதியில் ரணில்- பிரபா பேச்சு

### ஆங்கில வாரப் பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரனுக்குமிடையே நேரடியான பேச்சுக்கள் இவ்வாண்டின் இறுதி வரையில் நடைபெறும் என்று எதிர்பார்ப்பதாக புதிதாக வந்துள்ளஆங்கில வாரப் பத்திரிகை நோத் ஈஸ்ரேன் ஹெறால்ட் தெரிவித்துள்ளது. இதற்கான அடிப்படை விவகாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆலோசகரும், தத்துவார்த்த ஆசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இது குறித்து கருத்து வெளியிடுகையில் இவ்விவகாரம் பற்றி வேண்டுகோள் விடுக்கப்பட்டால் சாதகமாக பரிசீலிக்கப்படும் என்று தமிழ் காடியன் பத்திரிகைக்கு தெரிவித்ததையும் ஆங்கில வாரப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

சமாதானப்பேச்சுகள் நடைபெறும்வரையில்தாக்குப்பிடிக்கக் கூடிய வல்லமை பாராளுமன்றத்திற்கு இல்லை என்ற சாரப்பட அப் பத்திரிகை தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது; (க)

# இயங்காத பாடசாலைகளை இயக்கக் கோரிக்கை

(மந்திகை)

வடமராட்சி கிழக்கில் பொதுமக்கள் மீள குடியமர்ந்து வருவதை அடுத்து அப்பகுதியில் இயங்காதுள்ள மேலும் இரு பாடசாலைகளை மீள இயக்குமாறுபெற்றோர்கள் வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலை, செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்கப்பாடசாலை ஆகிய இரண்டினையுமே மீள இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது, (உ-23)

# இன்று ஒரு தகவல்

## சத்து கெடாத சமையல்

''எங்கள் வீட்டில் எப்போதும் சாப்பாடு நன்றாக இருக்கிறது சார்'' என்று மார் தட்டிச் சொன்னார் ஒருவர், உங்கள்மனைவிசமையல் செய்வதில்அவ்வளவு கெட்டிக்காரியா? என்றுகேட்டேன். இல்லை சார்! சமையல் செய்வதில் நான் அவ்வளவு கெட்டிக்காரன்'' என்று சொல்லி மிகவும் பெருமைப்பட்டுக் கொண்டார், சமையல் யார் வேண்டுமானாலும் செய்யட்டும். அதைப்பற்றிப்பரவாயில்லை. சமையல் ருசியாக இருந்தால் மட்டும் போதாது சமைக்கிறவர்கள் முக்கியமாகத்தெரிந்து வைத்திருக்க வேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால் ''சத்துக் கெடாமல் சமைப்பது எப்படி?, என்பதுதான்

சத்தில்லாத ஆகாரத்தை எவ்வளவு சாப்பிட்டும்என்ன பிரயோசனம்? சரி! காய்கறி உணவில் இருக்கிற சத்துமுழுதாகநமக்குக்கிடைக்கவேண்டுமென்றால் அதற்கு என்ன செய்ய வேண்டும்? முக்கியமான குறிப்புக்களைக்கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று நிபுணர்கள் சொல்கிறார்கள், முதல் குறிப்பு தானியங்களையும் பருப்பு வகைகளையும் அதிகம் தீட்டக் கூடாது, ஏனென்றால் தாவர உணவுகளில் வெளிப் புறப்பகுதியில் தோல் பகுதியில்சத்து அதிகமாக இருக்கிறது.

இரண்டாவது, தகரத்தில் அடைத்த உணவு பதப்படுத்தின உணவுவகைகளைத்தவிர்ப்பதுநல்லது, ஏனென்றால் அவை தயாரிக்கப்படும்சமயத்தில் அவற்றில்லுள்ள விற்றமின் C,B 6 சத்துக்கள்அழிந்துவிடுகின்றன. மூன்றாவது, காய்கறி பழங்கள் எல்லாம் வாங்குகிற பொழுது, நிறத்தைக் கவனித்து வாங்க வேண்டும். நிறம் அடர்த்தியாக இருந்தால் சத்தும் அதிகமாக இருக்கும் வெளுப்பாக உள்ளதைக் காட்டிலும் ஆழமான நிறமாக உள்ளது நன்று. உதாரணத்திற்கு முட்டைக்கோஸ் வெள்ளையாகக் பார்ப்பதற்குப் பளிச்சென்று இருக்கிறது. இன்னொன்று கரும்பச்சையாக இருக்கிறது வெள்ளையாகஉள்ளதைத்தான்எடுக்கத் தோன்றும் ஆனால் அதில் சத்துக் குறைவாகத்தான் இருக்கும். கரும்பச்சையாக உள்ளதில் சத்து அதிகமாக இருக்கும். கரட்டில் மஞ்சளாக உள்ளதை விடச் சிவப்பாக இருப்பது நல்லது.

நான்காவதாக உள்ள குறிப்பு: உணவு தானியங்கள் பருப்பு வகைகளை ஈரமில்லாத பாத்திரத்தில் காற்றுப் புகாத அளவுக்குப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும். அடுத்தபடியாக காய்கறி, பழம் ஆகியவற்றை அவ்வப்போது புதிது புதிதாக வாங்குவது தான் நல்லது. வாங்கி வீட்டிலேயே அதிகநாள் வைத்திருந்து சாப்பிடவேண்டியதில்லை. குளிர்சாதனப் பெட்டியில் கூட 2, 3 நாளைக்கு மேல் வைத்திருந்தால், விற்றமின் 'சி' சத்து பாதிக்குப் பாதி குறையத்தான் செய்யும்.

இன்னொரு முக்கியமான விஷயம், முடிந்த அளவுக்கு காய்கறி, பழங்களின் தோலை ஒதுக்கி எறிந்துவிடாதீர்கள். அவற்றில்தான் சத்து அதிகம். தோலை உரிந்து எறிவதை விட அதைச் சுரண்டிச் சுத்தப்படுத்திக்கொள்வது நல்லது. சிலவற்றில் தோலை அப்புறப்படுத்தியே ஆகவேண்டுமென்றால், முதலில் அப்படியே வேக வைத்துவிட்டு அதன் பின்னர் அதை எடுத்துவிடலாம். முடிந்த அளவுக்கு எது எதைப் பச்சையாகச் சாப்பிட முடியுமோ அவைகளைப் பச்சையாகச் சாப்பிடுங்கள். ஆடு, மாடு சாப்பிடுவதைப் போன்று, ஏனென்றால் தண்ணீரில் வேகவைக்கிறபொழுது நீரில் கரையக்கூடிய விற்றமின் B கூட்டு, C ஆகியவை வீணாகிவிடும். எண்ணெயில் சமைத்தால் அதிற்கரையும் கொழுப்புச் சேர்ந்த விற்றமின்கள் A, D, E, K என்பன வீணாகிவிடும்.

சாப்பிடக்கூடிய காம்பு, தண்டு, இலை ஆகியவற்றை வீணாக்காதீர்கள். உதாரணத்திற்கு காலிஃபிளவர், முட்டைக் கோஸ் என்பவற்றில் நாம் எவற்றை ஒதுக்கி எறிகிறோமோ அவற்றில் நமக்குத் தேவையான நார்ப் பொருள்கள் இருக்கின்றன. அடுத்தபடி சமையல் என்று வரும்பொழுது, ஆவியில் வேக வைப்பது, பிரஷர் குக்கரில் வேக வைப்பது எல்லாம் நல்லது தான். வேகவைக்கும் போது குறைவாகத் தண்ணீர் வைக்க வேண்டும், தண்ணீர் கொதித்த பிறகு காய்கறியைப் போடவேண்டும், பாத்திரத்தை மூடி வைக்கவேண்டும். இதனால் நீரில் கரையும் விற்றமின் இழப்பை முடிந்த அளவுக்கு குறைக்கலாம். இவ்வளவு தான் சார்! சத்துக் கெடாமல் சமைக்கிற தொழில்நுட்பம்.

இதைக் கேட்டுவிட்டு அவர் சொன்னார். எங்கள் வீட்டில் நான்தான் சமைக்கின்றேன் அதைச் சொல்லிக் கொள்வதில் எனக்கு வெட்கமில்லை. நீங்கள் இப்போது சொன்ன இவ்வளவு விஷயத்தையும் கவனத்தில் வைத்துக் கொண்டுதான் சார் 'எங்கள் வீட்டில் நான் சமைக்கிறேன்' என்றார். 'சத்துக்கெடாமல் 'சமைக்கிறதாகச் சொல்கிறீர்கள். ஆனால் உங்களைப் பார்த்தால் சத்துள்ள ஆசாமியாகத் தெரியவில்லையே' என்றேன். அவர் பரிதாபமாக என்னை நிமிர்ந்து பார்த்து, சமைக்கிறதுதான் சார் நான். சாப்பிடுவது நானில்லையே' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வீட்டுத் திட்டத்தை கைவிடும் நிலை

(ஆனைக்கோட்டை)

உயரப்புல பிரதேச மக்களுக்கானவீட்டுத் திட்டத்தை தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உயரப்புலம் ஜே/132 கிராம அலுவலர் பிரிவில் குடியேறவுள்ளவர்களுக் வரும் 100 குடும்பங்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்த அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்தன.

இருந்த போதிலும் பயனாளிகள் சொந்தக் காணி உடையவராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருப்பதாலும் அவர்கள் குடியிருக்கும் காணி உரிமையாளர் அதனை அவர்களுக்கு விற்க மறுப்பதாலும் வீட்டுத் திட்டத்தை முன்னெடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

# உற்சவகால குற்றச் செயல்களை தடுக்க தற்காலிக பொலிஸ் நிலையம்

## ஆலயம் அருகே அமைக்கத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ கால ஒழுங்குகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம்யாழ் மாநகரசபையில் இடம்பெற்றது.

யாழ் மாநகரசபை ஆணையாளர் மற்றும் மாநகர முதல்வர் எஸ் கந்தையன் மற்றும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மாநகரசபை உறுப்பினர்கள் ஆகியோர் பங்குகொண்ட இக் கலந்துரையாடலில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

உற்சவ காலங்களில் 24 மணி நேரமும் ஆலயச் சுற்றாடலில் தொண்டர்கள் மற்றும் பொலிஸார் மாநகர சபைக்காவலர்கள் இணைந்து வீதி ஒழுங்குகளைமேற்கொள்வது.

பூஜை இடம் பெறும் வேளைகளில் எக்காரணம் கொண்டும் வாகனங்கள் ஆலயச்சூழலுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டாது. ஆனால் கோயிலைச் சுற்றியுள்ள வீடுகளின் கடைகளின் உரிமையாளர்கள் மட்டும் காலை 6 மணிமுதல் காலை 8 மணிவரை வாகனங்களில் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் இராணுவம் உட்பட எந்தவொரு அரச சார்பு அரச சார்பற்ற நிறுவனங்கள், ஸ்தாபனங்களின் வாகனங்களும் உள்நுழைய அனுமதிக்கப்படமாட்டாது.

தொண்டர் ஸ்தாபனங்களால் அமைக்கப்படும் வீதித் தடைகளில் 2 பொலிஸாரும் ஒரு மாநகரசபைக் காவலரும் நிறுத்தப்படுவர்.

ஆலயப்பகுதியில் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு விசேட பொலிஸ் நிலையமொன்று திருவிழா முடியும் வரை தற்காலிகமாக அமைக்கப்படும். (உ-19)

# மிதிவெடி அபாயம் மிக்க காணியில் இருந்து பெருமளவு கோடா மீட்பு

(மந்திகை)

மிதிவெடி அபாயம் மிகுந்த பற்றைக்காணியினுள் 7 பீப்பாக்களினுள் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 800 போத்தல் கோடாவை சுன்னாகம் மதுவரிப் பரிசோதகர்கள் மீட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை உரும்பிராய் சிவகுரு வீதிப்பகுதி வீடொன்றில் கசிப்பு உற்பத்தி தொடர்பாகச் சோதனை நடத்தச் சென்ற சுன்னாகம் மதுவரிப் பொறுப்பதிகாரி என். கிருபாகரன் தலைமையிலான குழு, அயலில் கண்ணிவெடி அபாயமிருப்பதாக அறிவிப்புப் பலகை நாட்டப்பட்டிருந்த காணி ஒன்றினுள் மது உற்பத்திக்கான தடயங்களிருப்பதைக்கண்டனர்.

அதன் பேரில் அங்கு சோதனை நடத்தியபோது மேற்படி கோடா மீட்கப்பட்டது. இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இருவருக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (உ-23)

# பாடசாலை பிள்ளைகளுக்கு இலவச சீருடைவிநியோகம் 20இலட்சம் மீற்றர் குறைப்பு

(கொழும்பு)

பாடசாலைப் பிள்ளைகளுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த இலவச சீருடை விநியோகத்தில்சுமார் 20 இலட்சம் மீற்றர் துணி குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இலவச சீருடை விநியோகத்தின் போது சுமார் 100 இலட்சம் மீற்றர்கள் வழங்கப்பட்டதாகவும் அது இப்போது 80 இலட்சம் மீற்றராக குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பாடசாலை மாணவர்களுக்கான சீருடை பொதிக்குள் வைக்கப்படும் ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தியை அகற்றிவிட்டு புராண இதிகாச நற்சிந்தனைகள் பொறிக்கப்பட்ட வாசகங்களை சீருடைப் பொதிக்குள் வைக்குமாறு பிரதமர் ரணில் உத்தரவிட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (ம)

# 'யாழ்' ஏடு வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

'சலனசித்திரம், யாழ்ப்பாணம்' திரைக்கலைச் சங்கம் 'யாழ்' என்ற பெயரில் செய்திமடல் ஒன்றை வெளியிடத் தொடங்கியுள்ளது.

மேற்படி அமைப்பின் அதிகார பூர்வ ஏடான யாழின் ஆகஸ்ட் 1 ஆம் திகதிய வெளியீட்டில் தரமான திரைப்படம் பற்றிய விளக்கம் அமைப்பின் செயற்பாடுகள், மற்றும் கவிதை, கதை என்பனவும் அடங்கியுள்ளன. (ஷ)

# நெடுந்தீவு வீராங்கனை முதலிடம்

(நெடுந்தீவு)

மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியின் போது நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பல்துறை விளையாட்டுக்கழகத்தை சேர்ந்த வீராங்கனை செல்வி ந. கருணகலாதேவி பெண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் முதலாம் இடத்தை பெற்று தங்கப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டார்.

(க-2-250)

# மலேசியக்குழு இலங்கை விஜயம்

(கொழும்பு)

மலேசியாவின் தொழில் அமைச்சர் டேற்றோசெரி எஸ். சாமிவேலு தலைமையிலான 14 பேர்கொண்ட குழுவொன்று இன்று இலங்கைக்கு விஜயம் செய்கின்றது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவின் அழைப்பின் பேரில் இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இங்கு வரும் குழுவினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மற்றும் பல அமைச்சர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். (க-3)

# முசலியில் 100 குடும்பங்கள் நேற்று மீள் குடியேற்றம்

(மன்னார்)

வடமாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களை மீள் குடியமர்த்துவதற்கு வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன் மசூர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இத்திட்டத்திற்கு அமைய நேற்று மன்னார் முசலி பிரதேசத்தில் சுமார் 100 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டன.

புத்தளம் அகதிமுகாம்களிலும், நலன்புரி நிலையங்களிலும் வாழ்ந்து வந்த குடும்பங்களே நேற்று மீள்குடியேற்றப்பட்டதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசாங்கத்தாலும், தமிழீழவிடுதலைப்புலிகளினாலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதை தொடர்ந்து நாட்டின் பல பாகங்களிலும் மக்கள் மீள் குடியேற்றப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-08)

## அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின்

# மைத்துனர் படுகொலை சந்தேக நபர் நீதிமன்றில்

(கொழும்பு)

கோடீஸ்வரரான வர்த்தகரும், பெருந்தோட்ட உரிமையாளரும், அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் மைத்துனருமாகிய வைத்தியலிங்கம் நிரஞ்சனை படுகொலை செய்த சந்தேக நபரை சி. ஐ. டி. பிரிவினர் கொழும்பு மஜிஸ்ரேற் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபரான சதாசிவம் புஷ்பராஜா வெள்ளவத்தை, ராஜசிங்க வீதியில் வசிப்பவர் இவரை ஒகஸ்ட் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறு மேலதிக மஜிஸ்ரேட் பிரியந்த பெர்ணான்டோ உத்தரவிட்டார்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள ஹோட்டல் ஒன்றின் முன் புதனிரவு நிரஞ்சன் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். படுகொலை செய்யப்பட்ட நிரஞ்சன் தனக்கு படுகொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்ததாக ஜூலை 29 ல் பூண்டுலோயா பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடு செய்திருந்தார் என்று சி. ஐ டி. பொலிஸார் தெரிவித்தனர். பத்தாயிரம் ஏக்கர் பெருந்தோட்டப் பங்குகள் தொடர்பான பிணக்கே இப் படுகொலைக்கு காரணமாக இருக்கலாம் எனதெரிவிக்கப்படுகிறது. (க)

## மோதல் சம்பவங்கள் அதிகரிப்பு

வீதியில் செல்பவர்கள் மற்றும் துவிச்சக்கரவண்டிகளில் செல்பவர்களை மோட்டார் சைக்கிளால் மோதிவிட்டு தப்பிச்சென்றுவிடும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (க-79)

# செய்தித் துளிகள்

## ஆங்கிலபாட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தரத்தில் ஆங்கில பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ஆறு நாட் கருத்தரங்கு ஒன்று அடுத்த மாத இறுதிப்பகுதியில் வேம்படி மகளிர்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்கில் ஆசிரியப் பயிற்றுநரான பிரிட்டினைச் சேர்ந்த திருமதி எச். சி. பிக்போர்ட் மற்றும் வடக்கு கிழக்கு மாகாண ஆங்கிலபாட உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர்.

(ஷ-19)

## உடைகள் வழங்கல் வைபவம்

(உரும்பிராய்)

வலி கிழக்கு பிரதேச சபை உரும்பிராய் உபஅலுவலகத்தினால் நடத்தப்பட்ட இலவச தையல் பயிற்சி வகுப்பில் பயிற்சிபெற்றமாணவர்களால் உற்பத்திசெய்யப்பட்ட ஆடைகள கடந்த புதன்கிழமை பிரதேசசபைத்தலைவர் பூ. குணசிங்கத்தினால் மேற்படி பயிற்சியாளருக்கு சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

(ஷ-215)

## வாக்களிப்பு ஒழுங்குகள்

(யாழ்ப்பாணம்)

இரண்டாயிரத்துஇரண்டாம் ஆண்டு வாக்காளர் பத்திரத்தில் புதிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைஉள்ளடக்கி வாக்களிப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான அறிவுறுத்தல்களை அனைத்துக் கிராம சேவையாளர்களுக்கும் யாழ். தேர்தல் திணைக்களம்வழங்கியுள்ளது

இன்று திங்கட்கிழமை யாழ் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம சேவையாளர்களுக்கிடையான கலந்துரையாடல் யாழ் செயலகத்தில் இடம்பெறவுள்ளது

(க-19-06)

## சமாதான உலக தினம்

(கல்வயல்)

நாளைய தினத்தை உலக சமாதான தினமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்துள்ளது.

உலக நாடுகளில் சமாதானத்தின் அவசியத்தை வலியுறுத்தல் சம்பந்தமான கலந்துரையாடல்கள் இத்தினத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை பாடசாலை மட்டங்களில் மாணவரிடையே பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி போன்றனவும் நடத்தப்பட்டு வருகின்றன.

(ஷ-111)

## மோட்டார் சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு வந்திருந்த ஒருவரின் மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டுள்ளது.

ராஜதுரை டானியல் ரட்ணசெந்தில் ராஜா என்பவருடைய கொண்டா சீ.70 ரக மோட்டார் சைக்கிளே இவ்வாறு களவாடப்பட்டதாகும்.

(ஷ-19)

## ஈ.ச.கிளை திறப்பு

(மந்திகை)

வடமராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் கிளை ஒன்று குடத்தனைப்பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபரும் பிரதேச செயலருமான வீ.பி.வேலாயுதபிள்ளை கடந்த புதனன்று இதனை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார்.

(உ-23)

## வயோதிபமாதுவின் சடலம் மீட்பு

(ஏழாலை)

காணாமற்போன வயோதிப மாது ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 28 ஆம் திகதி முதல் காணாமற் போய் தேடப்பட்டுவந்த ஏழாலை மத்தியைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி சின்னத்தங்கம் (வயது 75) என்ற வயோதிப மாதுவே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

ஏழாலை வயல் வெளிக் கிணற்றில் கிடக்கக் காணப்பட்ட இவரின் சடலம் கடந்த 1 ஆம் திகதி பொலிஸாரின் உதவியுடன் மீட்கப்பட்டது.

(ஷ-206)

## பாடசாலையில் வெடிகுண்டுகள்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் சர்ச்சைக்குரிய தீவாகிய அம்பொனில் உள்ள பாடசாலை ஒன்றில்16நாட்டு வெடிகுண்டுகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளார்கள்.

குழாய், பிளாஸ்ரிக் மற்றும் உதிரிகளைக் கொண்டு தயாரித்து மறைத்து வைக்கப்பட்டிருந்த இக் குண்டுகளை அப்பிரதேச மக்கள் கண்டெடுத்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

இதேவேளை கடந்தவாரம் குண்டுவெடிப்பின் காரணமாக இங்கு54 பேர் காயப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

(க-03)

## நாளை பாதயாத்திரை ஆரம்பம்

(லாகூர்)

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நட்புறவை அதிகரிக்கவும் சமாதானத்தை ஏற்படுத்தவும் பாகிஸ்தானின் டக்ஸிலா நகரிலிருந்து மத்திய இந்தியா வரை பாதயாத்திரைஇடம் பெறஉள்ளது

1945 ஆம் ஆண்டில் ஜப்பான் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசிய தினமான நாளை 06 ஆம் திகதி இப்பாத யாத்திரை ஆரம்பிக்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-03

## ஜோர்ஜ் புஷ் அறிவிப்பு

(பக்தாத்)

அமெரிக்கா மீதான பகைமையை ஈராக் தொடர்ந்து சாதித்து வருவதை அடுத்து ஈராக் மீதான தடைகளை அமெரிக்கா மேலும் ஒருவருட காலத்துக்கு நீடித்துள்ளது என அமெரிக்க ஜனாதிபதி புஷ் அறிவித்துள்ளார்.

(க-3)

# பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டோர்களை அரசு விடுதலை செய்ய வேண்டும்

## சட்டத்தரணி டபிள்யூ அபயக்கோன்

(தென்மராட்சி)

இந்த நாட்டில் மிகவும் மோசமான சட்டமாகக் கருதப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை இல்லாமல் செய்வதுடன் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைக் கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவரையும் பொது மன்னிப்பின் அடிப்படையில் அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டும்.

இவ்வாறு கொழும்பிலுள்ள மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் தலைவரான சட்டத்தரணி, ஈ. டபிள்யூ. அபயக்கோன் நேற்றைய தினம் பஸ்தியான் கேட்போர் கூடத்தில் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்; பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை இல்லாமல் செய்யும்படி மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு நாடு முழுவதும் பொருத்தமாகப் 15 கருத்தரங்குகளையும் கூட்டங்களையும் நடத்தவுள்ளோம்.

பொதுவாக இச்சட்டத்தின் பயங்கரத் தன்மை பற்றிய விழிப்புணர்வு யாழ்ப்பாண மக்கள் மத்தியில் இல்லாமல் போயுள்ளது. எனவே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

அதே சமயம் முழு நாட்டிலுமே இச் சட்டம் காரணமாக இது வரை சுமார் 5 லட்சம் மக்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு, 1985 ல் தண்டனை வழங்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நிலையத்தின் செயலாளர் என்.கந்தசாமி அங்கு குறிப்பிடும் போது,

பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் போன்றவை இலங்கையின் சட்டப்புத்தகங்களில் இல்லாமல்செய்வதுகுறித்துபோராடி வருகின்றோம்.

இன்றைய நிலையில் சிறைச் கூடங்களில் சுமார் 500 பேர் வரை இச் சட்டத்தின் கீழ்க் கைதுசெய்யப்பட்டனர் இவர்களது விடுதலை பற்றியும் நாம் அதிக அக்கறையுடன் செயல்பட்டு வருகின்றோம் எனக் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் அ விநாயமூர்த்தி அங்குகுறிப்பிடுகையில்;

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டவர்கள் மிகவும் விரைவாக விடுதலை செய்யப்படுவார்கள் எனத்தெரிவித்தார்.

மேலும் இப் பத்திரிகையாளர் மாநாட்டில் சட்டபீட விரிவுரையாளர் வீ ரீ தமிழ் மாறன், சட்டத்தரணி குமாரஹோ சட்டத்தரணி றெமிடியாஸ் உட்பட வேறும் பலர் பங்கு கொண்டிருந்தனர்.

(க-77-19)

## இராசி பலன்

5.8.2002
(ஆடி 20, திங்கள்)
துவாதசி பி.இ 4.54 வரை
மிருகசீரிடம் பி.ப 5.05 வரை
ராகுகாலம் 7-34-9-04
நல்லநேரம் 12-04-1.34
அமிர்த்த சித்தம்

**மேடம்**

இனிய சம்பவம், சகோதரர் உதவி, காரிய நன்மை, கூட்டு முயற்சி.

**இடபம்**

மாதர் நட்பு, கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை.

**மிதுனம்**

ஆழ்ந்த சிந்தை, நல்ல முயற்சி, புதிய பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி.

**கடகம்**

தந்தை வழி உறவு, மனக் குழப்பம், காரிய அலைச்சல், தனவிரயம்.

**சிங்கம்**

சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய அனுகூலம், பொருள் வரவு, தெய்வ சிந்தை.

**கன்னி**

உற்சாகம், தொழில் முன்னேற்றம், தூரதேச செய்தி முயற்சி கைகூடும்.

**துலாம்**

கட்டுப்பாடு, புதிய தொழில் சிந்தை, பிரயாணம் நிலை மாற்றம்.

**விருச்சிகம்**

வீண் தொல்லை, போசன சுகம் பிரயாண பயம், அபகீர்த்தி.

**தனுசு**

அபூர்வ சந்திப்பு, சுவாரஸ்யம், தனவரவு, எடுத்த காரியம் கைகூடும்.

**மகரம்**

திடீர் பயணம், நல்ல சம்பவம், மனமகிழ்ச்சி, காரிய நன்மை.

**கும்பம்**

காரிய இடையூறு, குடும்பக் கவலை, செய் தொழில் நன்மை, பொருள் விரயம்.

**மீனம்**

மாணவர் கல்விச் சிறப்பு, அற்பர் உறவு, தன்னம்பிக்கைக் குறைவு, காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# 25 ஆயிரம் இலங்கையருக்கு வெளி நாட்டில் வேலை

## பணியகம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையர்கள் 25 ஆயிரம் பேருக்கு அடுத்த ஐந்து மாதங்களுக்குள் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் கிடைக்கவுள்ளன என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இதற்கான கோரிக்கைகள்கிடைக்கப்பெற்றுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் சங்கத்தலைவர் சுராச்தல் தெனிய தெரிவித்துள்ளார்.

பலநாடுகளுக்கு அமைச்சர்கள் பலர் மேற்கொண்ட விஜயத்தை அடுத்தே இவ்வேலை வாய்ப்புகள் கிடைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தச்சுத்தொழில், சாரதிகள், விடுதிச் சிற்றூழியர்கள் போன்ற தொழில்களுக்கே மத்திய கிழக்கு நாடுகளிலிருந்துவேலை வாய்ப்புகோரப்பட்டுள்ளன.

(க-08)

# கோயம்புத்தூர் சிறையில் கைதிகள் உண்ணாவிரதம்

(புதுடில்லி)

தமிழர்தேசிய இயக்கத் தலைவர் பழநெடுமாறன் பொடோதடைச் சட்டத்தின் கீழ் கைது செய் தமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நேற்றுமுன்தினம் கோயம்புத்தூர் மத்தியசிறைச்சாலை கைதிகள் 26பேர் அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

சந்தனக் கடத்தல் வீரப்பனின் 18சகாக்களும் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட தமிழர்மீட்பு படைமற்றும் தமிழர்தேசிய விடுதலைஇராணுவத்தை சேர்ந்த8பேருமே நேற்றுமுன்தினம் இவ் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தனர்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றகழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி கைதுசெய்யப்பட்டது பொடோதடைச்சட்டம் தவறாக பயன்படுத்தப்படுவது பேச்சுரிமையை ஒடுக்கமாநில அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகள் என்பன வற்றுக்கும் எதிர்ப்புத் தெரிவிப்பதாகவே இவ்வுண்ணாவிரதம் அமைந்திருந்தது என சிறைச்சாலைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(8)

# இந்திய பிரதமருக்கு மாம்பழம் அனுப்பிவைப்பு

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுடனான நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும்நோக்கில் இந்தியப்பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய்க்கு பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஷ் முஷாரப் மாம்பழங்கள் அனுப்பிவைத்துள்ளார்.

பாகிஸ்தான் கடந்த 25 வருட காலமாக உலகத்தலைவர்களுக்கு மாம்பழங்கள் அனுப்பிவருவது வழமையான ஒரு நிகழ்வுஎன்றும் அதன் ஓர் நடவடிக்கையாகவே இந்தியப் பிரதமருக்கு மாம்பழம் அனுப்பிவைக்கப் பட்டது என்றும் இதில் அரசியல் உள்நோக்கம் எதுவும் கிடையாது என்றும் பாகிஸ்தான் ஜனாதிபதியுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(க-03)

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை உள்ளினும் உள்ளம் சுடும்.

# வலம்புரி

## ஹக்கீமின் போக்கு

அரசும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டபின்னர் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமும் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டனர்.

இவ்வொப்பந்தம் முஸ்லிம் மக்களின் நலன்களைப் பேணுவதாக அமைந்திருந்தது. இதன் மூலம் தமிழ் - முஸ்லிம் மக்களிடையேயான உறவு நிலை பலப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அந்த எதிர்பார்ப்புக்கு மாறாக நிலைமை மாறிவிட்டது. வாழைச்சேனையில் ஏற்பட்ட தமிழ் - முஸ்லிம் கலவரத்தை தொடர்ந்து புலிகளின் தலைவருடன் தான்செய்துகொண்ட ஒப்பந்தத்தையும்மீறி அமைச்சர் ஹக்கீம பொதுமேடைகளில் உரையாற்றினார். அவ்வுரைகள் ஒப்பந்தத்தை மீறுவதாக அமைந்திருந்தது.

வாழைச்சேனையில் இடம்பெற்ற தமிழ்-முஸ்லிம் வன்முறைச் சம்பவங்களுக்குப் பின்னர் அமைச்சர் ஹக்கீம், பிரதமா ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான அரசாங்கத்தில் நம்பிக்கை இழந்தவராக - அதற்கு விசுவாசமற்றவராகச் செயற்படுவது புலனாகிறது.

இதேவேளை அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஆதரிக்காத தன்மையும் அமைச்சர் ஹக்கீமிடம் இருப்பதால், - அரசுக்கு எதிரான போக்கை தீவிரமாகக் கடைப்பிடிக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் அமைச்சர் ஹக்கீம் மீண்டும் சேரக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

அமைச்சர்ஹக்கீம் மீண்டும் ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச் சேர்வாராயின் அவர் எதிர்பார்த்த கல்முனைக்கான தனிமாவட்டத்தை உருவாக்குவதற்கும் ஜனாதிபதி பின்நிற்கமாட்டார்.

அவ்வகையில் அரசு விடுதலைப் புலிகள் செய்த கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தகர்த்து விடும் முயற்சியில் ஹக்கீம் ஈடுபடுவதும், அதனை நிறைவேற்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச் சேர்வதும் சாத்தியப்படக்கூடிய நிகழ்வுகளாகும்.

# இலங்கையின் பனை வளப் பெருக்கத்திற்கு நாம் எடுக்கவேண்டிய செயற்பாடுகள்

பூலோகத்தில் கற்பகதரு என்று பனைமரம் அழைக்கப்படும். வாழ்வுக்குத் தேவையானவற்றை தரக்கூடிய பனைமரத்தின் அடிவேரில் இருந்து உச்சிவரை ஒவ்வோர் வளர்ச்சிப் பருவத்திலும் பயன்தரக்கூடியது. ஆதிகாலத்தில் இருந்தே பனைவளம் தமிழ்பேசும் மக்கள் வாழ்வோடு பின்னிப்பிணைந்து தமிழரின் குறியீடாக அமைந்து வந்துள்ளமையை வரலாறுகளில்இருந்தும் இலக்கிய ஆதாரங்களில் இருந்தும் அறியமுடிகிறது. 'பனைஉள்ள நாட்டில் பஞ்சமில்லை. 'பனைஇன்றி வாழ்வில்லை' எனும் முதுமொழிகள் இதைவிழித்து நிற்கின்றன.

### பனையின் பரம்பல்

உலகிலே சம கோட்டிற்கு அண்மையில் மேற்கு ஆபிரிக்கா தெற்காசியா, தென்கிழக்காசியா போன்ற நாடுகளில் சுமார் 14 கோடிபனை மரங்கள் வியாபித்திருக்கின்றன.

விபரம் வருமாறு:-

| நாடுகள் | இலட்சம் பனைகள் |
|---|---|
| மேற்காபிரிக்கா | 500 |
| மதநாகர் | 10 |
| இந்தியா | 600 |
| இலங்கை | 110 |
| பர்மா | 28 |
| தாய்லாந்து | 20 |
| இந்தோனேசியா | 100 |
| கம்பூச்சியா | 20 |
| | 1388 |

(13 88 கோடி பனைகள்)

மேற்குறித்த விபரத்தில் இலங்கையில்உள்ள பனை மரங்களில் 99% வடக்குக் கிழக்கிலும் மீதி 1% ம் புத்தளம், அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளிலும் காணப்படுகிறது. அதிலும் வடமாகாணத்திலேயே அதிகமாக பனைவளம் காணப்படுகிறது.

இலங்கையில் காணப்படுகின்ற பனைவளம் முழுமையாக பயன்படுத்தப்படாமையை அறியமுடிகிறது. பனையில் இருந்து பல பொருட்களை உற்பத்தி செய்யலாம். என்பதை திருக்குடத்தை அருணாசலம் புலவர் இயற்றிய 'தலாவிலாசம்' என்ற பனையைப் பற்றிய நூலில் 801 விதங்களில் பனைமரம் பயன்படுத்தப்பட்டதாக கூறுகின்றார்.

உடம்பு சல்லாவையில் 1843-1847 வரை கடமையாற்றிய அலெக்சாந்தர் என்ற தோட்டத்துரை எடின்பேர்க் என்ற நகரில் நடைபெற்ற காட்டுப்பொருட்கள் சம்பந்தமான கண்காட்சி ஒன்றுக்காக யாழ்ப்பாணத்தில் இருந்து பனையினால் செய்யப்பட்ட நூறு பொருட்கள் எடுத்துச்செல்லப்பட்டதாக அறியமுடிந்தது. ஆனால் இன்றைய வளர்ச்சிப்போக்கில் அவ் நூறு பொருட்களை ஆகுதல்செய்து எமது வாழ்க்கைக்கு பயன்படுத்துவதற்கு நாம் தவறியிருக்கின்றோம்.

எனவே இயற்கைத் தாவரமாக காணப்படுகின்ற பனைமரத்தை நாம் திட்டமிட்டு வளர்த்து எதிர்கால சந்ததியினுடைய வாழ்வுக்கு வளம் சேர்க்க வேண்டியவர்களாக எம்மை ஆக்கிகொள்ள வேண்டும். பனை 'பொராஸ் செல் பிலபெல்லியா' எனும் தாவரவியற் பெயரைக் கொண்டுள்ளது. சிங்கள மக்கள் இதை 'தல்' என்று அழைப்பர். இன்றைய தாவரவியற் பாகுபாட்டாளர்கள் நான்கு வகையான பனை சார்ந்த இனத்தை குறிப்பிடுவர். அவையாவன;

01. பனை
02. தென்னை
03. ஈந்து
04. உதிலி என்பனவாகும்.

இவ் நான்கு இனத்திலும் பனை, தென்னை. ஆகியன எமது வடமாகாணப் பிரதேசத்தில் பரந்து காணப்படுவது ஒரு சிறப்பம்சம் ஆகும்.

பனை, பயன்படுத்த முடியாது காணப்படுகின்ற எந்த மண் வளத்திலும் தன்னை வளர்த்துக்கொள்ளும் ஆற்றலைக் கொண்ட சிறப்பம்சத்தைக் கொண்டது. இம் மரத்தின் சிறப்பான இயல்பு கடும் வரட்சிக்கும் தாக்குப் பிடிக்கக் கூடியதாகும். மேலும் 100 வருடங்களுக்கு மேல் வாழக்கூடியதும் பனையில் இருந்து வெட்டியெடுக்கப்பட்ட மரம் 200 வருடங்களுக்கு மேல் பழுதடையாமல் பயன் தரக்கூடியதுமாகும்.

அச்சமூகம் உறுதிமிக்கதும்' நோய் எதிர்ப்புச் சக்தி நீண்ட ஆயுள் கொண்டதுமானசமூகஒரு அமைப்பை உருவாக்க முடியும். எனவே அதன்முதற் கட்டமாக இருக்கின்ற வளத்தை பயன்படுத்துவதோடு புதிய பனைவள அபிவிருத்தியை அதிகரிக்கச்செய்ய வேண்டியபொறுப்பும் இப்போது வடமாகாணத்தில் வாழுகின்ற அனைவரதும் கடமையில் ஒன்றாகின்றது.

**சி. சிவநேசன்**
பொது முகாமையாளர்
வட. மா. ப. தெ. வ. அ. கூ. நி. பேரிணையம்
கிளிநொச்சி.

### இலங்கையில் பனைவளம்

இலங்கையில் பனைப் பரம்பல் 1.1 மில்லியன் எனக் கூறப்படுகிறது. அதன் விபரம் வருமாறு:-

மாவட்டம்

01. யாழ்ப்பாணம்
02. கிளிநொச்சி
03. மன்னார்
04. முல்லைத்தீவு
05. வவுனியா
06. அனுராதபுரம்
07. மட்டக்களப்பு
08. அம்பாறை
09. திருகோணமலை
10. புத்தளம்
11. அம்பாந்தோட்டை

ஆண் பனை 42%
பெண் பனை 58%

### பனையின் பயன்

பனை மரம் சராசரியாக 12 முதல் 15 மீற்றர் உயரத்திற்கு வளர்கின்றது. இத் தாவரம் 100 முதல் 150 வருடம் வாழ்க்கைக் காலத்தை உள்ளடக்கியதாக இருந்த போதும், 12 முதல் 15 வருடங்களில் பயன்தரக்கூடியதாகும். பனையின் பயனை நான்கு வகையில் நாம் பெற்றுக்கொள்ளலாம்.

1. சுரப்பு உற்பத்திகள்.
2. பழ உற்பத்திகள்
3. ஓலை, கும்பு (நார்) உற்பத்திகள்.
4. மர உற்பத்திகள்.

அ) சுரப்பு உற்பத்தியில் இருந்து பதனீர், பாணி, சல்லொக்காரம், பனை வெல்லம், பனம் சீனி எனும் உணவுப் பண்டங்களும், கள், சாராயம் போன்ற மது உற்பத்திகளையும் பெறலாம்.

ஆ) பழ உற்பத்திகளில் பனாட்டு. பாணிப்பனாட்டு. பனம்கழி சேர்ந்த பனம் பண்டங்கள், ஒடியல், புழுக்கொடியல், பூரான், பற்பசை, நோய் எதிர்புத் தடை பொருட்கள் ஆகியன பெறலாம்.

இ) ஓலை, தும்பு, உற்பத்தியில் பாய், கடகம், கூடை, துடைப்பங்கள், விசிறி, சுவர் மாட்டி, அலங்காரப் பூக்கள், என்பனவும், எரிபொருளாகவும் பயனபடுகிறது.

ஈ) மர உற்பத்தியில் வீட்டு நிர்மாணப் பொருட்களையும் அலங்காரப் பொருட்களையும் உற்பத்தி செய்ய முடிகிறது.

மேற்குறித்த உற்பத்திகளில் உணவுப் பண்டங்கள் அனைத்தும் மிகுந்த ஊட்டச் சத்தும், நோய்எதிர்ப்புச் சக்தியும் கொண்டனவாகும். இவ்வாறான பனையை முறையாகபயன்படுத்துவதன் மூலம பனம் பண்டங்களை உணவாகக் கொள்ளுகின்ற ஒரு சமூக அமைப்பை தோற்றுவிக்க வழி செய்வோமாயின்

### அழிக்கப்பட்ட பனைகள்

அண்மைக் காலத்தில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கையினால்25 இலட்சம் பயன்தரு பனை மரங்கள் அவர்களது காப்பரண் தேவைக்கு அவர்களது எறிகணைகள், வான் தாக்குதல்களுக்கும் உள்ளாகி அழிக்கப்பட்டும் உள்ளது. இவற்றில் 19இலட்சம் வடமாகாணத்திலும் 6இலட்சம் கிழக்கு மாகாணத்திலும் என அறிய முடிகிறது. குறிப்பாக வட பகுதி அழிவுகளில் இராணுவ நடவடிக்கை அதிகமாக நடந்துள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, நெடுங்கேணி, புளியங்குளம் ஆகிய பிரதேசங்களில் கிட்டத்தட்ட 12 இலட்சம் பனை மரங்கள் அழிக்கப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. இப்12இலட்சம் பனை மரங்களையும் மீள் நடுகைக்கு உட்படுத்துவதற்கு தமிழ் பேசும் மக்களாகிய நாம் செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

### பனைமர உற்பத்தி

ஒரு ஏக்கரில் பத்து அடிக்கொன்றாக 500 பனைகள் நாட்டி வளர்க்கலாம். பனை விதை நடுகையானது கடந்த காலங்களில் புரட்டாதிமாதத்தில் நவராத்திரிவிரதம்அனுஷ்டிக்கப்படும் காலப்பகுதிகளில் நடுகை மேற்கொள்ளப்பட்டு வந்திருப்பினும் தற்போதுஇக் காலத்திற்கு முதலே பனம் பழம் பெறக் கூடியதாகவுள்ளதால், யூலை மாதம் 5ம் திகதியளவில் இருந்தே தொடர்ச்சியாக பனம் விதை நடுகையை மேற்கொள்ளக்கூடியதாகஇவ் வருடம் திட்டமிடப்பட்டுள்ளது.

பனை மரம் பூக்கும் வரை பாளை வெளிவரும் வரை அதை ஆண், பெண், பனை என பிரித்தறிய முடியாது. எனினும் ஒற்றை விதையைக் கொண்ட பழம் ஆண் பனையாக அமையும். இரு விதைகளைக் கொண்ட பழம் ஓர் ஆண்பனையையும் ஒருபெண் பனையையும் உருவாக்கும் எனவும் மூன்று விதைகள் கொண்ட பழம் ஒரு பெண் பனையையும் இரு ஆண்பனையையும் உருவாக்கும் என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். எனவே இருவிதை கொண்ட பழங்கள் தேர்வு செய்தல் நடுகைக்கு சிறப்பாகும்.

பனம் விதையின்விதைப்பருவம் விதையில் இருந்து22நாட்கள் வரை எனக் கூறுவர். எனவே குறித்த அந்த நாட்களுக்குள் நடுகை மேற் கொள்ளுதல் அவசியமாகும். இவ்

(4ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

## முயற்சி

துன்பம் உறவறினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை

திருக்குறள்

கீழே விழுந்த குழந்தை எழுந்து நடக்க முயலுவது போன்று அழுதும் தொழுதும் அண்ணலே, உன்னை நான் அடைய முயலுவேனாக.

தோல்வியைப் பொருட்படுத்தாதே, இயற்கையில் அதற்கு இடமுண்டு, வாழ்க்கையைத் தோல்வியானது அலங்கரிக்கிறது. வாழ்க்கைக்கு அது கவிதை ரசமும் கொடுக்கிறது. தோல்வியடையவும் திரும்ப முயற்சி எடுத்துக்கொள்ளவும் அமையாத வாழ்வு வாழ்வன்று ஆயிரம் தடவை நீ தோல்வியடைந்தாலும் தளர்வுறாதே திரும்பவும் முயற்சியெடுத்துக் கொள். முயற்சி திருவினையாக்கும்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்


யாழ்ப்பாண வர்த்தக
கண்காட்சியில்

Canon உற்பத்தியாளர்களின்
இலங்கைக்கான விநியோகஸ்தர்களான
METROPOLITAN இன்
யாழ் குடாநாட்டுக்கான
ஏக விநியோகஸ்தர்களான

நவகலாவின் காட்சியறையில்

Canon போட்டோப் பிரதி மெசின், ரோணர்கள்
மற்றும் உதிரிப்பாகங்கள்
IBM கணனிகள் மற்றும் அவற்றிற்கான
உதிரிப்பாகங்கள்
யாவற்றையும் பார்வையிட்டு உங்கள்
தெரிவுகளுக்கு இன்றே நாடுங்கள்

தொடர்புகளுக்கு



நவகலா

200, K.K.S வீதி, யாழ்ப்பாணம்


## புகழ் மணக்கும் கண்ணீர் பூக்கள்



## திருமதி மீனாட்சி சிதம்பரப்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரியை காரை யாழ்ற்ரன் கல்லூரி)
காரைநகர்

03.08.2002 அன்று காலஞ்சென்ற எமது ஆசிரியை திருமதி மீனாட்சி சிதம்பரப்பிள்ளை அவர்கள் ஆசிரிய சமுதாயத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்ந்தவர். இவர் தமிழும் சமயமும் நன்கு கற்றறிந்ததுடன் ஆங்கிலத்திலும் சரிசம திறமைகாட்டியவர். மாணவர்களின் நலனுக்காக பாடுபட்ட இவர் கற்பித்தலின் போது பாடத்தை மட்டும் நோக்காக கொள்ளாது மாணவன் முழுமையுறுவதற்கு தேவையான எல்லா அறிவுறுத்தல் களையும் ஒருங்கே சேர்த்துக் கற்பித்தவர். பேச்சு எழுத்து என்பவற்றில் திறமையுடைய இவர் மாணவர்களையும் அத்துறைகளில் பயிற்றுவித்து வெற்றி காணும் ஆற்றல் படைத்தவர். திருக்குறள், திருமந்திரம், திருப்புகழ், நளவெண்பா, நாலடியார் போன்ற பல சமய இலக்கிய அம்சங்களை கற்றதுமட்டுமல்லாது தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றைக் கையாளும் திறமைமிக்கவர். இவரின் உடையும் அமைப்பும் தமிழ்ப் பெண்களின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் தன்மை கொண்டன. இவர் காரைநகரில் மட்டுமல்லாது இலங்கையின் பலபாகங்களிலும் கற்பித்து தமது புகழைப் பரப்பியவர். இவரின் புகழ் சொல்லில் அடங்க முடியாதன.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

"வெற்றிமீது வெற்றி வந்து எம்மைச் சேரும் - அதை
வாங்கித் தந்த பெருமையெல்லாம் உம்மைச் சாரும்".


பத்தர்கேணி
காரைநகர்

M.A.கந்தையா
குடும்பம்

[C/4799]


லாவ்ஸ் லங்கா காஸ்

புதிய தோற்றம்
நம்பிக்கையை வென்ற பெயர்
நியாயமான விலை



உலகத்தர நிர்ணயம்
ரெகுலேட்டர் IS 9798 - 1995
கோஸ் பைப் 1.5 மீ. IS 10908



முற்றிலும்
பாதுகாப்பு



இலங்கையின் முன்னோடியும் முதற் தரமானதுமான காஸ் [எரிவாயு]

லாவ்ஸ் லங்கா காஸ்

எம்மிடம் எரிவாயு அடுப்பு இணைப்புக்கான ரெகுலேட்டர், கோஸ்பைப், கோஸ்கிளிப் என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

யாழ். குடா நாட்டிற்கான விநியோகஸ்தர்கள்

ஈஸ்வர பகவான் அன் கம்பனி
100, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்

தொலைபேசி : 021 - 2507
தொலைநகல் : 021 - 2507

ஈஸ்வர அம்பாள் அன் கம்பனி
155, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

LAUGFS Lanka Gas
Truly Sri Lankan


இப்பத்திரிகை வலம்புரி அச். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 16

# சங்கு நாதம்

# Sankunatham

திங்கட்கிழமை (05-11.ஆகஸ்ட்.2002)

சங்கு:- 03 வள்ளுவர் ஆண்டு 2033 தொலை பேசி 3378 நாதம்:- 23

பக்கம்-02


அரசியல் அலசல்

பக்கம்-08

மௌனத்தின் தேடல்கள்

பக்கம்-11

மகளிர் உலகம்

பக்கம்-14

சிறுவர் அரங்கம்

பக்கம்-16

சினிமாச் சிதறல்



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் வாரமலர்

## திடீர்த் தேர்தலுக்கு நாடு தயாராகிறது

# அரசு-புலிகள் பேச்சுக்கு முன்னர் பாராளுமன்றம் கலைக்கப்படுமா?

1978 இல் கொண்டு வரப்பட்ட புதிய அரசியல் யாப்பு பாராளுமன்ற ஜனநாயகத்திலிருந்து பொதுமக்களை அப்புறப்படுத்திவிட்டது. யாருக்கு வாக்களிக்கிறோம் என்று தெரியாதவாறு வாக்காளர் வெறும் ஜடங்களாகவே தமது புள்ளடிகளை பெட்டிக்குள் போட்டு விடுகிறார்கள். வேட்பாளர் பட்டியலில் ஒருவரின் பெய




ரும், பாராளுமன்றம் செல்பவர் இன்னொருவருமாக நிலைமை மாறி விட்டது. இதனால் தொகுதிவாரியாக இருந்த அரசியல் ஈர்ப்பு அறுபட்டு தனது தொகுதிக்குள் பாராளுமன்ற பிரதிநிதி யார் என்பதே தெரியாமல்போக பாராளுமன்ற உறுப்பினர்களும் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்ளத் தொடங்கினர். இதனால் மக்கள் தமக்கு ஏற்படும் குறைகளை யாருக்குமே முறையிடாதவர்களாக, தமது குறைபாடுகளை நிவர்த்திக்க முடியாதவாறு பிரச்சனைகளோடு வாழப்பழகிக் கொண்டனர். 1978க்கு முன்னர்



தொகுதி வாரியாக அரசியல் பிரதிநிதித்துவம் மக்களை அரசியலோடும், அரசியலை மக்களோடும் பின்னிப் பிணைத்திருந்தது. அதனால் தனது தொகுதி மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளை நிவர்த்திக்கவும் தான் சார்ந்த பிரதேசத்தின் சமூக, பொருளாதார, அபிவிருத்தி கருதிய திட்டங்களை வகுக்கவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் முண்டியடித்தனர். இத்தகைய நிலைக்கு சமாதி கட்டிய பெருமை காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கே உண்டு. யார் எதற்கு மந்திரி என்பதை தெரிந்து கொள்ள முடியாதவாறு மக்களை அரசியலில் இருந்து அன்னியப்படுத்திய புதிய அரசியல்யாப்பு பாராளுமன்ற இறைமைக்கும், அதிகாரத்துக்கும் குழி தோண்டவும் தவறவில்லை. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்ற அனைத்து சட்டவாக்கங்களும் நிறைவேற்று அதிகாரம் என்ற பெயரில் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டன. ஒரு நாட்

**விதுரன்**

டின் அரசியலில பாராளுமன்ற நிர்வாக ஆட்சியிருக்கும் போது அதற்கு மேலாக நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியை தோற்றுவித்து எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத ஓர் சூழ்நிலையை ஜே.ஆர். ஏற்படுத்தியிருந்தார்.

### தன்னலத்திற்காக தேசநலன் பறிக்கப்பட்டது

1977ல் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்தது. அவ்வாட்சி நீண்டு நிலைக்கவேண்டுமாயின் அதற்கு புதியயாப்பு அவசியமென ஜே.ஆர் கருதியிருந்தார். ஐ.தே.கட்சி என்பதற்கு மேலாக 'தனது' என்ற 'சுயநலம்' ஜே.ஆரிடம் உச்சம் பெற்றிருந்தது. தன்னை மீறி எவரும் தலை நிமித்தக்கூடாது என்ற ஒரே காரணத்திற்காகவே ஜே.ஆர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டு வந்தார். அவரின் எண்ணத்தை நிறைவேற்றக் கூடியதாக அன்றைய பாராளுமன்ற பிரதிநிதித்துவமும் அமைந்திருந்தது. தனது கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து திகதியிடப்படாத பதவி விலகல் கடிதத்தைப் பெற்று தனது பொக்கற்றுக்குள் வைத்துக் கொண்டே ஜே.ஆர் ஆட்சி செய்த நாளில் அவரிடம் காணப்பட்ட அடக்குமுறை எத்தகையது என்பதையும், தனது பதவி பறிபோகாமல் இருக்க வேண்டு மென்பதில் அவர் எவ்வளவு அக்கறையோடு இருந்தார் என்பதையும் புரிந்து கொள்ள முடியும். அன்று தனது நலனைக் கருத்தில் கொண்டு ஜே. ஆர் இனால் கொண்டுவரப்பட்ட ஜனாதிபதி ஆட்சிமுறை இன்று நாட்டில் அடிக்கடி தேர்தல் நடப்பதற்கு அடிகோலி உள்ளது. இதனால் நாட்டின் பொருளாதாரம் வீணடிக்கப்படுவதோடு அடிக்கடி இடம பெறும் தேர்தல்கள் மக்களிடையே வெறுப்புணர்வை ஏற்படுத்துவதோடு ஜனநாயகப் பண்புகளிலிருந்து மக்களை விலகச் செல்லவும் வழி வகுத்து விடுகின்றது.

### ஜே.ஆர் எதிர்பார்க்காத

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஜே.ஆர கொண்டு வரும் போது, ஜனாதிபதியும் பாராளுமன்ற ஆட்சியும் ஒரு கட்சியாகவே இருக்குமென கருதியிருந்தார். ஜனாதிபதி எதிர்க் கட்சியாக சேர்ந்தவராகவும், பாராளுமன்ற ஆட்சி இன்னொரு கட்சியாகவும் இருக்குமென ஜே.ஆர் ஒரு போதும் நினைத்துப் பார்த்ததில்லை. அத்தகையதோர் சிந்தனை ஜே.ஆரின் எண்ணத்தில் தோன்றியிருக்குமாயின் ஜனாதிபதிக்கு இருக்கக் கூடிய அதிகாரத்திற்கு ஓர் எல்லையை வகுத்திருப்பார்.

ஆனால் அவரிடம் அந்தச் சிந்தனை அறவே இல்லையென்பதை ''ஆணைப் பெண்ணாக மாற்ற முடியாதே ஒழிய மற்ற எல்லா அதிகாரமும் ஜனாதிபதிக்கு உண்டு'' என ஜனாதிபதியின் அதிகாரம் பற்றி ஜே.ஆர் கூறியிருப்பதில் இருந்து புரிந்து கொள்ள முடியும்.

இதிலிருந்து ஜனாதிபதிக்கு இருக்கக் கூடிய அதிகாரத்தின் கனதி எத்தகையதென்பதை சாதாரணமாக புரிந்து கொள்ளமுடியும்.

### ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைத்து மதிப்பிடலாகாது

ஆணைப் பெண்ணாக மாற்ற முடியாதே தவிர மற்றதெல்லாம் செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு என அதன் சிருஷ்டிகர்த்தா கூறியிருக்கும் போது, தற்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் ''எனக்கு இருக்கக் கூடியதான அதிகாரத்தில் ஒரு பகுதியையே பயன்படுத்தியுள்ளேன். என்னால் பயன்படுத்தப்படாத அதிகாரங்கள் இன்னமும் எவ்வளவோ உண்டு இதைத் தங்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன்'' என எழுதியுள்ளார். இத்தகைய வாசகங்களிலிருந்து இலங்கையரசியல்யாப்பில் ஒரு ஜனாதிபதிக்கு இருக்கக் கூடிய அதிகாரம் எத்தகையதென்பதை புரிந்து கொள்வதற்கு அவ்வளவு நேரம் வேண்டியதில்லை.

எனினும் தற்போதைய ஆளும் கட்சியான ஐ.தே.முன்னணி அரசு ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைத்து மதிப்பிடுவது போல் தெரிகிறது. அதுமட்டுமன்றி ஜனாதிபதிக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களைக் குறைக்கும் அதிகாரம் பாராளுமன்ற ஆட்சிக்கு இருப்பது போலவும், அதற்கான நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டிருப்பது போலவும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பிரீஸ் கூறிவருவது அரசியல் யாப்பின் பலத்தைக் குறைத்துக் காட்டுவதாக அமைவதுடன் மக்களை ஏமாற்றுவதாகவும் அமைகிறது.

### ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைக்க முடியுமா?

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தைக் குறைக்கும் அதிகாரம் பாராளுமன்றுக்கு இருக்கவேண்டுமாயின் மூன்றில் இரண்டு பெரும்பானமைப் பலம் அவசியம். புதிய அரசியல் யாப்பின் பிரகாரம் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை பெறுவதென்பது இனி ஒரு போதும் நடக்கப் போகும் காரியம் அல்ல.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை அதற்கு இடமளிக்காது. இந் நிலையில் ஜனாதிபதிப் பதவியின் அதிகாரத்தை குறைப்பதென்பது வெறும் வார்த்தை ஜாலங்களாக இருக்க முடியுமேயொழிய அதனை யதார்த்தத்தில் எட்ட முடியாது.

ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைப்புச் செய்வதென்பதை விட ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதென்பது அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களின் விருப்போடு நடைமுறைப்படுத்தக் கூடியதெனினும் ஜனாதிபதியினூடாக தனது கட்சிக்கு இருக்கக் கூடிய அதிகாரங்களையும், பாதுகாப்பையும் இழப்பதற்கு எந்த கட்சியும் தயார் இல்லை என்பதால், அதுவும் நடக்கப்போகும் காரியமல்ல.

### சட்டங்கள் வேறுபட்டவை அல்ல

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்தபோது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக உத்தேச அரசியல் யாப்பை பாராளுமன்றத்தில் கொண்டு வந்தபோது அது நிறைவேறமுடியாமல் வெளியேறியது. எதிரிக்கட்சிகளின் ஆதரவின்றியே உத்தேச அரசியல் யாப்பை நிறைவேற்ற முடியாமல் போனது. அரசியல் யாப்பை நிறைவேற்றாமல் தமிழர்களுக்கு எந்த உரிமையையும் வழங்க முடியாதென்பது தெளிவு. பொதுஜன ஐக்கிய முன்னணி கொண்டு வந்த உத்தேச அரசியல் யாப்பை நிறைவேற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைக்கத் தவறிய நிலையில், ஐக்கிய தேசிய முன்னணி இனப் பிரச்சினைக்குத் தீர்வாகக் கொண்டு வரும் உத்தேச அரசியல் யாப்பை தற்போதைய எதிர்க் கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணி



எதிர்க்கப்போவது சர்வ நிச்சயம்.

எனவே, இனப் பிரச்சினைத் திர்விற்குத் தேவையான சட்ட அதிகாரங்கள் கட்சி ரீதியாக ஏற்படுவதல்ல. இனப்பிரச்சினைத் தீர்விற்கு பொதுஜன ஐக்கிய முன்னணிக்குத் தேவையான சட்ட அதிகாரங்கள் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் தேவையென்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

### அரசு-புலிகள் பேசலாம் தீர்வு கேள்விக்குறியே

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முற்பட்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுதலைப்புலிகளுடன் நேரடியாக பேசுவதை விடுத்து, புலிகளின் சம்மதம் பெறப்படாத தீர்வுத் திட்டம் ஒன்றை பாராளுமன்றிற்கு கொண்டு சென்றார். தனது தீர்வுத் திட்டம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டால் அதனை அமுல்படுத்துவதே அவரின் திட்டம். ஆனால் தீர்வுத் திட்டம் பாராளுமன்ற வாசலிலேயே கொட்டுப்பட்டுவிட்டது. விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தாமல் தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றில் நிறைவேற்றிய பின்னர் அதனை அமுல்படுத்தலாம் என்பது இனப் பிரச்சினைக்கான தீர்வில் ஜனாதிபதி செயற்பட்ட முறை,

ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியின் அணுகுமுறைக்கு மாறாக விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தி அப் பேச்சுவாரத்தையின் அடிப்படையில் தீர்வுத் திட்டத்தை தயாரிப்பது. பின்னர் அத்தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்திற்கு கொண்டு செல்வதாக திட்டமிட்டார். இதில் பிரதமர் ரணிலின் திட்டம் ஒழுங்கு முறையானதும், விடுதலைப்புலிகளின் சம்மதத்தை பெறுவதாகவும் உள்ளது. விடுதலைப்புலிகளின் சம்மதம் பெறப்படாத தீர்வுத் திட்டத்தால் எந்தப் பலனும் இல்லை என்பது தெளிவு. இந் நிலையில் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தாமல் தீர்வுத்திட்டப் பொதியை பாராளுமன்றத்திற்கு எடுத்துச் சென்ற ஜனாதிபதி சந்திரிகாவை விட விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்திய பின்னர் தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றம் கொண்டு செல்லும் பிரதமர் ரணிலின் முறையே தகுந்தது. எனினும், ஜனாதிபதி சந்திரிகாவின் தீர்வுப் பொதி பாராளுமன்ற வாசலில் அவிழ்த்துக் கொட்டப் பட்டது போல் பிரதமர் ரணிலின் தீர்வுப் பொதியும் பாராளுமன்ற வாசலில் அவிழ்த்துக் கொட்டப்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

அரசும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தை மேசையில் சந்தித்து திர்வுத் திட்டத்தை தயாரித்தாலும் அது நிறைவேற்றப்படுமா? அதற்கு பிரதான எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவு வழங்குமா என்பது கேள்விக்குறியானது.

### பாராளுமன்றக் கலைப்பே ஒரே வழி

அரசு விடுதலைப்புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டு யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்தா



லும் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தை என்பது சாத்தியப்படுவதற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவு அவசியம் எனினும் இவ் ஆதரவை ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி ஒருபோதும் வழங்கப்போவது இல்லை என்பதுடன் பாராளுமன்றத்தை கலைக்கும் நடவடிக்கையிலேயே அவர் ஈடுபடுவார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.


வலம்புரி + சங்குநாதம்
வவுனியா, கொழும்பு
விலை ரூபா:- 17.00

**மின் பாவனையாளர்களே!**

NIPPON ஏனஜி பல்பை பயன்படுத்தி
உங்கள் மின்சார கட்டணத்தை
5 மடங்காகக் குறையுங்கள்



| விலை | ஏனஜி பல்ப் | சாதாரண பல்ப் |
|---|---|---|
| 295/- | 11w | 55w |
| 340/- | 13w | 65w |
| 340/- | 15w | 75w |
| 450/- | 18w | 90w |
| 470/- | 20w | 100w |
| 490/- | 22w | 110w |
| 500/- | 26w | 130w |



160V - 240V வரை தொழிற்படக்கூடியது.

மேற்குறிப்பிட்ட ஏனஜி பல்புகள் 1 வருட உத்தரவாதத்துடன் எமது நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படுகின்றது.

5 பல்பிற்கு மேல் கொள்வனவு செய்பவர்களிற்கு 10 %கழிவு (15.08.2002 வரை) வழங்கப்படும்.

விபரங்களுக்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**
11/10B, ஸ்ரான்லி வீதி, (முட்டாஸ்கடைச் சந்தியருகில்)
யாழ்ப்பாணம். T.P.No: 3335

குறிப்பு:- கீழ் குறிப்பிட்ட நிறுவனங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றது.

1. **J.T.I.** No.07, Palaly Road, Jaffna.
2. **J.T.I.** 357, Clock Tower Road, Jaffna.
3. **Sriram Electronics** 105, Stanley Road, Jaffna.
4. **P.R. Communication** 14, Jubilee Bazaar, Jaffna.
5. **Ram CD World Electronic** 220, Stanley Road, Jaffna.
6. **Kinstan Electronics** 62/30, Stanley Cross Road, Jaffna.
7. **Rajan Electronics** Bus stand, Achchuvely.

# அரியணையில்

### தமிழன்னை

அரசு கட்டிலிலே தமிழன்னை பன்னெடுங்காலம் அமர்ந்திருந்தாள். கரிகாற் பெரு வளத்தானின் அரசவையிலே கன்னித் தமிழ் அன்னை களி நடம் புரிந்து வந்தாள். முற் காலப் பிற்காலச் சோழரின் அவைகளில் எல்லாம் அவள் கொலுவீற்றிருந்தாள். பாண்டி யன் மடியிலே தவழ்ந்தாள். சேரன் செங்குட்டுவன் செந்தமி ழைப் போற்றி வளர்த்தான். ஆங் கிலேயர் ஆட்சி அமையும் வரை தமிழகத்தில் தமிழ் அன்னை தான் தனியாட்சி புரிந்து வந் தாள். ஆங்கிலேயர் வந்த பிறகு, தமிழன்னை புலவர் நாவிலே மட்டும் பொருந்தி வாழ்ந்தாள்.

### தமிழ் ஆட்சி மொழிச் சட்டம்

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய நாடு விடு தலையுற்றதல்லவா? நாடு விடு தலையடைந்தும் நாம் ஆங்கி லத்தை விட்டு விட முடியவி ல்லை. உலகத்தைக் காட்டும் கண்ணாடியாம் ஆங்கிலத்தை நாம் விட்டுவிடவும் முடியாது. எனினும் தமிழன்னை தன் முத லிடத்தைப் பெறவேண்டாவா? மக்கள் பேசும் மொழியை மக் களரசு பயன்படுத்த வேண்டா வா? யாருக்காக ஆட்சி நடைபெறுகின்றதோ அவர்களின் மொழியிலேயே அரசாணைகள் வெளிவர வேண்டாவா? இக்கருத் துக்களையெல்லாம் எண்ணி, தமிழக அரசு செயற்படத் தொட ங்கியது. தமிழகத்தில் தமிழ் மொழிதான் ஆட்சி மொழியாகும் என அறிவிக்க முன்வந்தது. இதற்கு ஒரு சட்டமே தேவைப் பட்டது! வியப்பினும் வியப்பாக தோன்றும் இது, உண்மையிலும் உண்மையல்லவா? தமிழை ஆட்சி மொழியாக அறிவித்த சட்டம் 1954இல் நிறைவேற்றப் பெற்றது.

### தமிழால் முடியுமா?

அரியணையில் தமிழன்னை வீற்றிருப்பாள் என அறிவிக்கப் பெற்ற பின் அச்சமும் ஐயமும் எழுந்தன.

''உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''

என்றார் அல்லவா உலகப் பெரியார் வள்ளுவர். சில காலம் தமிழன் செத்துப் போனான்! திடீரெனப்புதிய பிறவி எடுத்தான்! பழைய தமிழை மற ந்து போனான். உறங்கியவன் தன்னை செத்தவனாகவே எண் ணிக் கொண்டான்! தமிழில் எழுத முடியுமா என்னும் பொரு ந்தாக் கேள்வியை எழுப்பி விட்டான். ஆங்கிலத்தைப் போல் தமிழில் நுண்ணிய கருத்துக் களை எண்ணிச் சொல்ல இய லுமா என்ற கருத்தைக் கேட்டான். தொல்காப்பியத்தை, திருக்குறளை, புறநானூற்றை, பட்டினப்பா லையை இன்னும் எண்ணற்ற ஈடு இணையற்ற நூல்களைப் பெற்று ள்ள தமிழன் தான் கேட்ட கேள்வி கள் தாம் இவை! தமிழிலே முடியுமென்னும் விடை தடையி ன்றிக் கிடைத்தது. கல்வெட்டை யும், செப்பேட்டையும் படிக்கத் தெரிந்து கொண்டால் போதுமே! தமிழன், தன்னுடைய ஆட்சியின் சிறப்பையெலல்லாம் கல்லிலும் செம்பிலும் பொறித்து வைத்துள் ளான். கல்லிலும் செம்பிலும் தானே பொது மக்களுக்குக் கடவுள் காட்சி தருகின்றார்! ஆகவே, அவற்றி லேயே தம் வரலாற்றை செதுக்கி வைத்தான் தமிழன். ஆட்சியின் சிறப்பைக் கூறுமிடமெல்லாம் ஆட்சிச் சொற்கள் அணி அணியா கத் திரண்டு நிற்பதில் வியப் பென்ன? அரசனின் ஆணைக்கு கட்டுப்பட்ட எண்ணற்ற தலைவர் கள், அலுவலர்கள், அலுவலகங் கள், குழுக்கள், பட்டப் பெயர்கள், திருவிழாக்கள் அனைத்திற்கும் சொற்கள் கல்வெட்டுக்களிலேயே காணக்கிடைக்கும்.

### பொருத்தமான சொற்கள்

திருவானைக்கா கல்வெட்டிலே 'முதுகண்' என்னும் அரியசொல் அமைந்து கிடக்கின் றது. முதுகண் என்றால் முதுமை யான கண் எனச் சொல்லத் தேவையில்லை. இளைய கண்ணு க்கு எதிர்ச்சொல் முதுமையான கண். இளையகண்ணால் இந்த உலகத்து வஞ்சனைகளையெல் லாம் அறிந்து கொள்ள முடியாது! ஆனால் முதிய கண்ணோ ஆழ்ந்து பார்க்கும் திறனுடையது! இளைய கண்ணுக்கு முதிய கண்ணின் துணை தேவையாகும். தக்க வயது வரா இளைஞர்களுக்கு உத வியாக இருப்போரை 'காப்புப் பொறுப்பாளர்' என இன்று கூறு கின்றோம். '**Guardian**' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு முதுகண் என்னும் தமிழ்ச்சொல் பொரு த்தமானதென்று சொன்னால் மட் டும் போதாது; சுவையுடையது என் றும் சொல்ல வேண்டும்.

### ஆட்சிச் சொற்கள்

இலக்கியத்திலே ஆட்சிச் சொற்கள் இல்லையா? திருக் குறளை மட்டும் எடுத்துக் கொண்டு பார்ப்போமே:

''தாளாற்றித் தந்தபொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு'

என்கிறார் வான் புகழ் வள்ளுவர். பிறருக்கு உதவுவோர் வேளாளர். அவர் செய்யும் அற வழித் தொழில் 'வேளாண்மை' '**Agriculture**' என்னும் சொல் லுக்கு இதை விட உயர்ந்த சொல் அமைய முடியுமோ? எழுதுகோல் என்றால் இன்றும் சிலர் ஏளனம் செய்கின்றனர்.

'எழுதுங்கால் கோல் காண கண்ணே போல் கொண் கண்
பழிகாணேன் கண்ட இடத்து'

என்றாரே பொய்யிற் புலவர். அங்கே எழுதுகோல் எத் துணை எழிலோடு திகழ்கின்றது. அரசு அலுவலகங்களிலேயே கட் டுக்கள் ஆமை வேகத்தில் நகர்ந்து செல்கின்றன என நாம் சொல்கின் றோம். நத்தையூர்வது போல என்று கூடச் சொல்வோம். காலம் தாழ்த்திக் கொண்டே சொல் வார்கள். என்றும் காலதாமதம் கூடாதென்றும் சொல்வோம்.

# அழகு தமிழ்

'நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடு நீரார் காமக்கலன'

என்றார் செந்நாப்போதார். '**Delay**' என்னும் ஆங்கிலச் சொல்லோடு 'நெடுநீர்' எவ்வளவு இனிமையாகப் பொருந்துகின்றது! 'நெடுநீர்மையை விலக்க வேண் டும்' என்று எழுதிப் பார்த்தால் தேன் போல இனிக்கும். திருக் குறளில் பொருட்பால் முழுவதிலும் ஆட்சிச்சொற்களை அடுக்கடுக் காகக் காணலாம். தொட்ட இடமெ ல்லாம் ஆட்சி மொழி தோன்றக் காணலாம்.

### அரிய சொற்கள்

வானவூர்தி, அங்காடி, வலவன் (**Pilot**) புறநடை (**Exception**) உழைச்செல்வார் (**Nurse**) என்னும் அரியசொற் களையெல்லாம் நமக்கு அள்ளி வழங்குகின்றன பழைய இலக்கிய ங்கள். 'மூர்மார்க்கெட்', 'மூர் அங் காடி' என்னும் அழகிய பெயரைக் கொண்டதல்லவா. சிலப்பதிகாரம் செப்புகின்ற நாளங்காடி , அல்ல ங்காடி அனைத்தும் நம் சென்னை திருநகரிலே மின்னி ஒளிர வேண் டாவா? சூப்பர் மார்க்கெட்டை 'பேரங்காடி' என்று அழைத்தால் என்ன? கணக்கில் அடங்கா ஆட்சி மொழிச் சொற்கள் நமக்குக் கிடை த்துள்ளன. முயன்றால் மேலும் பல சொற்கள் நமக்கு கிடைக்கும். எத் தனையோ கல்வெட்டுக்கள் கால வெள்ளத்தில் சிதைந்து போய் விட்டன. எத்தனையோ இலக்கிய நூல்கள் ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. இவ ற்றால் எத்தனையோ அரிய ஆட் சிச் சொற்களை நாம் இழந்திரு க்கக் கூடும். மேலும் ஆட்சிமுறை கள் நாளுக்கு நாள் விரிவடைந்தும் புதுமை பெற்றும் விளங்குகின்றன. எனவே புதிய ஆட்சிச் சொற்கள் தேவையல்லவா? இவற்றை ஆக் கிக் கொள்ளும் திறன் தமிழனுக் குண்டா? தமிழ் மொழியிலே வேற்று மொழியிலும் காணப் பெறாத அளவிற்குத் தன்வினைச் சொற்களும், பிறவினைச்சொற்க ளும் பெருகி நிற்கின்றன. வேர்ச் சொற்கள் மிகவும் ஏராளம். தூய தமிழ் எழுத்துக்களும் தமிழ் மண் ணிலே ஏராளம். ஒரு மொழியில் புதிய சொற்களை ஆக்குவதில் என்ன தொல்லை இருக்க முடியும்? அரும்பு, முகை, போது, மலர், அலர், வீ, எனப் பூவின் பருவநிலை களை வகுத்தவன் தமிழன். பேதை, பெதும்பை, மங்கை, மடந் தை அரிவை, தெரிவை, பேரிளம் பெண் எனப் பெண்களின் பருவ நிலைகளை வகுத்தவன் தமிழன். இயம்புதல், மொழிதல், சாற்றுதல், கழறுதல், விளம்புதல், செப்புதல், அறைதல் எனச் சொல்வதற்குரிய சொற்களை அடுக்கிச் சொன்னவன் தமிழன். ஞாயிறு கதிரவன், சுடர வன், பருதி, எல்லோன், வெய்யி லோன், வெய்யோன் எனப் பகலவ னுக்குப் பல பெயர்களைக் கண்ட வன் தமிழன். ஓங்கல், பிறங்கல், பொருப்பு, வெற்பு என மலையின் வகையை அறிந்து பெயரிட்டவன் தமிழன். பண்ணை, பனை, செய், கழனி, பழனம், புலம், வரப்புள் என்னும் பல சொற்களால் விளை நிலத்தை விளக்கியவன் தமிழன். அவனுக்கா புதிய சொற்களை ஆக்க முடியாது?

### தமிழின் இனிமை

எழுத எழுதத்தான் தமிழின் இனிப்புத் தெரியும்.

'செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்'

என்னும் குறள் மணிக்கு உரை கூறும் பரிமேலழகர் 'நிலத் துக்குரியவன் அதன் கண் நாடோ றுஞ் சென்று பார்த்து அடுத்தன செய்யாது மடிந்திருக்குமாயின்' எனக் கூறிச் செல்கிறார். 'அடுத்தன செய்யாது என்னும் சொற்கள் நம் உள்ளத்தைக் கவர்கின்றன. அவ ற்றைச் சிறிது மாற்றியும் உடன் பாட்டு வகையிலும் எழுதுவோ மாயின் 'அடுத்தன செய்க' என்னும் தொடர் பிறக்கும். **Please take further action** என்று சொல்லி நிறுத்தி, 'அடுத்தன செய்க' என்று சொல்லிப் பார்ப்போம். 'அடுத்தாற் போல் செய்ய வேண்டுவன 'அனை த்தையும் செய்க' என்பதை இதை விடச் சுருக்கமாகவும், இனிமையா கவும் சொல்ல இயலுமோ?

### சொல்லாக்கம்

பாண்டியநாடு முத்துடைத்து என்று பாடினார் பைந்தமிழ் பாட்டி ஔவையார். முத்துக் குளித்தல் தமிழகத்தின் ஒரு முக்கியமான தொழில். குளிக்கக் குளிக்க முத்து க்கள் கிடைக்கும். ஒரே முழுக்கில் முத்துக் கிடைக்குமா? புதிய சொற் களை ஆக்கும் போது முத்துக் குளிப்பவரின் நினைவுதான் நமக்கு வரும். **Dearness allowance**, என்பதை எடுத்துக் கொண்டால் சொல்லமைப்புக்கள் படிப்படியாக செம்மையுற்று வந்துள்ளதைக் காணலாம். பஞ்சப்படி என்று எழுதி னோம்! அது, **Faminee allowance** என்ற எண்ணத்தை உண்டு பண்ணியது! உடனே கிராக்கிப்படி என்று சொல்லிப் பார்த்து அது வும் நன்றாக இல்லாத நிலையு ணர்ந்து கடைசியில் அகவிலை ப்படி என அருமையாக அமைத் துக் கொண்டோம். இதேபோல் சர்க்கார், துரைத்தனமாக மாறி யது; துரைத்தனம் அரசாங்கமாக மாறியது; அரசாங்கம் அரசாக மாறியது. அரசுகள் மாறிய வர லாற்றைச் சொற்களே நமக்குத் தொடுத்துச் செல்கின்றன! அரசு என்னும் அருமையான சொல் வள்ளுவரின் பொருட்பாலை நினைவூட்டி நிற்கின்றது. சிபாரிசு பரிந்துரையாய் மாறிப் பயின்று வருகின்றது. தகுதி இல்லாதார்க் கும் பரிந்துரை பயன்பட்டு விடுமே என அஞ்சி இப்போது தகுதி பற்றிய உரை எனக் கொண்டு, 'தகவுரை' எனக் கூறினால் என்ன என்ற கருத்து எழுந்துள்ளது. பாராளுமன்றம் இப்போது நாடா ளுமன்றமாக புதுப் பொலிவு பெற்றுள்ளது. இவற்றால் நாம் அறிவதென்ன? புடைக்கப் புடை க்க தூசு போகும். துலக்க துல க்க மெருகேறும்.

புதிய அரசு வந்த பிறகு அரிய இனிய தனித் தமிழ் சொற்கள் கொஞ்சி விளையாடு கின்றன. சேரனும் , சோழனும், பாண்டியனும் மீண்டும் தமிழகத் திலே அரசோச்ச வந்து விட்டார் கள். நல்ல தமிழில் அரசு ஆணைகள் பிறப்பிக்கப்படுகின் றன. அலுவலகக் கட்டுக்கள் முத்துமுத்தான தமிழ்ச் சொற்க ளைத் தாங்கிப் பெருமை பெறு கின்றன. புலவர்கள் கனவுகண்ட பொற்காலம் இன்று தோன்றி விட்டது. 'காவல்துறையினர் கவ னத்திற்கு' என அழகு தமிழில் தமிழக முதல்வர் அறிஞர் அண் ணா அவர்கள் அலுவலக ஏட்டிலே எழுதியுள்ளார். இதனை எண்ணும் தோறும் உள்ளம் துள்ளியெழும்.

கோ.முத்துப்பிள்ளை

### சுடரொளி வீசி சிறப்பதாகுக

தமிழன்னை என்று பிறந்தாளென நாம் அறிந்த முதற் புலவராம் தொல்காப்பியருக்கே தெரியாது. அமிழ்தினும் இனிய செந்தமிழ் மொழியில் எத்துணைச் சொற்கள் இருக்கின்றதெனப் பன் மொழிப் புலவர்களுக்கே தெரி யாது. கிட்டாத நூல்கள் போகக் கிட்டிய நூல்கள் கடலினுக்கொப் பாகும். மங்கை ஒருத்தி தரும் சுகமும் மாத்தமிழுக்கு ஈடில்லை என்றார் புதுமைப்புலவர். இலக்கி யத்தில் வெற்றி பெற்றாள் தமிழ ன்னை. ஆட்சி மொழியில் வெற்றி பெறுகிறாள் தமிழன்னை; அவள் என்றும் வெற்றி பெறுவாள். தமிழ் கூறும் நல்லுலகிற்கெல்லாம் வழி காட்டுவாள்.

'வாழ்க வாழ்க தமிழன்னாய்!
வணங்கி மகிழ்வோம் உன்
முன்னே!

* * *



# கேள்வி ஞானம்

தொலைதூர
விமானமா?

தூக்கமாத்திரை
இட்டுக்கொள்

விமானம் விரைந்தால்
தூரம் தெரியாது

விமானம் விழுந்தால்
துக்கம் தெரியாது

அடுத்தவன்
மனைவிமேல்
ஆசை கொள்ளாதே

அது
நல்ல பாம்பின்
படத்தை
நாவால் ஸ்பரிசிப்பது

நாற்பது வரை
பணத்தை நீ
தேட வேண்டும்

நாற்பதின்பின்
பணம் உன்னைத்
தேட வேண்டும்

படுக்கையறையில்.....

எழுதுகோல்
தொலைபேசி
எதுவும் வைக்காதே

உன் சுத்தமான சுதந்திரம்
அந்தச்
சுவர்களுக்குள்ளேதான்

அறிவாளியாய் இரு
முட்டாளாய் நடி

கன்னக்குழி
அழகென்று
பெண்ணைப்
புகழாதே

அதுவே உன்
சவக்குழியாய்
இருக்கலாம்

சாப்பாட்டு மேஜையும்
கட்டிலும்
தொட முடியாத
தூரத்தில்
இருக்கட்டும்

அந்தத் தூரம்
உன் ஆயுளின் நீளம்

தும்மல் காதல்
இரண்டையும்
வெட்கப்படாமல்
வெளிப்படுத்து

அடக்கினால்
வேண்டாத இடத்தில்
வெளிப்பட்டுவிடும்

வாய் நீராடும்
வாய்ப்புள்ள
போதெல்லாம்
சுட்டுவிரல் கொண்டு
தொட்டழுத்து ஈறுகளை

பரவும் ரத்தம் பலம்

ஈறு கெட்டால்
சொல் எஞ்சும்

ஈறு கெட்டால்
பல் எஞ்சுமா?

புது மனைவியின்
தாய்மை

புதுத் தொழிலில்
லாபம்

இரண்டையும்
மூன்றாண்டு
எதிர்பாராதே

மாட்டுவால் 'சூப்'
மன்மத பானமாம்

துரும்பும் அதனால்
இரும்பாய் மாறுமாம்

இப்போது புரிகிறது

மாடுபிடித்தவனுக்கே
மணமகள் ஏன் என்று

எப்போதும்
கைக்குட்டை
இரண்டு கொள்

தும்மலுக்கொன்று
தூய்மைக்கொன்று

நாய்குரைத்தால்
ஓடாதே

அச்சப்படல்
நாய்க்கு
அழைப்புமடல்

எளியதன் பலவீனம்
வலியதன் பலம்

பயணமா?
பெட்டியிலும்
வயிற்றிலும்
காலியிடம்
இருக்கட்டும்

தடுமனா
மருந்து - சாப்பாடு

காய்ச்சலா
மருந்து - பட்டினி

பெரிய மனித
தரிசனமா?

அதிகாலை போ

இல்லையேல் -
அவனினும் பெரியோன் தேடி
அவன் போயிருப்பான்
ரகசியமா?

காதலிக்குச் சொல்

ஒரு காதில் வாங்கி
மறுகாதில் விடுவாள்

மனைவிக்குச்
சொல்லாதே

இருகாதில் வாங்கி
வாய்வழி விடுவாள்

பல்துலக்கும் போதே
உன்
சீப்புக்கும் பல் துலக்கு

தலையில் உள்ள
மண்ணுக்குச்
சாட்சி வேறு எதற்கு?

உருவுகண்டு எள்ளாதே

ஒவ்வொரு விதையிலும்
ஒரு விருட்சம்
ஒளிந்திருக்கிறது.

அக்பரின் பிரசவம்
பாலைவனத்தில்
நிகழ்ந்திருக்கிறது.

# மன்னன் சாலமனுக்கு மகத்தான சோதனை!

கடந்த ஆண்டின் பிற்பாதி போன்றே 2002ஆம் ஆண்டின் பிற்பாதியும் பாராளுமன்றத்தை மையமாகக் கொண்டே நாடு அல்லோல கல்லோலப்பட்டு போகிறது போல் தெரிகிறது. 2001ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை அன்றைய எதிர்க்கட்சி முன்வைப்பதற்கு முனைந்து நின்றது. அதனைத் தொடர்ந்து கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டது. எதிர்க் கட்சியினர் பாராளுமன்றக் கட்டடத்தினுள் செல்ல முடியாதபடி பொலிஸாரால் தடுக்கப்பட்டனர். வீதி ஆர்ப்பாட்டங்கள் தலை யெடுத்தன. பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் எதிர்க்கட்சி ஆதரவாளர் இருவர் பலியாகினர். பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பின் டிசம்பரில் தேர்தல் நடைபெற்றது. அண்மைக்கால "பாரம்பரியத்திற்கமைவாக" தேர்தல் வன்முறைகள் கட்டுக்கடங்காமல் பெருகின.புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தது.

இதே போன்ற அடிப்படைகள் இவ்வாண்டின் ஜுலையிலும் தலையை நீட்டித் தம்மை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளன. இம்முறை தொடக்கமே தடல்புடலாக இருந்தது. பிரச்சினை அமைச்சரவையிலேயே தொடங்கிவிட்டது. உயர் தொழில்நுட்பம் வாய்ந்த ஒலி, ஒளிப்பதிவு சாதனங்கள் உள்ளமைந்த கைப்பையை ஜனாதிபதி கொள்வனவு செய்ததாகவும், அதனை அமைச்சரவைக்குக் கொண்டு வந்ததாகவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க சர்ச்சையைக் கிளப்பியதுமே பிரச்சினைகள் வெடித்து விட்டன.

### உளவாளிகளாக அழகிகள்

அமைச்சரவையின் இரகசியங்கள் மிகவும் உயர் மட்டத்தில் பேணப்பட வேண்டியவை. குறிப்பாக யுத்தகாலங்களில் அமைச்சரவையின் இரகசியங்கள் வெளியே கசிவதனால் நாட்டிற்கே ஆபத்தாகிவிடும். சாதாரண காலங்களில் ஆளும் கட்சிகளோ, அமைச்சர்களோ, பிரதமர்களோ பதவியை இழக்கும் அளவிற்குத் தாற்பரியம் மிக்க விடயம் இது. அமைச்சரவை இரகசியங்களை அறிவதற்கென்றே பெரும் பணச் செலவில் அழகிகளை உளவாளிகளாக உலவவிடுவது பகை நாடுகளின் இரகசிய இயக்கங்களின் வழக்கமாக இருந்தது வரலாறு. இரண்டாம் உலக யுத்த காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடந்தன. அமைச்சர்களாகப் பதவியேற்பவர்கள் இரகசிய காப்பு சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்வது வழக்கம். இத்தனை முக்கியமான அமைச்சரவையினுள் இரகசியமான முறையில் இயங்கும் மர்ம ஒலி/ஒளிப்பதிவு சாதனங்கள் கொண்டு வரப்படுமாயின் அதன் தாற்பரியம் வார்த்தைகளில் அடங்காது. நவீன தொழில் நுட்பசாதனங்கள் உலகம்

## இரு தாயார் ஒரு பிள்ளை பெறுவதுண்டா!!

இன்றைய காலத்தில் இத்தகைய இரகசிய நடவடிக்கைகள் சாத்தியமானவையே. அண்மையில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸை இராஜினாமா செய்ய வைத்ததும், பெரும் அமளி துமளியை இந்தியாவின் அரசியலில் ஏற்படுத்தியதும் "ரெஹெல் கா டொட்கொம்" என்ற அந்த நிறுவனம் பயன்படுத்திய இரகசிய கமராவேயாகும்.

ஆனால் வெடிகுண்டு கலாசாரத்தில் இரண்டு தசாப்தங்கள் ஊறிப்போன எமது நாட்டில் வெடிகுண்டுக்குச் சாதனை புரியும் வல்லமை இல்லாதிருக்குமா? அமைச்சரவையில் பேய் போல எழுந்த இரகசியக்கமரா விவகாரம் வெடிகுண்டு என்ற சொல்லினால் பெட்டிப்பாம்பாக அடங்கிவிட்டது. திசை திரும்பி விட்டது. அது பல கோணங்களிலிருந்து இப்போது தாக்கங்களைக் கொடுக்க ஆரம்பித்துள்ளது. தன்னை ஒருபடிகை என்று வேடிக்கையாகக் காட்டிக் கொள்ளும் பாங்கில் பொலநறுவையில் நடித்துக் காட்டியது ஒருபுறமிருக்க, எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தில் வெடிகுண்டு பற்றிய அமைச்சர் ரவி கருணா நாயக்காவின் கதையை அமளிதுமளியாக மாற்றி விட்டனர்.

### பாராளுமன்றில் கடும் போக்கு

ஜனாதிபதி எடுக்கும் எந்த முடிவையும் ஏகமனதாக ஆதரிப்பதென்று பொ.ஐ.மு. எம்பிக்கள் தீர்மானித்தது மட்டுமன்றி இனிமேல் பாராளுமன்றத்தில் அரசாங்கத்துடன் கடுமையாக நடந்து கொள்வதெனவும் தீர்மானித்துள்ளனர். ரவி கருணாநாயக்கவின் பேச்சுக்களை இடைமறிப்பதும், குழப்புவது என்றும் தீர்மானித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையிலேயே அமைச்சர்கள் திலக்மாரப்பன,ஜோன் அமரதுங்க, ரவி கருணாநாயக்க ஆகியோர்களுக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் விவாதிக்கப்படவுள்ளன. உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒகஸ்ட் 19ஆம் திகதியிலிருந்து நான்கு நாட்களுக்கு நடைபெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ரவி கருணாநாயக்கவுக்கெதிரான பிரேரணை அடுத்தமாதமே எடுத்துக் கொள்ளப்படலாம்.

### வீரவன்சவின் வேதனை

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கெதிராக 'நுஆ' தலைவி பேரியல் அஷ்ரப்பினால் பிரேரணை சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. இதனை எதிர்க் கட்சிகள் கூட்டாகச் சமர்ப்பிக்க விரும்புவதாக தெரிவித்த ஜே.வி.பியின் விமல் வீரவன்ச அதற்கான காரணங்களையும் கூறியிருக்கிறார். புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுவதற்கு முன் இராணுவக்கட்டுப்பாட்டில் வடக்கு - கிழக்கில் வாழ்ந்த மக்கள் இப்பொழுது புலிகளின் நியாயாதிக்கத்திற்குள் விடப்பட்டிருக்கின்றார்கள். இப்பகுதி மக்கள் அமைதியான வாழ்க்கையை நடத்துவதற்கு அங்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பணியைப் பாதுகாப்பு அமைச்சர் கைகழுவி விட்டுவிட்டார் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். சுருக்கமாகக் கூறுவதாயின் புலிகளிடமிருந்து தமிழ்மக்களை காப்பாற்றப் பாதுகாப்பு அமைச்சர் தவறிவிட்டார் என்று வீரவன்ச வேதனைப்படுகிறார். தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையை வீரவன்ச இராணுவத் தலைமையினதும் போர் வெறியர்களினதும் கண்களுக் கூடாகவே காண்கிறார் என்பது தெரிகிறது.

வேறு ஒரு விதமாக ஜனாதிபதியும் ஒரே குறிக்கோளை வெளிப்படுத்துகிறார். வெண்டா மரை இயக்கத்தின் தொடர்ச்சியே இது எனக்கூறி அவர் இனங்களுக்கிடையே நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் தேசிய கலந்துரையாடல் ஒன்றை தொடக்கி வைத்துள்ளார். அங்குராப்பணக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் காவல்துறை வெற்றிடங்களை விளம்பரம் செய்திருக்கிறார்கள். நீதிமன்றங்களை அமைத்து வருகிறார்கள். ஈழச்சட்டக் கல்லூரியை அமைக்கிறார்கள். இவற்றிற்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தவறிவிட்டது என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

படைவீரர்களுக்கு விருது வழங்கும் வைபவத்தில் பேசிய அவர் எதிரிகள் ஆபத்தானவர்கள், மிகவும் தந்திரமாக செயற்படக் கூடியவர்கள். அவர்களின் நகர்வுகள் குறித்து முப்படையினரும் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். எமது படையினர் இந்த யுத்தத்தை வெற்றிகரமாக முடிக்கவே எண்ணம் கொண்டுள்ளனர் என்பது எனது எதிர்பார்ப்பு. வெற்றிகரமாக யுத்தத்தை முடிப்பதென்பது பெரும்பான்மையினரான சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தாகவும், அதேவேளை, ஏனைய இன, மத, மொழிப் பிரிவினருக்கு சமமான உரிமை, சுதந்திரம், நியாயம் என்பவற்றுடன் ஒரே அரசின் கீழ் வாழ்கின்ற ரீதியில் தீர்வொன்றை ஏற்படுத்துவதாகும்.

### சமாதானம் அவசரம்

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. அதனை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். இதற்காகத்தான் சமாதானம் அவசரதேவையாகின்றது. அப்பாவி மக்கள் குண்டு வெடிப்புகளில் (குண்டு வீச்சினாலல்ல!) இறப்பது தொடரக்கூடாது இவ்வாறு அவர் கருத்துக்கள் தெரிவித்தார்.

இன்றைய நிலையில் தேசியப் பிரச்சினைகள் விடயத்தில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் இணைந்து செயற்படத் தேவை இருக்கிறது. அந்தத்திசையில் ஒரு துரும்பளவாவது முன்னேற்றம் ஏற்படுகிறதா என்பதை உற்று நோக்கியபடி மனிதாபிமானிகள் காத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வாயில் மண்தான் என்னுமளவுக்கு விடயங்கள் நடைபெறுகின்றன. அமைச்சர்கள் நீக்கும் அரசியற் சட்டத்தின் சரத்துகள் பற்றிய சர்ச்சை உச்சக் கட்டத்திற்கு வந்திருக்கிறது. போதாததற்கு பிரதமரையும் நீக்கும் தடங்கலற்ற அதிகாரம் கூட தன்னிடம் இருப்பதாக ஜனாதிபதி திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

இவ்வகைச் சர்ச்சைகளின் அதிகரிப்பையும். பொ.ஐ.முவின் பாராளுமன்றக்குழு இனிமேல் பாராளுமன்றத்தில் கடுமையாக நடந்து கொள்வது என்று எடுத்திருக்கும் தீர்மானத்தையும், ஜனாதிபதியின் அறிக்கைகளின் கடுமையான தொனியும். இனிமேல் நடக்கவிருப்பவை கடந்த ஆண்டு இக்காலப்பகுதியில் நிகழ்ந்த சாகசங்கள் போன்றும் அவற்றை விடவும் தீவிரமானவையாகவும் இருக்கலாம் என்று சிந்திக்க வைக்கின்றன.

### ஆழம் அறியாமல் காலை விட்ட ஹக்கீம்

முன்னைய பொ.ஐ.முவின் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மீது

**சர்வன்**

கடந்த ஆண்டில் ஆழமறியாமல் காலை விட்டதில் அரசாங்கமே கவிழ்ந்தது. சட்ட அதிகாரம் இருக்கிறது என்பதால் தூண்டப்பட்டு ஆற்றும் கருமங்கள் கையில் இருப்பதையும் இழக்க வைத்து விடும் என்பதற்கு அது நல்ல உதாரணம்.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு அரசாங்கம் ஆர்வம் காட்டுகிறது. ஒவ்வொரு அமைச்சராக உலக நாடுகளெல்லாவற்றையும் சுற்றி வந்து ஆதரவு தேடுகிறது. பிரதமர் அமெரிக்க விஜயத்தை முடித்துக் கொண்டு சர்வதேசப் பாதுகாப்பு கிடைத்திருக்கிறது என்கிறார். இதேவேளை, அதிகாரங்களைக் காட்டி அச்சுறுத்துவதும் பாராளுமன்ற அதிகாரத்தைப் பெறும் ஆயத்தங்களைச் செய்வதிலும் பொ.ஐ.மு. அவசரம் காட்டுகிறது. மாகாண மட்டக்கட்சித் தொண்டர்களின் கூட்டங்களை அது அவசரமாக நடத்துகிறது. ஆயத்தம் எதற்காக? உலகத்தைச் சுற்றி வந்த பிரதமருக்கு மாம்பழம் கிடைக்குமா? வாக்காளர்களையே சுற்றிச்சுற்றி வரும் ஜனாதிபதிக்கு மாம்பழம் கிடைக்குமா?


* * *

# மனையடி சாஸ்திரம்

## சாஸ்திரப்படி வீடு கட்டுவது எப்படி?

மனிதனின் அத்தியாவசியமான தேவைகளில், மிகவும் முக்கியமானவை மூன்று, உணவு, உடை, உறையுள் என்ற அந்த மூன்றில் 'உறையுள்' என்பது அவன் வசிக்கும் வீட்டைக் குறிக்கும். ஒவ்வொரு மனிதனுக்கும், அவன் வளர்ந்து, வாலிபப்பருவமடைந்து, திருமணம் செய்து இல்லற இன்பத்தை அனுபவித்து, இனிய மக்கட்பேறுகளையடைந்து வசதிகளுடன் வாழ்ந்து வசிப்பதற்கு வீடு மிகவும் முக்கியமானதாகும். மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவும், மானத்தை மறைப்பதற்கு உடையும், உயரிய வாழ்க்கைக்கும், மானம் மரியாதைக்கும், மதிப்புக்கும் மிகவும் தேவைப்படுவது வீடு. வெய்யில், மழை, காற்று, குளிர் ஆகியவற்றிலிருந்து தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொள்வதற்கும், தனது பொருள்களையும், உடைமைகளையும், தனது உற்றார், பெற்றோர், மனைவி மக்கள் ஆகியோரையும், பராமரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் பயன்படுவது - வீடு.

ஆனால், அத்தகைய வீடு ஒன்றைக் கட்டுவதற்கு ஆகும் செலவுகளுக்கு வேண்டிய பொருளாதாரத்தைச் சேகரிப்பதற்குள்ளும், அந்த வீட்டை ஒழுங்காகக்



கட்டி முடிப்பதற்குள்ளும் மனிதனுக்கு ஏற்படும் சிரமத்தைக் கருதித்தான், "கல்யாணத்தைப் பண்ணிப்பார்; வீட்டைக் கட்டிப்பார்" என்ற பழமொழியும் பழக்கத்தில் உள்ளது.

வீடு கட்டுவதற்கு, முதலாவது தேவைப்படுவது மனை, அந்த மனை, மனிதன் வசதியுடன் வாழ்வதற்கும், சௌகரியமாகவும் சுகமாகவும் இருப்பதற்கும் ஏற்ற தன்மையுடையதாக இருக்க வேண்டும்.

"ருணாநுபந்த ரூபேணா பஸு" பத்தினி ஸுதாலய:" என்ற சுலோகத்தின் படி மனிதப் பிறவிகள் இல்லறத்திலிருந்து சுகமாக வாழ்வதற்குரியதான பஸு", பத்தினி. சுதன், வீடு என்ற நான்கு அங்கங்களும் நல்ல முறையில் அமைவது அவரவர் விதிப்படியே என்றும், அவற்றில் மனைகள் அமைவதும், அவற்றிலே வீடுகளை அமைப்பதும், சாஸ்திர முறைப்படியே தவறில் லாமலும் தீங்கில்லாமலும் அமைய வேண்டும் என்பதற்காகத்தான், மயனால் சிற்பசாஸ்திரம் என்ற தலைப்பின் கீழ், மனையடி சாஸ்திரம் என்ற நூல் இயற்றப் பெற்றுள்ளது. பொறியியல் நிபுணர்களும் கட்டிட இயல் நிபுணர்களும், நாகரிக நகரமைப்புத்திட்ட நிபுணர்களும் இந்த நவீன காலத்தில், சிறப்புடன் இந்தத் துறைக்குரிய அறிவு, கல்வி, படிப்பு, ஆற்றல், அனுபவம் அமைந்துள்ளவர்களாக இருப்பதைப் போல, புராதன காலத்திலும் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு கட்டிடத் தொழிலைப்பற்றிய அறிவும் அனுபவமும் ஆற்றலும் இருந்ததோடு, புவியியல், ஜோதிடம் போன்ற அறிவியல் ஞானமும் இருந்திருக்கிறது. அவர்கள் இயற்றிய நூல்களே சாஸ்திரங்களாகும்.

அத்தகைய சாஸ்திரங்களை மதியாமல், அவரவர்களிடம் உள்ள பொருள்களின் திடத்தினால் மனைகள் முதலியவற்றை அமைப்பவர்கள், சாஸ்திரம் தெரியாதவர்களாலும், வேலைக்காரர்களாலும், பூசாரிகளாலும், பஞ்சாங்கம் பார்ப்பவர்களாலும், குறிசொல்பவர்களாலும், முகூர்த்தங்கேட்டு, நினைத்த போதெல்லாம், தாறுமாறான முகூர்த்தங்களைக் கொண்டு, வீடுகளைக் கட்டுவதால், பொருள்களையிழந்து, நிம்மதியின்மை, பிணி, துன்பங்கள், மரணம் போன்ற இன்னல்களை அடைந்து, அந்த மனைகளையும் இழந்து போகிறார்கள் என்ற அனுபவத்தின் அடிப்படையில்தான், இத்தகைய சாஸ்திரங்கள் தோன்றியுள்ளன.

மனை என்பது வீடு கட்ட வேண்டிய பூமியினையும் குறிக்கும், அதில் கட்டப்படவிருக்கும் வீட்டையும் குறிக்கும். வீடு கட்டுவதற்குரிய மனையானது, இயற்கையின் சுற்றுப்புற சூழ்நிலைகள் சிறப்பாக அமையப் பெற்றதாகவும், சாஸ்திரரீதியான அதிர்ஷ்டமும் சுகமும் அளிக்கக் கூடியதாகவும் அமைந்திருக்க வேண்டும். இந்தக் காலத்தில் மனிதனுக்கு இருக்கும் மதிப்பைவிட மனைகளுக்கு இருக்கும் மதிப்பு நாளுக்கு நாள்

**தொகுப்பு**
**வளவன்**

உயர்ந்து கொண்டே வருகிறது என்பதை நாம் அனுபவத்தில் அறிந்துதான் வருகிறோம். பொன்னைவிட மண்ணின் மதிப்பு அதிகரித்து வருகிறது. நாகரிக முறைபபடி நகர வாழ்க்கைக்குரிய வசதிகளுடன் கூடிய இடத்தில் ஒரு வீடு கட்டும் மனை அமையுமானால், அந்த மனைக்கும், அந்த மனையில் கட்டப்பெறும் வீட்டுக்கும் விலை மதிப்பு மிகவும் லாபகரமாகவும் மிகவும் பயனளிப்பதாகவும் இருப்பதாலேயே, குடியிருப்புக்களுக்கு உரிய வாடகைக்கான வீடுகளைக் கட்டுவோருக்கு, பொருளுக்கு, ஆதாயமும் லாபமும் கிடைப்பதோடு, போட்ட முதலுக்கு அழிவோ, சேதாரமோ ஏற்படாமல், ஆதாயம் மட்டுமே அதிகரித்து வருவதை நாம் கண்கூடாக அறிந்து வருகிறோம்.

மனைகளை இயற்றுவோர் முக்கியமாகவுள்ள வாஸ்து தேவனைக் கவனித்தல் அவசியமாகும். வாஸ்து புருஷன் என்பவன்தான் இந்தப் புவிக்கு அதிபன், இந்தப் புவியை பன்னிரண்டு ராசிகளாகச் செய்து, பன்னிரண்டு ராசிகளுக்கும் முறையே மாதங்களை நிச்சயித்து, மாதம் ஒரு ராசியில் படுக்கையிலேயே சஞ்சரிப்பவன், இந்த உலகத்தில் மனைகள் இயற்ற வேண்டுமானால் அவரது படுக்கையில் கால், தலை முதுகு என்னும் மூன்று பாகங்களை விலக்கி, வயிற்றுப்பாகத்துக்குரிய சுபமாதத்தினைக் கண்டு, மனைகட்கு வாசற்கால்கள் அமைக்க வேண்டும் என்று, வாஸ்து தேவனின் இலட்சணங்களைத் தெரிவிக்கும் விடயங்களை அநேகர் கவனியாமல், வாஸ்துபுருஷன் எழுந்திருக்கும் நாட்களையே நன்மையென்று அநேகர் சொல்கின்றதையும்எழுவதையும் கேட்டுப்படித்தும், வாஸ்துதேவன் எழுந்திருக்கும் பொல்லாத நாட்களையே நன்மையென்று அநேகர் சொல்கின்றதையும் எழுவதையும் கேட்டுப்படித்தும், வாஸ்துதேவன் எழுந்திருக்கும் பொல்லாத நாள்களில், மனைகளையியற்றித் துன்பப்படுவோர்களை இன்றும் காணலாம். இந்த வாஸ்து புருஷன் என்பது ஒரு கற்பனைவடிவம் தான். ஆனால் அந்தக் கற்பனையும் அறிவியல் தொடர்புடையதேயாகும்.மாதங்கள் அனைத்தும் சூரிய கிரகத்தின் சஞ்சாரத்தால் உண்டாகின்றன. பூமியும் ஒரு கிரகம்; சூரியனும் ஒரு கிரகம், ஆகையாலும் பூமியானது அதன் ஆகர்ஷ்ண நிலையிலும் சுழற்சியாலும் சிறப்பாக அமையும்.

(தொடரும்....)

## வியாசர் அங்கிள்! காதல் தேர்தலில் வெற்றி பெற என்ன செய்ய வேண்டும்?

*ஜ. சசிகலா யாழ்ப்பாணம்*
● வியாசர் சார்! பெண்கள் ஒல்லியாக இருந்தால் நல்லதா? குண்டாக இருந்தால் நல்லதா? விடைபகரும் ஐயா?

❖ **ஒல்லியா இருந்தாலென்ன குண்டாக இருந்தாலென்ன சமையல் ஆண்கள் பக்கம் தானே.**

*N. P. சங்கர் பொன்னாலை*
● வியாசரே! அமெரிக்காவின் தன்னாதிக்க - சர்வாதிகார வெறியைப் பின்லேடன் என்ற அணுகுண்டு தகர்க்குமா?

❖ **வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு.**

● வியா அங்கிள்! காதல் தேர்தலில் வெற்றி பெற என்ன செய்ய வேண்டும்?



❖ **ஊரைக் கூட்டி வாக்குப் பெற வேண்டும். உஷ்... ஒரு கண்டிசன் திருமணம் செய்தவர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.**

*L.சசிதேவி வல்வெட்டித்துறை*
● உலகில் புத்திசாலிகள் ஆண்களா இல்லை பெண்களா? தகுந்த பதில் தர வேண்டும் வியாசர் சார்?

❖ **பெண்களாவா? பெண்களே தான் போதுமா தாயே!**

*S. இன்பராஜ் மீசாலை*
● மதுபோதையில் வந்து வீட்டில் தொந்தரவு கொடுக்கும் ஆண்களுக்குப் பதிலடி கொடுக்க ஒரு ஐடியா கூறுங்களேன்?

❖ **வீட்டில் உள்ள மற்றவர்களும் மதுபோதையில் இருப்பது போல் நடிக்க வேண்டும்.**

*நந்தன் புலோலியூர்*
● 'ஹெல்மெற் தலைகள்' பற்றி நான்கு வரிக்கவிதை கூறுவீர்களா?

❖ **சொந்தங்களைக் கண்டும் தலையாட்ட முடியாத தலைவிதியின் கவசமே ஹெல்மெற்.**

*க. நிரோஷினி தென்மட்டுவில்*
● ஹலோ வியா மாமா! மாணவிகள் மகளிர் பாடசாலையில் கற்பதா?கலவன் பாடசாலையில் கற்பதா சிறந்தது? காரணம் கூறுங்களேன்.

❖ **கலவன் பாடசாலையில் கற்பதே சிறந்தது. அமெரிக்காவில் ஓர் ஆய்வு செய்தார்கள். இருபது ஆண் குழந்தைகளை பெண்கள் இருப்பதே தெரியாத இடத்தில் வைத்து வளர்த்தார்கள். அதேபோல் பத்து ஆண் குழந்தைகளயும் பத்து பெண் குழந்தைகளையும் ஒன்றாகவே வளர்த்தார்கள். இருபது வருட ஆய்வில் பெண்களையே அறியாமல் வளர்க்கப்பட்ட 20 ஆண்களும் பாலியல் விவகாரங்களில் மிக மோசமாகக் கட்டுப்படுத்த முடியாதவர்களாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.**

*ஜோ.ஜெ.டி கொழும்புத்துறை*
● வை. கோவைக் கைது செய்த அம்மணிக்கும் செம்மணி புகழ் அம்மணிக்கும் தொடர்புண்டா?

❖ **செம்மணி புகழ் அம்மணியின் கணவருக்கும், வை. கோவைக் கைது செய்த அம்மணிக்கும் நடிப்பால் தொடர் புண்டு.**

● வியாசர் சார்! உங்களின் பலம் எது? பலவீனம் எது?

❖ **பலம் ~ நேர்மை**
**பலவீனம் ~ ஏமாற்றத் தெரியாமை.**

*க.கிருஷ்ணன்யாழ்.பல்கலைக்கழகம்*
● வியாசர் சேர்! கோவிலில் 'ஐ லவ் யூ' சொன்னால் செருப்பிருக்காதாமே சொல்லலாமா?




❖ **சொல்லலாம். ஆனால் கோவில் என்றாலும் கச்சான் கடைக்குப் பக்கத்தில் நின்று சொல்லி விடாதீர். செருப்பு பாதுகாப்பாக இருக்குமிடம் அது.**

*எஸ். கவிதரன் சண்டிலிப்பாய்*
● ஐயா! இலட்சங்களே இலட்சியமாய்க் கொண்டிருக்கும் ஆண்கள் பற்றி?

❖ **இலட்சம் கொடுத்து இவரைத் திருமணம் செய்வதில்லை எனப் பெண்கள் எப்போது முடிவெடுக்கிறார்களோ அப்போது இலட்சங்களின் இலட்சியங்கள் உடைந்து போகும்.**

## வியாசரின் பதில்கள்

● சிலர் சொல்லும் சொல் ஒன்றாகவும், செய்யும் செயல் வேறாகவும் காணப்படுகின்றதே. இவர்களைப் பற்றி...?

❖ **நீர் நான்கு விடை தந்திருந்தால் அரசியல் வாதிக்குக் கீழ் கோடிட்டிருப்பேன்.**

*A. அஜித் அரியாலை*
● வியாசர் அங்கிள்! நான் "கொலைகாரனாக" விரும்புகிறேன். அதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டும்?

❖ **ஒரு தகுதியும் வேண்டாம். கொல்லப்படுபவனைத் தெரிந்து கொண்டால் போதும்.**


*ப. அருள் உசன்*
● வியாசரே! கிளின்ரன் வீட்டிற்குப் பெண் பார்க்கப் போகிறேன். போகும்போது பின்லேடனைக் கூட்டிப்போக ஆசை. என் ஆசை நிறைவேறுமா?

❖ **திரௌபதியைப் பார்க்க துச்சாதனைக் கூட்டிச் செல்வதாகவல்லவா உமது கதை இருக்கிறது.**

*போ.திருவேரகன் சாவகச்சேரி*
● வியாசரே! (சம்)பந்தம் உள்ளவர்கள் சம்பந்தப்படும்போது (சம்)பந்தமில்லாதவர்கள் சங்கடப்படுகிறார்களே?

❖ **பதியோடு பசு சேரும்போது பாசத்திற்குக் கவலையாக இருக்காதா என்ன?**


*ஆனந்தன் வியாபாரிமூலை*
● வியாமாமாவே! காதலர்கள்! காப்புறுதி செய்யலாமா?



❖ **உஷ்... உமது கேள்வியைக் கண்டால் காப்புறுதி நிறுவனங்கள் காதல் காப்புறுதியை ஆரம்பித்து விடும். பின்னர் காதலில் வெற்றி என்ற பேச்சுக்கே இடமில்லை.**

## வியா! காதலர்கள் காப்புறுதி செய்யலாமா?

● வியாசர் சார்! ரஜனியின் பாபா வர லேட்டாகுமா?



❖ **கண்ணே கண்ணுறங்கு கண்மணியே கண்ணுறங்கு பாபா வை வா வா எனப் பலர் கூப்பிடுவதால் விரைவில் வந்து விடும் கண்ணே அதுவரை கண்ணுறங்கு.**

*S. K. குணபாலன் அளவெட்டி*
● உங்கள் வாழ்வில் அதிர்ஷ்டம் கிடைத்தது உண்டா? அது எப்படி கிடைத்தது என்று சொல்ல முடியுமா?

❖ **ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் கிடைத்ததுண்டு. எனது காதலியை இன்னொருவன் கட்டிக் கொண்டதுதான் அந்த மாபெரும் அதிர்ஷ்டம்.**

*T. தனரூபினி பருத்தித்துறை*
● வியா சார்! எதிரிகளே நண்பர்களாக மாறும்போது நண்பர்கள் நம்பிக்கைத் துரோகிகளாக மாறுகிறார்களே ஏன்?


❖ **இலங்கை அரசியல்வாதிகளைப் பற்றி இப்படியா கேள்வி கேட்பது.**

## கலியாணத்தைக் கால்கட்டாக நினைக்கும் சில. கணபதிகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*ந. வினோதரன் ஒட்டுவெளியூர்*
● வியாசரே! உங்களின் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் ஒன்று கூறுங்களேன்?

❖ **விடையில்லாத வினாக்களுக்கு விடைபகர்ந்ததை மறக்க முடிவதில்லை.**

*அருந்தா முடமாவடி*
● கலியாணத்தைக் கால்க்கட்டாக நினைக்கும் சில கணபதிகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?



❖ **அந்தக் கணபதிகள் நல்ல கனவான்கள். அன்று சங்கரர், விவேகானந்தர் என்ற வரிசை இன்று வாஜ்பாய், அப்துல் ஹலாம் என்ற தொடர்.**

● வியாசர் சார்! காதல் எனும் போது எப்போது இனிக்கும் எப்போது கசக்கும்?

❖ **கடிதம் ~ இனிக்கும்**
**பிடியாணை ~ கசக்கும்**

*N. P. சங்கர் பொன்னாலை*
● வியாசரே! உள்நாட்டில் பிரச்சினை இருக்க, அயல் நாட்டுப் பிரச்சனைகளுக்கு மத்தியஸ்தம் வகிக்கச் செல்லும் அமைச்சர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

● **தனது மனைவிக்கு அடிப்பவன் மேடையேறி பெண்ணுரிமை பற்றிப் பேசுவதைப் போன்றது.**

*எம். ஸ்ரீவாகினி உரும்பிராய்*
● உண்மையான நட்பின் ஆழம் அறிய ஏதேனும் கருவி இருக்கிறதா?

❖ **இடுக்கண் வரும்போது நட்பின் ஆழம் அறியப்படும்.**

*T. தனரூபினி பருத்தித்துறை*
● வியாசர் சார்! மனிதனை மனிதன் மதிக்கும் காலம் எப்போது வரும்?

❖ **மனிதனை மனிதன் மிதிக்காத காலம் வரும் போது.**

## வியாசர்! கோவிலில் 'ஐ லவ் யூ'சொன்னால் செருப்பிருக்காதாமே சொல்லலாமா?

## வாசகர் இதயநாதம்

சங்குநாதமே.......
ஆக்க பூர்வமான அறிவுக்கு அச்சாணியான ஆர்வத்தைத் தூண்டக் கூடிய அரசியல் அலசலும், இவ்வுலகில் இனிமையாக இதயத்தில் லயித்திருக்கும் இலக்கிய லயமும் கவிஞர்களின் கற்பனை ஊற்றிற்கு கனத்த குரலாக கவிதைக் கலசமும், மௌனத்தின் தேடல்களும் எழுத்தாளர்களின் ஏற்றத்திற்கு ஏணியாய் சிந்தனையைத் தூண்டும் சிறுகதைகளும் சின்னஞ் சிறுசுகளின் சீரிய சிந்தனைக்குச் சிறுவர் உலகமும் மங்கையர் மனம் மகிழ நெகிழ மகளிர் உலகமும் விரசமற்ற வீணற்ற வியத்தகு வித்தை மிக்க வியாசரின் பதில்களும் சிந்தனையைத் தூண்டும் சீரழிவற்ற சினிமாச் சிதறல்களென்ற அனைத்து ஆக்கங்களும் சொற்களால் வர்ணிக்க முடியாதவை. நீ எட்டுத் திக்குகளிற்கும் எட்டி உன் புகழைப் பரப்பி விட்டாய். இனி எல்லாக் கோள்களிற்கும் சென்று உன்புகழைப் பரப்பி வர என் இனிய வாழ்த்துகள்.

ந.வினோதரன்,
ஒட்டுவெளியூர்.

சங்குநாதமே,
உன் ஆக்கங்கள் ஒவ்வொன்றும்
ஜீரணிக்கக் கூடியவை.
உன் வரவு என் போன்றவர்க்கு
ஒரு பொன் வரவு - உன்
வரவினால் என் பேனா மை
அர்த்தப்படும், உன் நாதம்
எங்கும் ஓங்கி ஒலிக்கட்டும்.

ஞாநி,
யாழ்.பல்கலைக் கழகம்.

பலவர்ண நிறங்களில் பவனிவரும் சங்குநாதமே
உன் அட்டைப்பட அழகு பார்ப்பவரைக் கவர்கின்றது
உன் இதழ் ஒவ்வொன்றும் தேன்சுவை மிகுந்தது
சங்குநாதமே வாழ்க உன் பணி, வளர்க உன்புகழ்.

சிந்தனையாளரின் சுவையான அனுபவங்கள்
சிரிக்க வைப்பதோடு சிந்திக்கவும் செய்கின்றது
காலத்தின் கோலத்தைப் படம் பிடிக்கும்
சிறுகதைகள் சிறப்பாக அமைகின்றது

உன்னிடத்து இடம்பெறும் கவிதைக் கலசம்
வளரும் எழுத்தாளருக்கு களமமைத்து கொடுக்கின்றது
மகளிர் உலகமும் இதற்கு விதிவிலக்கல்ல
மங்கையரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகின்றது

வித்தியாசமான பாணியிலே விடையளிக்கும்
வியாசரின் பதில்களும் வரவேற்கவேண்டியது
வாரந்தோறும் இடம்பெறும் மரணவிளையாட்டு
உனது அடுத்த வருகைக்காக ஏங்கச் செய்கின்றது.

எல்லாவற்றையும் விட மௌனத்தின் தேடல்
ஒவ்வொருவரின் மனதிலுள்ள எண்ணக் குமுறல்களை
யதார்த்தத்தோடு இணைத்து வாசகர் தரும் கவிவரிகள்
சங்கு நாதத்திற்கு சிறந்த அணிகலனாக அமைகின்றது.

க. யாழினி,
கரவெட்டி.

ஆயிரம் கருவிகள்
அவனியில் வந்தாலும்
சங்கின் நாதம்
என்றும் அழிந்ததில்லை
- இது போல்
நீயும் அமைந்துவிட்டாய்
சங்கின் பெருமைதனை
தரணிக்கு உணர்த்திவிட
வலம்புரியாய் வலம்வந்து
சங்குநாதமாய்
மலர்ந்து புதன்தோறும்
புன்னகை பூத்து எங்கள்
கைகளில் தவழுகின்றாய்
உன்னில் எத்தனை எழில்
உன்னில் எத்தனை சுவை
உன்னில் எத்தனை
(தமிழ்) மணம்
அத்தனையும் என்றும் ஓயாது
ஒலிக்க வாழ்த்துகின்றேன்.

அருமை அன்பு,
கொற்றையூர்.

திங்கள் தோறும் தெவிட்டா
செய்திகளை
அள்ளி வழங்கும் வார இதழ்
சங்குநாதமே!
உன் சேவைக்கு நிகரே இல்லை.
ஏனென்றால் யாழ் மண்ணிலிருந்து
நான்கு வர்ணத்தில் வெளி வரும்
பெருமையை நீ பெற்றமையிட்டு
பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

S.இன்பராஜ்,
மீசாலை.

வண்ண வண்ண சொல்லெடுத்து
வசந்தமாய் வந்து போகும்
வலம்புரியின் வாரிசே!
திங்கள் தோறும்
எங்கள் உள்ளங்களில்
தங்கும் தமிழ் நாதம்
சங்குநாதமே! நீ வாழ்க!

க.நிரோஷினி,
மட்டுவில்.

ப'க்கட்டும் புகழ்.....!
ஊக்கங்கள் தளராமல்
ஆக்கங்கள் பல சுமந்து
நோக்கங்கள் நல்லதுவாய்
திங்கள் தோறும் காலையில்
எங்கள் கைகளில் தவழும்
சங்கு நாதமே!
பூக்கட்டும் உன்
புகழ் எங்கும்.

ஆனந்தன்,
வியாபாரிமூலை.

# அர்த்தமுள்ள இந்து மதம்



ஆணுக்கு வலது உள்ளங்கையிலும், பெண்ணுக்கு இடது உள்ளங்கையிலும் சுருக்கெழுத்துப்போன்ற இரேகைகளாகப் பொறித்து, இன்ன ஊரில், இன்ன ஜாதியில், இன்ன பெற்றோருக்கு, இன்ன பெயரோடு, இன்ன விநாடியில் இன்னின்ன கிரக நிலையில் பிறக்க வேண்டுமென்று கடவுளே தீர்மானித்து, அதன்படி பிறக்கச் செய்து, அவர் இட்ட பெயரையே இடும் படியாகவும், அவரவர் செய்த புண்ணிய பாவத்திற்கேற்ப இன்ன இன்ன இன்பம், துன்பம் அனுபவித்து வருமாறும் ஆட்சி புரிந்து வருகிறார். அந்தப் பெயரும் சொப்பனத்தில் பாரமுள்ள உடலின் உதவியின்றி, இன்பம், துன்பம் அனுபவிக்கின்ற, பாரமில்லாத உள்ளுடலுக்கே இட்டிருக்கிறார்.

## பூர்வ ஜென்மம்

இந்த அரிய, பெரிய பேருண்மையை முதன் முறையாகக் கேட்கின்ற அனைவரும் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. ஒரு வேளை, நமக்கு மூளைக்கோளாறாக இருக்கலாமோ என்று கூடச் சில ஆத்திரக்காரர்கள் நினைக்கக் கூடும்.

நாம் இதனுடைய உண்மையைச் சோதித்து உணருவதற்காக ரூபாய் ஒருலட்சத்திற்கு மேல் செலவு செய்தபின் இவ்விதம் கூறுகின்றோம்.

திருவள்ளுவர்:

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண் பதறிவு''

என்றும்,

''எப்பொருள் எத்தன்மைத் தாயினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது
அறிவு''

**கவிஞர் கண்ணதாசன்**

என்றும் கூறியிருப்பதனால் நாம் கூறும் இந்த உண்மையைச் சோதித்துப் பார்த்தபின், அதைப் பற்றி ஏதாவது சொல்ல வேண்டுமே தவிர, கேட்டமாத்திரத்தில் யாரும் எதையும் மறுத்தால் அது அறிவுடைமையாகாது.

பெயர்களைக் குறித்து கிறிஸ்துவ வேதநூலில் பிரசங்கி ஆகமம், அதிகாரம் 6,வசனம் 10-ல் ''இருக்கிறவன் எவனும் தோன்று முன்னமே பெயரிடப் பெற்றிருக்கிறான். அவன் மனுஷன் என்பது தெரிந்திருக்கிறது'' என்றும், இரேகை சாஸ்திரத்தைக் குறித்து யோபு ஆகமம், அதிகாரம் 37, வசனம் 7-ல் ''தாம் உண்டாக்கின சகல மனுசரும் தம்மை அறியும்படி சகல மனுஷருடைய கையையும் முத்தரித்துப் போடுகிறார்'' என்றும் கூறியிருக்கிறது.

உதாரணமாக நாகர்கோவில் ஸ்ரீ ஆறுமுக நாவலரது நாடிசாஸ்திர ஏட்டில், அவருடைய பெயரை 'ஐந்தும் ஒன்றும் வதனமெனப் பெயரும் சூட்டி' என்று கண்டிருந்தது. ஐந்து + ஒன்று = ஆறு; வதனம் என்றால் முகம்; ஆறுமுகம் என்பது ஆண்டவன் இட்ட பெயர்.

ஸ்ரீ வைகுண்டத்திலுள்ள ஒரு கத்தோலிக்கக் கிறிஸ்துவ அன்பருக்கு, 'சாவில் ஆறும் சாவில் ஒன்பதும் இவன் தன் நாமம்' என்று கண்டிருந்தது. 'ச' என்ற எழுத்து வரிசையில் ஆறாவது எழுத்து 'சூ'; ஒன்பதாவது எழுத்து 'சை'; அவரது தந்தை இட்ட பெயரும் 'சூசை' என்பதாகும். ஆண்டவன் கொடுத்த பெயரும் 'சூசை' என்பதாகும்.

ஓர் இந்துவைப் போல் மாறு வேஷம் போட்டுக்கொண்டு சென்ற, மதுரையிலுள்ள இஸ்லாமியருக்கு 'அப்துல்ரஹ்மான்' என்ற பெயர் கூறப் பெற்றிருக்கிறது. ஓர் ஆங்கிலேயர் பார்த்த பொழுது, 'முழத்தில் பாதி இவன் தன் நாமம்' என்றிருந்தது. அவரது பெயர் 'ஜான்' என்பதாகும். கோவையில் கௌமார மடத்தை நிறுவிய தலைவருக்கு 'இராமக் குட்டி' என்றும், பின் துறவு பூண்டு 'இராமானந்தர்' ஆவார் என்றும் கண்டிருந்தது. இவற்றின் உண்மைகளை, சென்னை அரசாங்கத்தார் கைரேகைகள் சம்பந்தமாக சப்த ரிஷி நாடியின் பழைய ஏட்டுப் பிரதிகளிலிருந்து பல புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் கந்தர் நாடி, காக்கையர் நாடி, கௌசிகர் நாடி, சீவக - சிந்தாமணி, அநாகத வேதம் முதலிய பிற இரேகை சாஸ்திரங்களும் இருக்கின்றன.

கடவுள் கொடுத்திருக்கும் அவ்விதத் தீர்ப்புகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது.

(தொடரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும் விஞ்ஞானத் துளிகள்

## நியமப்புள்ளி (Z-Score) முறையும் உயர்தரப்பரீட்சை முடிவுகளும்

திரு. S.அறிவழகன்
கணித புள்ளிவிபரவியல் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

க.பொ.த(உ/த) மாணவர்களை அதிர்ச்சியிலும், குழப்பத்திலும் ஆழ்த்தியுள்ள நியமப்புள்ளி (Z-Score) முறையானது, பல்கலைக்கழக அனுமதிக்காக மாணவர்களை வரிசைப்படுத்தும் தேவைக்காக, பரீட்சைத்திணைக்களத்தால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மாணவர்களை வரிசைப்படுத்துவதற்கு கூட்டுப் புள்ளி (aggregate) முறை அளவுகோலாக உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. தற்போது அளவுகோல் மாற்றப்பட்டுள்ளது. எண்பதாம் ஆண்டுகளில் பிரிட்டிஸ் அளவு முறைகளிலிருந்து சர்வதேச (S.I) அளவு முறைக்கு மாறியது போன்றதொரு செயற்பாடே இதுவும். பொதுவாக அளவு கோல்கள் மாறுவதால் வரிசைகள் மாறுவதில்லையாயினும் கூட்டுப்புள்ளி முறை, நியமப்புள்ளி முறை எனும் இவ்விரு அளவுகோல்களாலும் வரிசைகளிலும் மாற்றமேற்படலாம்.

நியமப்புள்ளியினைப் புரிந்து கொள்வதற்கு முதலில் செவ்வன் பரம்பல் பற்றி சிறிது அறிந்திருத்தல் அவசியம்.

### செவ்வன் பரம்பல் (Normal Distribution)

மணி வடிவ வளையியான செவ்வன் பரம்பற் சார்பானது புள்ளி விபரவியலிற்கான ஒரு குறியீடாகக் கொள்ளப்படுமளவிற்கு, புள்ளி விபரவியலில் முக்கியமானதும் பிரபல்யமானதுமாகும்.

செவ்வன் பரம்பற் சார்பானது,

$$f_x(X) = \frac{1}{\sqrt{2\Pi\sigma}} \exp\left(-\frac{1}{2}\left(\frac{x-\mu}{\sigma}\right)^2\right) \quad X \in 1R$$ என அமையும்.

இங்கு $\mu, \sigma$ என்பன இரு பரமானங்கள் (Parameters) ஆகும்.

$\mu$ = குடித்தொகையின் இடை, $\sigma$= குடித்தொகையின் நியம விலகல்.

x என்னும் எழுமாற்று மாறி செவ்வன் பரம்பலை பரமானங்கள் $\sigma,\mu$ உடன் பின்பற்றுகின்றது. எனின் அது புள்ளிவிபரவியலில் பின்வருமாறு வகைக் குறிக்கப்படும். $X \sim N(\mu, \sigma^2)$

செவ்வன் பரம்பலானது மேற்படி $\mu,\sigma$ எனும் பரமானங்களில் தங்கியிருக்கும். உதாரணமாக $X_1$ எனும் எழுமாற்று மாறி $X \sim N(\mu_1, \sigma_1^2)$

மற்றும் $X_2$ எனும் எழுமாற்று மாறி $X_2 \sim N(\mu_2, \sigma_2^2)$ எனும் போது

$X_1.X_2$ என்ற இருஎழுமாற்று மாறிகளையும் ஒப்பு நோக்குவது கடினமாகும். இதற்காக இவற்றை நியமப்படுத்த வேண்டிய தேவை யொன்று எழுகின்றது. இதன் போதுதான் நியமசெவ்வன் பரம்பலின் (Standard Normal Distribution) அவசியம் உணரப்படுகின்றது. நாம் $Z=(x-\mu)/\sigma$ என வரையறுப்போமாயின் இங்கு Z ஆனது நியம செவ்வன் பரம்பலைப் பின்பற்றுகின்றது எனக் கூறப்படும்.

புள்ளிவிபரவியலில் இது $Z \sim N(0,1)$ என வகைக்குறிக்கப்படும். இங்கு குடித்தொகை இடை 0 ஆகவும், நியம விலகல் 1 ஆகவும் இருக்கும். நியம செவ்வன் பரம்பலின் பரமானங்கள் 0உம் 1உம் மாத்திரமே. எனவே வெவ்வேறு செவ்வன் பரம்பலைப் பின்பற்றும் எழுமாற்று மாறிகளை ஒப்புநோக்க வேண்டிய தேவை எழும் போது அவற்றை நியமப்படுத்தல் சிறந்ததொரு வழியாகும்.

### செவ்வன் பரம்பலும் உயர்தரப் பரீட்சை முடிவுகளும்

மைய எல்லைத் தோற்றம் (Central limit theorem) எனும் பிரபல்யமானதொரு புள்ளி விபரவியல் தோற்றத்திற்கமைய, குடித்தொகையின் அளவு முடிவிலியை அணுகும் போது மாதிரி இடைகளின் பரம்பலானது செவ்வன்பரம்பலை $\mu, \sigma/\sqrt{n}$ எனும் பரமானங்களுடன் பின்பற்றும் இங்கு N என்பது மாதிரியின் அளவு.

க.பொ.த.(உ/த) பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திற்கும் பெருந்தொகையான மாணவர்கள் தோற்றுவதால் ஒவ்வொரு பாடத்திலும் மாணவர்கள் பெறுகின்ற புள்ளிகள் செவ்வன் பரம்பலைப் பின்பற்றுவதாகக் கருத முடியும். விபரணப் புள்ளிவிபரவியலின் அடிப்படையில், மாணவர்கள் பெற்ற புள்ளிகளுக்கான மீடிறன் பல்கோணி (histogram) வரையப்பட்டு அதன் நடுப்புள்ளிகளை இணைக்கும் போது செவ்வன் பரம்பலுக்கான மணிவடிவ வளையி பெறப்படுமாயின் மேற்படி எடுகோள் சரியானது எனக் கொள்ளப்படலாம்.

வெவ்வேறு பாடங்களிலும் மாணவர்கள் பெறுகின்ற புள்ளிகள் செவ்வன் பரம்பலைப் பின்பற்றுகின்ற போதிலும் இவை வெவ்வேறு பரமானங்களுடன் செவ்வன் பரம்பலைப் பின்பற்றும். உதாரணமாக பொருளியலில் மாணவர் பெறும் புள்ளிகள் $\mu=42$ உடனும் $\sigma=17.6$உடனும் செவ்வன் பரம்பலையும் புவியியலில் புள்ளிகள் $\mu=54$ உடனும் $\sigma=12.3$ உடனும் செவ்வன் பரம்பலையும் பின்பற்றலாம். இவற்றை ஒப்புநோக்க வேண்டிய தேவை எழும் பொழுது நாம் இவற்றை பொதுவானதான நியமசெவ்வன் பரம்பலுக்கு நியமப்படுத்த வேண்டிய தேவை எழுகின்றது. இதனையே குறித்த ஒரு பாடத்தில் ஒரு மாணவனது நியமப்புள்ளி (Z-Score) என்கிறார்கள்.

$$\text{Z-score} = \frac{\text{மாணவனது உண்மைப்புள்ளி - குடித்தொகை இடை}}{\text{நியமவிலகல்}}$$

$$= \frac{X-\mu}{\sigma}$$

ஒரு குறித்த ஒரு பாடத்தில் ஒரு மாணவனின் நியமப்புள்ளியானது 0 எனின் அவன் சராசரி மாணவனெனவும் நேர்ப் பெறுமானம் எனின் சராசரிக்கு மேலானவனெனவும் மறைப்பெறுமானம் எனின் சராசரிக்குக் கீழானவன் எனவும் கொள்ளலாம்.

### நியமப் புள்ளிகளைக் கணித்தல்

குறித்ததொரு மாணவன் A,B,C எனும் மூன்று பாடங்களிற்குத் தோற்றியுள்ளான் எனின் அவனது நியமப்புள்ளி கீழ்வருமாறு கணிக்கப்படும்.

$X_A$ = பாடம் Aயில் அவன் பெற்ற புள்ளி
$X_B$ - பாடம் Bயில் அவன் பெற்ற புள்ளி
Xc - பாடம் Cயில் அவன் பெற்ற புள்ளி

$\mu_A$ பாடம் Aயிற்கான குடித்தொகை இடைப்புள்ளி
$\mu_B$ பாடம் Bயிற்கான குடித்தொகை இடைப்புள்ளி
$\mu_C$ பாடம் Cயிற்கான குடித்தொகை இடைப்புள்ளி

$\sigma_A$ பாடம் Aயிற்கான நியமவிலகல் $\sigma_B$ பாடம் Bயிற்கான நியமவிலகல்
$\sigma_C$ பாடம் Cயிற்கான நியமவிலகல

என்க.

தற்போது $Z_A = \frac{X_A - \mu_A}{\sigma_A}$ $Z_B = \frac{X_B - \mu_B}{\sigma_B}$ $Z_C = \frac{X_C - \mu_C}{\sigma_C}$

அவனது நியமப்புள்ளி $= \frac{Z_A + Z_B + Z_C}{3}$

முன்னைய கூட்டுப்புள்ளி முறைக்கிணங்க அவனது கூட்டுப் புள்ளி $= X_A + X_B + X_C$ ஆகும்.

### நியமப் புள்ளியினது அனுகூலங்கள்

1) 2001ஆம் ஆண்டு (உ/த) பரீட்சைக்கு பழைய பாடத்திட்டத்திற்கமைய சில மாணவர்கள் 4 பாடங்களுக்கும் புதிய பாடத்திட்டத்திற்கமைய வேறுபலர் 3 பாடங்களுக்கும் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இவ் இரு தொகுதி மாணவர்களையும் ஒப்புநோக்க மாணவர்களின் இடைப்புள்ளியை உபயோகிக்க முடியாது. ஏனெனில் ஒவ்வொரு பாடத்திலும் மாணவர்கள் பெறுகின்ற புள்ளிகள் வேறுவேறு பரமானங்களைக் கொண்டிருக்கும். எனவே இவற்றை ஒப்புநோக்க இவற்றை ஒரே பரமானங்களைக் கொண்டவையாக நியமப்படுத்த வேண்டிய அவசியமெழுகின்றது. எனவே இவ்விருதொகுதி மாணவர்களையும் ஒப்புநோக்க முன்னைய கூட்டுப்புள்ளி முறையைக் காட்டிலும் நியமப்புள்ளி முறையே பொருத்தமானது.

2) கலைத்துறையில் பல்வேறு பாடச்சேர்மானங்கள் உள்ளன. ஆனாலும் எப்பாடச்சேர்மானத்தை மாணவர் தேர்ந்தெடுத்தாலும் அவர்கள் ஒரே பீடத்திற்குத் தெரிவாக வேண்டியவர்கள். எனவே இவர்களுக்கான பொதுவான ஒரு வெட்டுப்புள்ளி நிர்ணயிக்கப்பட வேண்டும். இங்கும் வெவ்வேறு பாடச்சேர்மானங்களை ஒப்புநோக்கக் கூட்டுப்புள்ளி முறையைக் காட்டிலும் நியமப்புள்ளி முறை சிறந்தது.

### நியமப்புள்ளி முறையின் பிரதிகூலங்கள்

நியமப்புள்ளி முறையானது கொள்கையளவில் மிகவும் கவர்ச்சிகரமானதாக உள்ளபோதும் நடைமுறையில் சில பிரச்சினைகள் உள்ளன. குறித்த ஒரு பாடத்தில் மாணவர்கள் பெறும் புள்ளிகள் செவ்வன் பரம்பலைப் பின்பற்றுமாயின் அவற்றிற்கான மீடிறன் பல்கோணியினை வரைந்து நடுப்புள்ளிகளை ஒரு வளையியால் இணைக்கும் போது மணிவடிவ வளையி பெறப்பட வேண்டும். அவ்வாறு பெறப்படாவிடின் நியமப்புள்ளி முறையின் அடிப்படை எடுகோள் கேள்விக்குரியதாகின்றது. இதனால் நியமப்புள்ளி முறையைப் பிரயோகிப்பதால் சில மாணவர்கள் பாதிப்படைய நேரிடலாம்.

1) பெரும்பாலான பாடங்களில் புள்ளிகளின் இவ் மீடிறன் வளையி (Frequency Curve) ஆனது சமச்சீரானது அல்லாமல் ஓராயமானதாக (Skewed) இருக்கலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களுக்கு அப்படங்களில் சித்தியடையாத மாணவர்களாகிய 40புள்ளிகளுக்குக் குறைந்த மாணவர்களைக் குடித்தொகையில் இருந்து தவிர்த்துவிட்டு நியமப்புள்ளி கணிக்கப்படுமாயின் அது ஓரளவு திருத்தமானதாக அமையலாம்.

2) சில பாடங்களுக்கு மீடிறன் வளையிகள் இரு மணிவடிவத்தைப் பெற்றிருக்கும். இதற்குக் குடித்தொகை ஏகவினமற்றிருப்பது காரணமாகலாம். நகர்சார்ந்த மாவட்டங்களும், பின் தங்கிய மாவட்டங்களும் சேர்ந்திருப்பின் அது ஏகவினமான குடித்தொகையாக அமையாது என்பது வெளிப்படை உண்மை. இங்கும் சித்தியடையாத மாணவர்களைக் குடித் தொகையில் இருந்து தவிர்ப்பதன் மூலமும் ஏகவினமற்ற இக் குடித்தொகையை ஏகவினமான படைகளாக்கித் தனித்தனியே நியமப் புள்ளிகளைக் கணிப்பதன் மூலமும் திருத்தமான பெறுபேறுகளைப் பெறலாம்.

3)உயர்கணிதம், வணிகப்புள்ளி விபரவியல் முதலிய சிலபாடங்களுக்குத் தோற்றும் மாணவர் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பது செவ்வன் பரம்பலைப் பின்பற்றுவதான கருதுகோளிற்குப் பொருத்தமானதல்ல.

முடிவாக, வெவ்வேறு பாடங்களையும் பாடச் சேர்மானங்களையும் ஒப்புநோக்குவதற்கு, கூட்டுப் புள்ளி முறையைக் காட்டிலும் நியமப்புள்ளி முறை கொள்கையளவில திருத்தமானதாக உள்ள போதும் செவ்வன் பரம்பலைப் பின்பற்றுவதான எடுகோள் கேள்விக்குரியதாகும் போது அதுவே மிகவும் மோசமானதாகவும் அமைந்து விடலாம்.

நியமப்புள்ளி . முறையானது மரபுசார் புள்ளிவிபரவியலின் ஒரு பரமானம் சார்ந்த முறையாகும். இதற்கான தீர்வாக பரமானம் சாராத (Non - Parametric Methods) முறைகள் யாதாகிலும் அமையலாம் என்பது எதிர்கால ஆராய்ச்சிக்குரியதாகும். ஏனெனில் இப் பரமானம் சாராத முறைகள் எடுகோள்களில் தங்கியிருப்பதில்லை.

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 09**

சரியான விடை :-..........
முழுப்பெயர் :-..........
முகவரி :-..........
..........
கையொப்பம் :-..........

**இவ்வாரப் புதிர்:10**

ஒரு தீவினில் ஒரு தொகுதி விமானங்கள் உள்ளன. அங்குள்ள விமானம் ஒவ்வொன்றினதும் எரிபொருள் தாங்கியானது ஒருமுறை உலகைச் சுற்றி வரும்போது அரைப்பங்கு தூரத்தைக் கடப்பதற்கே போதுமானது. அதே சமயத்தில் ஆகாயத்தில் வைத்தே ஒரு விமானத்தளத்திலிருந்த இன்னொரு விமானத்திற்குத் தேவையான அளவு எரிபொருள் மாற்றப்படலாம் எனவும் அதற்கான நேரம் புறக்கணிக்கத்தக்கது எனவும் கொள்ளப்படலாம். எனினும் விமானங்கள் யாவும் எரிபொருளை அத்தீவிலிருந்தே பெற்றுக் கொள்ளவேண்டும்.

மேற்படி நிலைமைகளிற்கிணங்க ஒரு விமானம் அத்தீவிலிருந்து புறப்பட்டு உலகை ஒரு தடவை சுற்றி அத்தீவிற்கு மீள்வதற்கு, ஆகக் குறைந்தது. (உலகைச் சுற்றப் போகும் விமானம் உட்பட) எத்தனை விமானங்கள் தேவை? புறப்படும் சகல விமானங்களும் மீண்டும் தீவிற்கு வந்து சேரல் வேண்டும். சகல விமானங்களும் ஏகவினமானவை எனக் கொள்க.

(15ஆம் பக்கம் பார்க்கவும்)

# அண்ணல் காந்தியின்

‘‘பா, பாபுஜிக்கு இன்று நான் காலை அமுக்கி விடுகிறேன். பா, இன்று நான் பாபுஜிக்கு தலைக்கு எண்ணெய் தடவுகிறேன்’’ என்று ஆசிரமத்திலுள்ள பெண்மணிகள் மகாத்மாவுக்குப் பணிவிடை செய்யத் துடிப்பார்கள். அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகத் தன் ஆசையையும் அடக்கிக் கொள்வார் அந்தப் புனிதவதி. ஆனால் ‘பிறர் கவனித்துக் கொள்கிறார்கள்’ என்று பேசாமல் இருந்து விடவும் மாட்டார். என்ன வேலையில் ஈடுபட்டிருந்தாலும் ஒரு கண் காந்தியின் மீதே இருக்கும். அவருக்குத் தேவையானவற்றைச் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார். அதற்குப் பிறகு தான் இவர் உண வருந்துவார்; உறக்கம் கொள்வார். பத்தினித் தெய்வங்களான அனுசூயாவையும், அருந்ததியையும் நேரில் பார்த்துப் புண்ணியம் பெறாதவர்கள், இந்த உத்தம மனைவி ஆச்சிரமத்தில் நடத்திய ‘இல்லற’த்தைக் கண்டு உள்ளம் குளிர்ந்தார்கள்.

ஒருநாள் இரவு, சமையலறை வேலையெல்லாம் முடிந்து கஸ்தூரிபா காந்திக்குக் கால் பிடித்துவிட வருவதற்கு நேரமாகி விட்டது. மனைவி அன்று ஏதோ ‘அதிகப்படியான காரியம் செய்து விட்டு வந்திருக்கிறாள் என்பதை அறிந்த காந்தி ‘இத்தனை நேரம் சமையலறையில் என்ன வேலை?’ என்று கேட்டார்.

‘‘ராமதாஸ் இன்றைக்கு ஊருக்குப் போகிறானே. கையில் எடுத்துக் கொண்டு போக அவனுக்குப் பலகாரம் செய்து கொடுத்தேன், சற்று நேரம் ஆகிவிட்டது.’’

‘‘உனக்கு ஏன் இந்த வீண்தொந்தரவு? வேறு யாரையாவது செய்யச் சொல்வதுதானே. உனக்கு ஏற்கனவே சமையல் வேலை தலைக்கு மேல் இருக்கிறது. போதாக்குறைக்கு விருந்தாளிகளை வரவேற்று உபசாரம் செய்ய வேண்டியிருக்கிறது. அப்புறம் நூல் நூற்றாக வேண்டும். இதெல்லாம் போதாது என்று ராமதாசுக்கு வேறே ஸ்பெஷலா ஏதோ செய்து கொடுத்திருக்கே. இப்படியே ஓயாமல் வேலை செய்து கொண்டிருந்தால் உன் உடம்பு தாங்குமா? நாளைக்கு துளசிதாஸ் நேபாளத்திற்குப் போகிறான். சுரேந்திரன் அடுத்தவாரம் டெல்லிக்குப்போவதாக இருக்கிறான். அவர்களுக்கும் நீதான் ஏதாவது ஆகாரம் தயார் செய்து கொடுத்து அனுப்ப வேண்டியிருக்கும்.’’

‘‘எனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? ராமதாஸ் என்னுடையபிள்ளை. சிரமத்தைப் பார்க்காமல் பல்லைக் கடித்துக் கொண்டு தைமையோ செய்து கொடுத்தேன். எல்லோருக்கும் தினுசு தினுசா செய்து போட என்னால் முடியுமா என்ன? நீங்கள் மகாத்மா, எல்லோரையும் சொந்த பிள்ளைகள் மாதிரி நினைக்க முடிகிறது. உங்களைப் போல நான் ஒன்றும் மகாத்மா இல்லை. என் பிள்ளைகள் என்றால் எனக்கு ஓர் அஞ்ஞானம். மற்றவர்கள் மீதும் நிறைய அன்புவைத்திருக்கிறேன். இருந்தாலும் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் என்றால் தனிப்பாசம் இருக்காதா? மகனுக்குப் பிடித்ததாகப் பலகாரம் செய்து கொடுப்பது கூடவா தப்பு? இந்தச் சின்ன விஷயங்களில் கூடவா நீங்கள் தலையிட வேண்டும்? சே..சே!’’ சலித்துக் கொண்டார் கஸ்தூரிபா.

காந்தியின் உள்ளம் இளகியது. ‘‘நீ சொல்வதெல்லாம் சரிதான். நாம் இப்போது எங்கே இருக்கிறோம் சொல், பார்க்கலாம்.’’

‘‘சத்தியாக்கிரக ஆச்சிரமத்தில்.’’


‘‘நாம் எப்படி இங்கே வந்தோம்? ராஜ்கோட் வீட்டை எதற்காக விற்றுவிட்டு, இந்த ஆச்சிரமத்தில் குடியேறினோம்?’’

‘‘நாம் எல்லோரும் ஒரே குடும்பமாயிருந்து நாட்டுக்குச் சேவை புரிவதற்காக.’’

அப்படியானால் நம்மை நம்பி இங்கே வந்திருக்கிறவர்களுக்கெல்லாம் நாம் தானே தந்தையும் தாயும்?’’

‘‘அதிலென்ன சந்தேகம்?’’

‘‘அப்படியிருக்கும் போது நம்ம கடமை என்ன என்பதை நீ உணர்ந்தாகத் தெரியவில்லையே...! மற்றவர்களைவிட உன் பிள்ளைகளின் மீதுதான் உனக்கு அதிகப் பற்று இருக்கும் என்பதை ஒப்புக் கொள்




கிறேன். நாம் ராஜ்கோட்டிலேயே இருந்திருந்தால் ராமதாஸ் மீதும் தேவதாஸ் மீதும் நீ தனிப்பட்ட அன்பைச் செலுத்தலாம். இங்கே எல்லோரும் ஒன்றுதான். அத்தனை பேரும் உன்னை சொந்தத் தாய் போல் கருதும்போது, நீ வேற்றுமை பாராட்டுவது நியாயமா?’’

கணவரின் வாதம் கஸ்தூரிபாவைக் குழப்பியது. அதில் நியாயம் இருக்கிறது என்பதை அறிவு ஏற்றுக் கொண்டது. உள்ளமும் ஒப்புக்

# கஸ்தூரி திலகம்

கொண்டது. அவரைப் போலவே இவருடைய உள்ளமும் கருணைக்கடலாகப் பரந்து விரிந்து தான் இருந்தது. ஆனால் அவர் இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் தாய்ப்பாசம் ஏங்கித் தவித்தது.

ஒரு நாள் மாலை அபூர்வமாகக் காந்தியும் கஸ்தூரிபாவும் ‘வாக்கிங்’ போய்க் கொண்டிருந்தார்கள். வழியில் இருந்த ஒரு சிறு கல் அவர் காலில் இடறி, கட்டை விரலில் குத்திக் காயப்படுத்தியது. உடனே இரத்தம் கொட்ட ஆரம்பித்தது. அப்படியே கீழே உட்கார்ந்து விட்டார் காந்தி.

‘‘கஸ்தூரி, சீக்கிரம் ஒரு துணியை எடுத்துக் கொண்டு வா காயத்தைச் சுற்றிக் கட்டு... பேசாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறாயே. போ...’’ என்று அவசரப்படுத்தினார்.

அவர் துடிப்பையும், படபடப்பையும் கண்ட கஸ்தூரிபா தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டே, ‘என்ன, இந்தச் சாதாரண காயத்திற்கு இத்தனை அமர்க்களம் செய்கிறீர்கள்? உயிரைப் பற்றி எனக்குக் கவலையேயில்லை. மரணத்திற்குப் பயப்படவே மாட்டேன். என்று வீராப்பு பேசுவீர்களே... ஒரு துளி ரத்தத்தைக் கண்டதும் அலறி விட்டீர்களே!’’ என்று சற்று ஏளனமாகவே கேட்டார்.

‘‘நான் உயிருக்காகப் பயப்படவில்லை கஸ்தூரி. இந்த உடல் நாட்டுக்குச் சொந்தம். இந்தச் சிறுகாயத்தைச் சரியாகக் கவனிக்காமல் அலட்சியமாக இருந்து விட்டால் அது பெரிதாகி விடும். பிறகு என்னால் நடக்க முடியாமல் போய்விட்டால் என்னை நம்பியிருக்கிறவர்கள் கதி என்னாவது? அதற்காகத்தான் அத்தனை அவசரப்படுத்தினேன்’’ என்று பதிலளித்தார். கணவனுடைய உயிரும் உடலும் நாட்டின் உடைமை. அவற்றைக் காப்பாற்ற வேண்டியது தன் கடமை என்பதை நன்றாக உணர்ந்து கொண்டார் கஸ்தூரிபா.

பிறகு இருவரும் ஏதேதோ பேசிக் கொண்டு போனார்கள். கஸ்தூரிபா மெதுவாக மணிலால் கல்யாண விஷயத்தை ஆரம்பித்தார். அவர் கவலை அவருக்கு.

‘‘கஸ்தூரி, எத்தனையோ அலுவல்களுக்கிடையே இதையும் ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறேன். மணிலாலுக்கு ஒரு நல்ல பெண்ணாகப் பார்க்கும்படி ஜம்னாலால் பஜாஜிடம் சொல்லியிருக்கிறேன். சீக்கிரமே முடித்து விடுவோம். கவலைப்படாதே!’’

கல்யாணத்தை நன்றாக நடத்த வேண்டும். நம் உறவுக்காரர்களையெல்லாம் அழைக்க வேண்டும். ஒன்றிலும் குறைவே வைக்கக் கூடாது’’

‘‘ரொம்பப் பெரிய கோட்டையெல்லாம் கட்டாதே! இந்த ஏழைக்குத் தகுந்த மாதிரித்தான் கல்யாணம் நடக்கும். ஊருக்கெல்லாம் உபதேசம் செய்து விட்டு நாம் ஆடம்பரச் செலவு செய்ய முடியுமா கஸ்தூரி? உலகம் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. சிறு தவறு செய்தாலும் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி விடுவோம்.’’

‘ஒரு மகாத்மாவுக்கு வாழ்க்கைப்பட்டிருப்பதால் சொந்த விருப்பு வெறுப்புக்களையும், அற்ப ஆசைகளையும் விட்டுவிடுவதைத் தவிர வேறு வழியில்லை’ என்று நினைத்துக் கொண்டார் கஸ்தூரிபா. அவர் தாயுள்ளம் துவண்டது.

பேசிக் கொண்டே குடிசை அருகில் வந்து விட்டார்கள் இருவரும். மனத்தை அரித்துக் கொண்டிருந்த அந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டுவிட வேண்டுமென்று கஸ்தூரிபா துடித்தார். கேட்டும் விட்டார்.

‘‘ஹரிலாலைப் பற்றி நீங்கள் இந்தவாரம் பத்திரிகையில் ஏதோ எழுதியிருக்கிறீர்களாமே? என்ன விஷயம்? எல்லோரும் பேசிக் கொள்கிறார்களே?’’

‘‘அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறாய்...? அவன் வியாபாரத்திற்காகப் பணம் கொடுத்துள்ள ஒரு முஸ்லிம் தோழர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அவர் பணமும் திரும்பி வரவில்லையாம். அந்தக்கடையும் மூடப்பட்டு விட்டதாம். என் பிள்ளை என்பதற்காகத் தான் அவனுக்கு அவர் உதவி புரிந்தாராம்.’’

‘‘அதற்கு நீங்கள் என்ன எழுதினீர்கள்?’’

‘‘அந்தக் கடிதத்தைப் பிரசுரித்து விட்டு, ‘எனக்கும் என் பிள்ளையின் வியாபார நடவடிக்கைகளுக்கும் ஒரு விதமான சம்பந்தமும் கிடையாது. அவன் போக்கும், நடத்தையும் எனக்கு முதலிலிருந்தே பிடிக்கவில்லை. என் பொருட்டு அவனுக்கு ஒருவரும் உதவி செய்ய வேண்டாம். அதற்கு நான் பொறுப்பு இல்லை’ என்று ஒரு குறிப்பும் எழுதியிருந்தேன்’’

‘‘ஏன் அப்படி எழுதினீர்கள் என்ன செய்தாலும் அவன் நம்முடைய பிள்ளைதானே? அவன் மேலே உங்களுக்கு அன்பே இல்லையா?’’

‘‘நிறைய இருக்கிறது. ஆனால் என்மீது மக்களுக்குள்ள மதிப்பையும், மரியாதையையும் அவன் தன் தவறான செயல்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க முடியுமா? உலகம் என்னைத் தூற்றாதா? அவன் இழைத்து வரும் தவறுகளையெல்லாம் மன்னிக்கவும் நான் தயாராக இருக்கிறேன். ‘உன்னுடைய கெட்ட பழக்கங்களையெல்லாம் விட்டுவிட்டு எங்களுடனேயே இரு’ என்று கூட இரண்டு முறை சொன்னேன்... கேட்க மாட்டேன் என்கிறானே...’’

‘‘ஒழுங்காக வியாபாரம் செய்து கொண்டிருப்பதுதானே? ஏன் தான் இந்தப் பிள்ளைக்குப் புத்தி இப்படிப் போக வேண்டுமோ? கடவுளே...’’

‘‘அவனை ஒரு பிசாசு பிடித்துக் கொண்டிருக்கிறது கஸ்தூரி. நான் எதை நாட்டிலிருந்து தொலைக்க வேண்டும் என்று பாடுபட்டுக் கொண்டிருக்கிறேனோ, அந்தப் பேய்க்கே அவன் அடிமையாகி விட்டான்!’’

‘‘என்ன சொல்கிறீர்கள்?’’

‘‘ஹரிலால் குடிக்கிறானாம்! எத்தனை பணம் சம்பாதித்தாலும் அவனுக்குப் போதவில்லையாம்.’’

மறுகணம்.

பூமி இரண்டாகப் பிளந்தது. கஸ்தூரிபா அதல பாதாளத்திற்குப் போய்க் கொண்டிருந்தார். அந்தக் கும்மிருட்டில் கடல் பொங்கிக் கொந்தளிப்பது போல் பேரிரைச்சல். ‘உன் மகன் ஒரு குடிகாரன்!’ அது பயங்கரமாக எதிரொலித்தது.

நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறது. அழகும் குணமும் பண்பும் அன்பும் நிறைந்த பெண்ணாகப் பார்த்துத்தான் ஹரிலால் மணம் செய்து கொண்டார். தந்தை தன் கல்லூரிப்படிப்புக்கு வழி செய்யாமல் தன் எதிர்கால வாழ்வைக் குலைத்து விட்டார் என்று அவர் மீது ஆத்திரப்பட்டு, அவரைப் பிரிந்து தனியே வாழ நினைத்த ஹரிலாலுக்கு, அவர் மனைவி குலாப் தான் பெரும் ஆறுதலாக இருந்தாள். தன் இனிமையான பேச்சினாலும் கணவனை அனுசரித்துப் பழகும் தன்மையாலும் இருண்ட அவரது வாழ்வில் புத்தொளி பரவச்செய்தாள். தன் மகன் இளவயதில் திருமணம் செய்து கொள்வதற்கு முதலில் அனுமதி கொடுக்க மறுத்த காந்தி கூட, நாட்டுப் பெண்ணின் நல்ல குணத்தைப் பார்த்து மகிழ்ந்து பாராட்டினார். அன்னை கஸ்தூரியின் ஆனந்தத்திற்கோ அளவே கிடையாது.

அத்தனை பேருடைய மனத்தையும் கொள்ளை கொண்டு அழகாகக் குடித்தனம் செய்து வந்த குலாப், எல்லோரையும் ஏமாற்றி விட்டுப் போய்ச் சேர்ந்து விட்டாள். அவள் மறைவினால் அதிகமாக பாதிக்கப்பட்டவர் ஹரிலால்தான். இதயத்தை இரண்டாகப் பிளந்த அந்தத் துயரத்தை எத்தனை தான் முயன்றாலும் அவரால் மறக்க முடியவில்லை. இவ்வுலக நினைவுகளிலிருந்து விடுபட வழியைத் தேடினார். மதுவை நாடினார். துன்பத்திலிருந்து விடுதலை பெற்று இன்ப வெள்ளத்தில் மிதக்க, அந்தக் குறுக்கு வழிதான் அவர்

**பரணீதரன்**

கண்ணில்பட்டது. கண்ணையும் கருத்தையும் கவரும் மாயமான் போலத்தானே கள்ளரக்கனும் போலி வேடம் பூண்டு மக்களை மயக்குகிறான்.. அவன் விரித்த வலையில் நன்றாகச் சிக்கிக் கொண்டு விட்டார் ஹரிலால்.

மது அரக்கனுக்கு அடிமையானதால் ஹரிலாலுக்கு வியாபாரத்தில் அக்கறை அகன்றது. பண விவகாரத்தில் கவனம் குறைந்தது. எத்தனை பணம் கிடைத்தாலும் அது ‘இன்பம்’ நுகருவதற்கே பயன்பட்டது. ஆகவே வாங்கிய பணத்தைக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. நாணயமாக இருக்க வேண்டும் என்ற நல்லெண்ணமிருந்தாலும் தன்னையும் மீறிய சூழ்நிலை அவருக்கு அவப்பெயரைத் தேடித் தந்தது. அது தந்தையின் கௌரவத்திற்கும் ஊறு விளைவித்தது. மாநிலம் போற்றிடும் மகாத்மா, தம் நிலையைத் தெளிவுபடுத்தி பத்திரிகையில் எழுதியதை கஸ்தூரிபாவுக்கு விளக்கியபோதுதான் ஹரிலால் தீய பழக்கத்தின் பிடியில் சிக்கிவிட்டார் என்ற உண்மை தெரியவந்தது.

(தொடரும்)

## சிந்தனையாளரின் சுவையான அனுபவங்கள்

### சரிநிகர் சமானம்

‘‘ஆண்களுக்கு சமமாகப் பெண்களை முன்னேற்றமடையச் செய்து கொண்டு வந்தோம். இப்போது பெண்களுக்குச் சமமாக ஆண்களை முன்னேற்ற வேண்டியுள்ளது. சாதாரணமாக என் மனைவியைச் சொல்லலாம். 25 ஆண்டுகளுக்கு முன்பே அவள் டாக்டராகி விட்டாள். நான் இப்போது தான் டாக்டராகி இருக்கிறேன்’’ என்று ஒரு பாராட்டுக் கூட்டத்தில் கூறியவர் டாக்டர் நெடுஞ்செழியன்.

### சொல்ல வேண்டுமா?

ஹாரால்ட் மாக்மில்லன் பிரிட்டன் நாட்டுப் பிரதமராக இருந்தவர். அவருடைய மகன் ஆட்சியைக் கேலி செய்து ஒரு கடிதம் டைம்ஸ் பத்திரிகையில் எழுதினார்.

மாக்மில்லன் காதில் படும்படியாகவே அக்கடிதத்தைப் பலரும் பாராட்டினர். மாக்மில்லன் சொன்னார்!

‘‘இவ்வளவு புத்திசாலித்தனம் அவனுக்கு யாரிடமிருந்து வந்தது என்று நான் சொல்லத் தேவையில்லை!

### புத்தக வெளியீட்டில் புதுமை

ஆந்திரா மாநிலத்தில் ‘திகம்பரகவுலு’ என்ற புரட்சிக் கவிஞர் ஒருவர் இருக்கிறார்.

அவருடைய சிந்தனை செயற்பாடு அனைத்துமே புரட்சிகரமாக இருக்கும்.

அண்மையில் தாம் எழுதிய மூன்று கவிதை நூல்களை அவர் வெளியிட்ட விதமும் புரட்சிகரமாக இருந்தது.

முதல் நூலை நடு இரவில் ஒரு ரிக்ஷாக்காரனைக் கொண்டு வெளியிடச் செய்தார்.

இரண்டாவது நூலை வெளியிட்டவர், ஒரு ஹோட்டல் பரிசாரகர்.

மூன்றாவது நூல் பிச்சைக்காரனை வைத்து வெளியிட்டார்.

### பஞ்சத்துக்கு காரணம்

ஜி.கே.செஸ்டர்டன் என்ற எழுத்தாளர் ஒரு முறை பெர்னார்ட் ஷாவை சந்திக்க வந்தார். ஷா மிகவும் ஒல்லியாக இருப்பார். செஸ்டர்டன் உடல் பெருத்தவர்.

‘‘உங்களைப் பார்த்தால் இந்த நாட்டில் உணவுப் பஞ்சம் வந்து விட்டது போல் இருக்கிறது’’ என்றார் செஸ்டர்டன்.

‘‘உங்களைப் பார்த்தால் பஞ்சத்துக்குக் காரணமே நீங்கள் தான் என்று தோன்றுகிறது’’ என்றார் ஷா.

### அது போதாதா?

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பாட புத்தகத் தேர்வுக் குழுவில் டி.கே.சி.இருந்தார்.

இண்டர் மீடியட் வகுப்பு தமிழ் பாடத்தில் இறையனார் அகப்பொருள் உரையில் எத்தனை பக்கம் இடம் பெறலாம் என்று விவாதிக்கப்பட்டது. ‘ஐம்பது பக்கம் வைக்கலாம்’ என்று ஒரு உறுப்பினர் கூறினார்.

‘‘ஒரு பக்கம் போதுமே! இந்த மாதிரி நடையில் எழுதக் கூடாது என்பதைக் காட்ட அது போதாதா?’’ என்று கேட்டார்.டி.கே.சி.

# மௌனத்தின் தேடல்கள்

## முத்துக்களே!

முதிராப் பருவத்து
முத்துக்களே!
முள்வேலி தாண்டி
நீவீர் தேடும்
விலைமதிப்பில்லா - அந்த
செல்வம் தான் என்னவோ...?

*எஸ்.சந்தியா,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## உதிரங்கள்!

வாழ்வின்
எதிர்பார்ப்பில் தினம்
வசந்தத்தைத் தேடி
உறங்காத
உறவின் வரவில்
முகம் காணத்துடிக்கும்
உதிரங்கள்....

*க.நாகேஸ்வரா,*
*சண்டிலிப்பாய்.*

## இங்கே ஆபத்து!

ஆதாரமில்லாத
அநாதைக் குழந்தைகள்
இவர்கள்
புதினம் பார்க்க வேண்டிய
இடம் இதுவல்ல
என புகட்டுவதற்கு
யாருண்டு இவர்களிற்கு.

*கு.தர்சினி,*
*கரவெட்டி.*

## கானல் நீர்!

வரையறுக்கப்பட்ட
வாழ்க்கை எல்லைக்குள்
இவ்விளம் பிஞ்சுகளின்
எதிர்காலக் கனாக்கள்
உச்சி வெய்யில் கானல் நீராய்
இவர்கள் உள்ளங்களோடு
மட்டுமே....!

*J.தனேஸ்,*
*நல்லூர்.*

## தடைகள்!

மைந்தரே! இங்கு
மனிதாபிமானம் பலியாகிறது
உணர்வுகள் உறக்கம் கொள்கிறது
உரிமைகள் உதாசீனம்
செய்யப்படுகிறது
இதனால்த்தான் என்னவோ
முற்போக்கான உலகிற்குள்
பிரவேசிக்கக் கூடாது என
முட்கம்பிகள் உம்மை
தடைசெய்கின்றன போலும்.

*யோ.பிரஷாந்தி,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## பொங்கி எழு!

எட்ட இருந்து என்ன பார்க்கிறாய்
கிட்டச் செல்ல முடியாமையின்
காரணத்தை அறியாயோ?
தடைகளை உடைத்து
தரணியை வெல்லு
அப்பொழுதுதான் உனக்கு
விடிவு.

*ஆறி,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## அடிமைகள்!

இருளின் முடிவுக்காய்...
காத்திருக்கையில்
ஒளி மறைந்து விடுகிறது
நாம் இப்போது ஓர் விதத்தில்
அடிமைகள் தான் ஆம்
புதிய அடிமைகள்.

*G.சதீஸ்குமார்,*
*A.V.Road.*

## உரிமைகள்!

கசங்கிய உள்ளங்களே!
போதும் உங்கள்
பொசுங்கிய வாழ்க்கை
சிந்தையில் கால் மிதித்து
சொந்த உரிமைகளை
ஈன்றெடுக்க புறப்படுங்கள்.

*க.நிரோஷனி,*
*மட்டுவில்.*

## பார்த்திருங்கள்!

தாய் தந்தை உறவிழந்தீர்
தங்கி வாழ்ந்த வீடிழந்தீர்
கம்பிகளால் சிறையிட்டு
தம்பிகளே வாழுகின்றீர்
நெஞ்சிருக்கும் நெருஞ்சிகளை
எடுக்க நாளை கரங்கள் வரும்
அது வரைக்கும் பார்த்திருங்கள்.

*ச.பாரதி,*
*வேலணை.*

## ஆலோசனை!

முட்கம்பி வேலியும்
முன்னேற முடியா வாழ்வும்
எமக்கேன் என்று
தானே கேட்கின்றீர்கள்
கவலையை விடுங்கள்
விடிவும் முடிவும் வரும்
அப்போது பதில் கிடைக்கும்
அது வரை பொறுத்திருங்கள்.

*உ.தேவி,*
*அளவெட்டி.*

## முட்கம்பிகள்!

சிறுவர் உரிமை என்று
அடிக்கடி பலரும் பேசுவர்
இருந்தும்
இன்னும் தான் எமக்கு
முட்கம்பிகளினால் வேலி.

*ப.தர்மினி,*
*யாழ் பல்கலைக்கழகம்.*

## நிரபராதிகளே!

தண்டனைக்காய்....
சிறைப்பட்டு நிற்கும்
நிரபராதிகளே - உங்கள்
தொடக்கமே
முடிவாகிப் போனதென்று
முணு முணுக்காமல்
முட்களை அறுத்து விட்டு
முன்னேறுங்கள் தம்பிகளே..
அடுத்த அத்தியாயம்
உங்கள் பக்கமே!

*ஜோ.ஜெஸ்ரின்,*
*கொழும்புத்துறை.*

## ஏக்கம் தீராதோ?

எட்டிப் பார்ப்பது
போட்டோவுக்குப்
போஸ் கொடுக்க அல்ல
ஏழைகள் நாம்
ஏடு படித்த
முட்சிறைக்குள்
சிக்குண்டிருக்கும்
பள்ளித் தாயைத்தான்.

*அருந்தா,*
*முடமாவடி.*

## எப்படி...!

வறுமைச் சிறைக்குள் சிக்கி
வாடி நின்றாலும்
கண்களில் ஒளியும்
இதழ்களில் இளநகையும்
எப்படி...? ஓ
முட்கம்பிகள் கொண்ட
திறந்த வெளிச் சிறை
உடையப் போவதை
எண்ணியதாலோ.

*வீ.றஞ்சி,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

## காவலரே கேளும்!

கம்பி போட்டு காவல் இருக்கும்
காவலரே கேளும்
கால் பதித்து எங்கும்
புகும் எமக்கு
கம்பி ஒரு தடையல்ல.

*K.முகுந்தன்,*
*சுழிபுரம்.*

## ஏழையின் ஏக்கம்!

முள் வேலி மீது
மோகனமாய் நாட்டியங்கள்
இது தானா வாழ்க்கை
கண் கொடுப்பார் பலருண்டு
கை கொடுப்பார் யாருமில்லை.

*R.ரோஜா,*
*கொடிகாமம்.*



## எழுத்துக் கற்றுத்தர ஆசான் இல்லை!

எதிர்காலத்தை எண்ணிப் பார்க்கவோ
உங்களுக்கு அறிவு தெளிவில்லை
இந்நிலையில் முட்கம்பி வேலிகளால்
மனித நேயம் வந்து உங்களை அரவணைக்குமா?
உங்கள் பட்டினியும், பசியும் பறந்திடுமா?
தேங்காய், மாங்காய்க்காகத் தீங்கைத்
தேடலாமா? கவனம் மக்காள்.

*ச.வில்சன்,*
*முகமாலை.*

## மண்ணின் மைந்தன்!

*எதிர்காலத் தலைவனே!*
*உன் இலட்சியங்கள் முட்கம்பிகளினால் வேலி*
*இடப்பட்டுள்ளன..... உன் உடை கலைந்து*
*உளம் கலைந்து வேடிக்கை பார்த்த காலம்*
*உருண்டோடி விட்டது தடைகளை நீக்கி*
*வெளியே வந்திடு.*

*பத்மநாதன்,*
*வவுனியா.*

## சுவாசம்!

வீதிக்கு விலங்கிட்டு
பாசத்தின் பாலமே
தகர்ந்து போனது...?
வாழ்வுக்கு விடிவெள்ளி
எமக்கேது ஒளி விளக்கு
நேசிப்பிற்குரியவர்களே
எம் சுவாசத்தின் உச்சரிப்பு
புரிகின்றதா? உங்களுக்கு.

*தி.ஜெயராஜ்,*
*நல்லூர்.*

## சஞ்சலம்!

இரண்டு மனங்களின்
சஞ்சலம் என்னவோ?
சமாதான முயற்சிக்கு
வழிதேடும் எண்ணமோ?
முட்கம்பி வேலிதான்
இலட்சியத்தின் தடையோ
மனிதம் எங்கே
போய் விட்டது
கரம் பற்றிய கோல்தான்
வழித்துணையோ?

*க.செந்தில்,*
*கொழும்புத்துறை.*

## தாண்டாதே!

கம்பி வேலியை
கடற்றிடாதே
கால்களை இழந்து
கலங்க நேரிடும்.

*எஸ்.மதி,*
*திக்கம்.*

## தாண்டாதே !

கம்பிவேலியை
கடந்திடாதே
கால்களை இழந்து
கலங்க நேரிடும்....!

எஸ். மதி
அல்வாய்

## எழும்பு மானிடமே!

தோல்வியைக் கண்டு
அஞ்சாதே
அதுவே உனது வெற்றிப் பாதை
சமூகத்தில் கிடந்து தூங்காதே
உன் வாழ்க்கையில் வெற்றி
நடை போட்டு விடு

ப.வசந்தகுமரன்,
உரும்பிராய்.

## முயலுவீர்!

முள்வேலியாலே தடை
முகத்தில் தயக்கம்
முடமாகிப் போகாதீர்
முயலுவீர் தம்பிமாரே!

*கு.சிவகுமார்,*
*புத்தூர்.*

## தடை!

தடை நிறைந்த
உலகம் அதில்
தலை நிமிர்ந்து
நீ வாழ
தடைகளை தகர்த்தி எறி.

*வ.தீபா,*
*இராசாவின் தோட்டம்.*

## சுடர்களின் இடர்கள்!

சோகமெனும் வட்டத்துள்
அல்லலுறும் இளஞ்சுடர்கள்
ஆரையை குறைத்திடவே
அறிவினை அளிக்கலாமா?
அடிமை மையத்திலே
விடிவைக் காணலாமா?
சூரியக் குட்டிகளை நாம்
சுடர்விடச் செய்வதெப்போ?

*பங்குனி மைந்தன்.*

## அழிப்பதற்கான மூலி!

இளம் தளிர்களே!
இது அரவணைக்கும் வேலி அல்ல
அழிப்பதற்கான மூலி
வெற்றி பெற வேலியைத் தாண்டு
தோள் கொடுக்கத் தம்பியும் உண்டு.

*துணவியூர் நடா.*

## சிறுவர்களே!

சிறியவயதில்
குறும்புத்தனம் மறந்து
சிந்தித்து நிற்பதன்
காரணம் என்னவோ?

து.ராஜி

## எத்தனை அவலங்கள்!

எம்மண்ணில் நித்தமும்
பெற்றவர் மடிந்திட
உறவினர் பிரிந்திட
கத்திடக் கேட்காது
கம்பிகள் நடுவே
காலத்தை ஓட்டும்
கறுப்பு நாள்கள்
ஈழமண்ணில்.....
இன்றும் எத்தனை பேருக்கு?

*M.மூர்த்தி,*
*வாதரவூர்.*

## சாதனை!

சகோதரர்களே சாலையை
நீங்கள் வெறிப்பது
சாதனை படைக்கவா?

ப.பிரகாஷ்.

## மௌனத்தின் தேடல்கள் – 24



அன்பின் வாசகர்களே, உங்கள் எண்ணத்தில் தோன்றும் உன்னத வெளிப்பாடுகளை மிகச்சிறிய கவிதைகளாக்கி தபால் அட்டையில் சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

முடிவுத்திகதி :– 10.08.2002

அனுப்ப வேண்டிய முகவரி:– மௌனத்தின் தேடல்கள் –24
சங்குநாதம்,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# கவிதைக் கலசம்





## நட்சத்திரம்!

மேகக் காட்டில்
தூவி விடப்பட்ட
மல்லிகைப் பூ.....

சி.இன்பராஜ்,
மந்துவிலூர்.

## தாய்!



கண்ணசைவில்
தன்னைமறந்து
நடையினிலே நாளறிந்து
குரலினிலே குணங்கண்டு
கையசைவுக்கு
காரணம்கூறி
அழுகையில் தானமழுது
வித்தைகளை கற்பித்து
விளையாட்டுப் பொருளாகி
நோயுற்ற போது தாதியாகி
கண்துஞ்சாது கடமைபுரிந்து
உயர்விலும் தாழ்விலும்
உடனிருப்பவள் தாய்.

தன்மடியிலிடம் கொடுத்து
தன்னுதிரந்தனை ஈந்து
முகம்பார்த்து மனமறிந்து
சிரிப்பினிலே சினம்போக்கி

கு. சிவகுமார்,
சுன்னாகம்

## தேடல்!

தேடிக்கொண்டிருக்கின்றேன் – என்
சொந்தங்கள் தொலைக்கப்பட்ட
தேசத்தில் செல்லரிக்கப்படாத
என் நினைவுத் தாள்களில்
உன் கல்லறையின் முகவரியை!!

பூ.சாவித்திரி
இராமநாதன் நுண்கலைக்கழகம்

## ஒரேயொரு முறை!



நான்
நிலையான நட்பைத்தேடி
நிஜமாக அலைந்தவள்
கைவந்த பாதியிலே
கைநழுவவிட்டவள்

நாளுக்கொரு நட்புக்கொள்ளும்
நாகரிக உலகிலே

ஆழமான அன்புக்கு
அர்த்தம் சொன்னவள்

தூரதேசம் போனாலும் - என்
நினைவில் வாழும் தூயவள்
அவள் வாழும் உலகில்....
நட்பென்ற ராஜ்ஜியம்
என்றும் இருக்கும்

உறவுகளில் புதுமையானது
நட்பு மட்டும்தான்
அதை களங்கப்படுத்தாதீர்
கடவுளுக்கும் பொறுக்காது
உதட்டளவில் கதைத்து
உலைவைக்கும் உறவுகளே
ஒரேயொரு முறை உள்ளத்தால்
தான் கதையுங்களேன்.

ராதை,
யாழ்ப்பாணம்.


## மின்னல்!

பூமிப் பெண்ணை
ஒளித்திருந்து படம் பிடிக்கும்
புகைப்பிடிப்பாளன்.

செ.சுலக்ஷனா.

## எழுதுகிறேன்!

எழுது எழுது என்றாய்
எழுதுகிறேன்
கவிதைகளாக...
அத்தனையும்
உனக்காக....
என் பேனாவில்
மை இருக்கும் வரையல்ல



என் இதயத்தின்
உயிர்த் துடிப்பு
அடங்கும் வரை....
உனக்காக....
எழுதுகிறேன்
கல்லறையிலாவது
என் கவிதைகள்
முற்றுப் பெறுமானால்
எழுதுகிறேன்
என் ஜீவனுக்காக அல்ல
எந்தன் காதலுக்காக.....

சுபா,
சண்டிலிப்பாய்.

## ஈர நிலவுகள் நினைவில்!




கனவுத் தூக்கம்
என் விழிகளின்
இமையில்
ஒரு சந்தோஷத்
துடிப்பின்
மெல்லிய சத்தம்
என் இதயத்தில்
ஓ! ஈர நிலவுகள்
என் நினைவில்
நதியின் சலசலப்புக்கள்
போல் இசை பாடுகின்ற
என் கனவுகள்
எதிர் பார்ப்புக்களுடன்
அரும்பு அவிழக்
காத்திருக்கும்
என் நினைவுகள் ஓ!
ஈர நிலவுகள் என்
நினைவில்.

ஈர நிலவுகள்
என் நினைவில்
பௌர்ணமி நிலவில்
பனி இரவில்
நனைந்த ரோஜாக்கள்
போல்பன்னீரில் நனைந்த
சந்தன மல்லிகை மலர்கள்
போல் ஈரநிலவுகள் என்
நினைவில்

அருள் மொழி,
பருத்தித்துறை.

## சீதனம்!



திருமணம் என்பது
இருமனக் கலப்பு
இருமனம் வாழ்வதற்கு – ஏன்
பணம் என்ற இணைப்பு

அன்பைச் சொரிபவள் சகி
அதனை ஏற்பவன் பதி
அதற்கு ஏன் நிதி – இதில்
வாடிப்போபவள் பெண்மதி

வானம் பூமியை பணம் கேட்டால்
வண்டுகள் பூக்களை சீதனம் கேட்டால்
சூரியன் நிலவைப் பணம் கேட்டால் – இந்த
உலக இயற்கை நடப்பதெங்கே

இயற்கையின் படைப்பில் நாம் எல்லாம்
இளமையின் கனவில் உயிர் எல்லாம்
ஒரு புதுபடைப்புக்கு சீதனம் என்றால் – இது
இயற்கை தானா சொல்லையா

நீ வேற்றுக் கிரக வாசியல்ல
இது ஆண்களற்ற பூமியல்ல

பின் ஏன் உனக்கு சீதனம் சொல்
நம் முன்னவர்
செய்வதை செய்வதற்கு

பூவை பார்க்க புதையல்
என்றால் நீ
பூமியில் பிறந்தவனல்லடா
புதுச்சரித்திரம் படைப்பதற்கு
இந்த சீதனப் பேயைக்
கொழுத்திவிடு.

இ.மேகலா,
புத்தூர்.

## வறுமை!



குடிக்கவோ கூழுமில்லை
குளிக்கவோ கிணறுமில்லை
படிக்கவோ விளக்குமில்லை
படுக்கவோ பாயுமில்லை
பானையிலே அரிசியில்லை
அடுப்பினிலே நெருப்புமில்லை
ஆறுவதற்கு இடமுமில்லை
ஆறுதல்சொல்வார் யாருமில்லை
கையினிலே காசுமில்லை
கந்தைகூட மிச்சமில்லை
இயற்கையிலே ரசனையில்லை
இறைவன்கூட இரங்கவில்லை
சுற்றங்கூட சேருதில்லை
சுமைகள் சுமக்க நாதியில்லை
மனதினிலே அமைதியில்லை
மரணம்கூட வந்துசேரவில்லை
வாழ்க்கையிலே ஒன்றுமில்லை
வறுமையைத்தவிர ஏதுமில்லை.

என். கௌரி,
யாழ்.பகலைக்கழகம்

## சமாதானத் தென்றல்!



இந்த
சமாதானத் தென்றல்
இன்னும் எத்தனை
நாள்?

எங்கள்
இதயங்களை
தழுவிக் கொண்டே
இருக்கும்?

எம்
தேசத்தாய்
கஷ்ரப்பட்டுப் பிரசவித்த
இந்த சமாதானக்
குழந்தை –

மறுபடியும்
யுத்த நெருப்பில் எரிந்து
சாம்பலாகப்
போகுமா?

அப்படி
இந்த சமாதானக் குழந்தை
யுத்த தீயில்
எரிந்தால் –

இங்கே
உயிர்கள் புதைகுழியில்
பிணமாக புதைக்கப்படும்!

வீதியில்
மழைவெள்ளம் போல
ரத்தங்கள்
ஓடும்!


நாய்கள்
ரத்தங்ளை குடித்துவிட்டு
பிணங்களை
தின்னும்!

இவையாவும்
நடந்தால்
நாடு சுடுகாடாக
மீண்டும் மாறும்.

உயிரோவியன்,
புலோப்பளை .

## நாங்கள்

நாங்கள்
நவீன உலகின்
நாகரிகச் சீமாட்டிகள்
நாகரிகப் போர்வையில்
சீரழியும் சமுதாயத்தை
கைகட்டிப் பார்க்கும்
இயக்கமில்லா யந்திரங்கள்
மோகங்கள் தலைக்கெடுத்து



மயக்கவுலகில் வாழும்
சொப்பனத்துச் சுந்தரிகள்
விழியிருந்தும்
உணர்வுகளிருந்தும்
பார்க்கமுடியாத




உணர முடியாத
''கோமா'' நோயாளிகள்
மாயவுலகின்
நிலையின்மை புரியாமல்
நாமும் அழிந்து
சமூகத்தையும் அழித்து
ஒளியை உண்டு பண்ண
முடியாத
இருட்டு மனிதர்கள்
நாங்கள்
நவீன உலகின்
நாகரிகச் சீமாட்டிகள்.

தமிழின் தோழி,
யாழ். பல்கலைக்கழகம்.

# ஒரு தென்றல் புயலானது

"அப்பா எங்கே? அப்பா எங்கே?" என்ற கூக்குரல் அந்த அறையின் சுவர்களைத் தாண்டிப் போகமுடியாமல் எதிரொலித்துக் கொண்டிருந்தது அழகுப் பதுமையொன்று. தலைவிரி கோலமாகக்கிழிந்துபோன ஆடைகளை மீண்டும் கிழித்தவாறு கத்திக் கொண்டிருந்தது. அது கணனியினால் இயக்கும் ரோபோவல்ல. உயிரும், உணர்வும், இளமைத் துடிப்பும, வனப்பும், வாளிப்பும் மிக்க இருபத்தியிரண்டு வயதுப் பெண் குமாரிதான் என்பது அவளுடைய உறவுகளால் நம்பமுடியாத உண்மையாக விருந்தது. அனைவரையும்விட அவளது ஆருயிர் நண்பி மோகினியால் கனவிற்கூட நினைக்க முடியாத ஒன்றாகவேயிருந்தது. இன்றும்நேரடியாகப் பாடசாலையிலிருந்து மோகினி குமாரி வீட்டுக்கு வந்திருந்தாள். அவள் வீட்டுப் படியேறும் போதே

## சிறுகதை

குமாரியினுடைய சத்தம் அவளது காதுகளில் பாய்ந்து அவளது நெஞ்சைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தது. "யாரது மோகினியே வாம்மா" என வரவேற்றார் தளர்ந்து வாடிய குமாரியினுடைய அன்னை. "என்ன மாதிரி சுறுசுறுப்பாக நோய் நொடியில்லாமல் இருந்த இந்தத் தாயார் ஒருவருக்கும் தீங்கு செய்ய நினைத்துக் கூடப்பார்க்காதவர். இவருக்கா இந்த நிலை" என்று எண்ணியபடி குமாரியினுடைய அறைக்கதவை மெல்லத்திறந்தாள் மோகினி.

குமாரி மோகினியைக் கண்டதும் "மோகி என்ர மோகி வந்திட்டியே வா!வா!" எனச் செல்லக்குரல் மாறாமல் ஆசையுடன் வரவேற்றாள். இருபத்திநான்கு மணித்தியாலமும் நான்கு சுவருக்குள் முடங்கிக் கிடந்தபடியே திறந்துகிடக்கும் ஜன்னலினூடாகத் தொடுவானத்தை வெறிக்கும் குமாரியினுடைய வாழ்க்கையில் மோகினியினுடைய வரவுதான் ஒரு திருப்புமுனையாக விருக்கும். கிழிந்து போன ஆடைகளுடன் தலைவிரி கோலமாக முகமெங்கும் கீறலுடன் காட்சி தரும் குமாரியைப் பார்த்த மோகினிக்குக் கண்களில் நீர்த்துளிர்த்தது. அவள் குமாரி யை இறுகத் தழுவியபடி கடந்த காலத்தை எண்ணிப்பார்க்கத் தொடங்கினாள்.

சிறிய வயதிலிருந்தே குமாரியும், மோகினியும் ஒன்றாகப் படித்தவர்கள்: இருவருமே நல்ல கெட்டிக்காரர்கள். சந்தோசங்களையும், துக்கங்களையும் ஒருவருக்கொருவர் பரிமாறி ஒன்றாக

பேரழகி.

ஆனால் அவளிடம் 'கர்வம் துளிகூட இல்லை. மாறாக அன்பு, அடக்கம் என்பனதான் குடிகொண்டிருந்தன. இவளுக்கேற்ற தோழியாகவே மோகினியும் அன்பு, பண்பு, அடக்கம், பொறுமை என்பன கொண்டு விளங்கி நட்புக்கே எடுத்துக்காட்டாகக் குமாரியும் மோகினியும் பாடசலைக்கும், பெற்றோருக்கும் சகலவிதமாகவும் பெருமை சேர்த்துக் கொண்டிருந்தார்கள். மோகினியின் சிறந்த குரல்வளம் அவளையொரு அறிவிப்பாளராக இனங்காட்ட உதவி



யாக இருந்தது. குமாரி ஒரு நிகழ்ச்சியில் பங்கு பற்றுகிறாள் என்றால் அது அந்த நிகழ்ச்சிகளுக்கே மகுடம் வைத்தாற்போல் இருக்கும். மொத்தத்தில் பாடசாலை வாழ்க்கையில் மோகினியும், குமாரியும் பட்டாம் பூச்சிகளாக சுதந்திரவானில் சிறகடித்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் மட்டுமல்ல இவர்களைச் சூழ ஒரு நண்பிகள் பட்டாளமே இருந்தது. ஆனால் இன்று குமாரியை யார்தான் திரும்பிப் பார்க்கிறார்கள். குமாரியுடன் மணப்பந்தலில் நீயோ? நானோ? எனப் போட்டோவுக்கு போஸ் கொடுத்தவர்கள் அவள் மணம் முடித்து ஆறேமாதத்தில் நோயின் பிடிக்குள் சிக்குண்ட போது அவளை விட்டு விலகிச் சென்றதேன்?. மோகினிக்கு இவர்களை நினைக்க வெறுப்பாகவிருக்கும். சிலவேளை அவர்களின் அறியாமையும் காரணமாகவிருக்கலாம் என நினைத்துத் தன்னைத் தானே ஆறுதல் படுத்தியிருக்கிறாள். A/L பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப்பெற்றுப் பல்கலைக்கழகம் தெரிவான குமாரி பல்கலைக்கழகத்துக்குச் செல்லாமலே தாய் தந்தையரினால் மணம் முடித்து வைக்கப்பட்டாள். அதன் விளைவு இன்று மூலையில் முடங்கிக் கிடக்கிறதுதான் என்றால்

என நினைத்த மோகினிக்கு கண்களில் இருந்து கண்ணீர் முத்துக்கள் அவள் அணைத்திருந்த குமாரியின் தலையில் பட்டுச் சிதறியது. "என்ன மோகி அழுகிறாயா? என்ர குட்டி ஏன் அழுகிறதாம்? சீ....சீ எந்த நிலையிலும் தைரியத்தை இழக்கக் கூடாது என்றெல்லே சொல்லுறனான்" எனக் குமாரி தனது பழையபேச்சுத் திறமையைக் காட்டினாள். அவளது குரலில் தனது எண்ணங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்த மோகினி குமாரிக்கு வேண்டிய மாத்திரைகளை அன்புடன் புகட்டி விட்டாள். மோகினியைத்தவிர வேறு எவர் கொடுத்தாலும் அவள் மாத்திரைகளைக்குடிக்கமாட்டாள். குமாரிக்கு ஒருவாறு மாத்திரைகளைக் கொடுத்துத் தூங்க வைத்துவிட்டு அவள் தாயிடம் விடை பெற்றுக் கொண்டு மோகினி தனக்கு நடைபெற விருக்கும் பெண் பார்க்கும் படலத்தை நினைத்துக்கொண்டும் தான அதற்குச் சம்மதித்த விதத்தைநினைத்துக்கொண்டும் வீட்டை நோக்கிச் சைக்கிளை மிதித்தாள்.

வழமைபோல் மோகினி பாடசாலையில் மாணவர்களுடன் சிரித்து மகிழ்ந்து விட்டு மோகினி வீட்டுக்குச்சென்று அங்கேஅவளைப் பார்த்த நிலையை எண்ணிச் சோகத்தில் வீட்டையடைந்தாள். வீட்டுக்குச் சென்றால்அங்கு தாய் ஆஸ்துமாவினால் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தாள். தந்தை வழமை போல் புறோக்கர் வீட்டுப் படிகளை ஏறச் சென்றிருந்தார். அவளுக்குத் தனது வாழ்க்கையே வெறுத்தது. இவற்றுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டாள். இவளின் வாழ்க்கையில் என்றுமே இப்படியான சுமைகள் தான் அதிகம் நோய் வாய்ப்பட்ட தாய்,தந்தை வறுமை இவைகளைத் தாங்கித்தான் இவ்வளவு காலமும் வாழ்ந்திருக்கிறாள். இன்னும் தாங்கி வாழத் தயார் தான். ஆனால் இவர்களல்லவா என்னை ஒரு சுமையாகக் கருதித் தினம்தினம் புறோக்கர் வீட்டை நாடுகிறார்கள். ஏன் இவர்கள் என்னைப் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள்.சீதனமில்லாத மாப்பிள்ளையைத் தேடி அலையும் தந்தையையும் அவரது பரிதாப நிலையையும் எண்ணி எத்தனை தடவைகள் கண்ணீர் வடித்திருக்கிறாள். ஒரேயொரு பிள்ளையாக விருந்தாலும் நான் தாய்தந்தைக்குப் பாரமாகவே இருக்கிறேன் என நினைத்து வருந்தியிருக்கிறாள். இவைதானா எனக்குக் கிடைத்த கற்பனைகள். எனது விழிகள் என்றுமே நீரைச் சொரியவே படைக்கப்பட்டனவோ?

நிலையில்இருக்கிறோம். அதற்குள் உனக்குத் துணையொன்றைத் தேடத்தானே இப்படி அலைகின்றோம். மாட்டன், மாட்டன் என்ற புராணத்தை விட்டிட்டு இந்த சம்பந்தத்துக்காவது ஓமெண்டு சொல்லம்மா" எனத் தாய் கெஞ்சுவதைப்பார்த்தாள். ஏற்கனவே இவற்றுக்கெல்லாம் ஒரு முடிவு காணத் தீர்மானித்து விட்டதால் அவள் மறுக்காமல் ஒத்துக்கொண்டாள். அவள் ஒத்துக் கொண்ட சந்தோசத்தில் அவர்கள் மாப்பிள்ளையைப் பற்றி கூறத் தொடங்கினார்கள். "பெடியன் நல்ல குணசாலியாம். அழகாகவும் இருக்கிறானாம் சீதனம் வேண்டாம் எண்டு சொல்லிப் போட்டானாம். வெளி நாட்டில் இருந்து மூன்றுமாத லீவில் வந்திருக்கிறானாம்." என்று மோகினியுடைய தாய் கூறிக் கொண்டிருந்தாள். வெளிநாடு என்ற சொல்லைக் கேட்ட மோகினியின் கண்கள் தீயாய்த்தகித்தன. தாயின் கண்களைப் பார்த்தாள். அதிலிருந்த எதிர்பார்ப்புக்களை நிராசையாக்க விரும்பாமல் தனது சம்மதத்தை பரிபூரணமாகத் தெரிவித்தாள். இதன் விளைவுதான் இன்று மோகினிக்குப் பெண் பார்க்கும் படலம் நடக்கவிருக்கிறது. அவள் வேகமாகச் சைக்கிளை மிதித்தாள். களைத்து விழுந்துவீட்டுக்கு வந்த மோகினியைப் பார்த்து "என்னம்மா மோகினி நாலுமணிக்கு அவர்கள் வந்துவிடுவார்கள். இண்டைக்குப் பாடசாலைக்கு லீவு போடச் சொன்னனான். நீதான் கேட்க மாட்டனென்று போனாய். சீக்கிரமாகச் சாப்பிட்டுவிட்டு வெளிக்கிடு" என தாயார் நச்சரித்துக்கொண்டிருந்தாள். ஒரு திருமணமென்றால் பெண்ணைப் பெற்றவர்களுக்குத் தான் எத்தனை துன்பம் என நினைத்துக் கொண்டு சாப்பிடச் சென்றாள் மோகினி.

மாப்பிள்ளை வீட்டார்கள் வந்துவிட்டார்கள். மோகினி அமைதியான நடையுடன் வந்து அனை

## இ.ரேணுகா

வருக்கும் தேனீர் பரிமாறி விட்டு அவர்களை நோக்கிக் கரம் குவித்தாள். அவர்களின் கேள்விகளுக்கு அன்பாகப் பொறுமையாக புன்னகையுடன் பதிலிறுக்கும் அழகும் அடக்கமும் கூடிய மோகினியைப் பார்த்த மாப்பிள்ளை சுரேஷ்தான் அதிஷ்டகாரன் என நினைத்துக் கொண்டான். எங்களுக்குப் பெண்ணைப் பிடித்துவிட்டது. உங்களுக்குப் பையனைப் பிடித்திருக்கிறதா? என்ற கேள்விக்கு ஆம் என்ற பதிலே கிடைத்தது. அதற்கிடையில் மோகினி "இந்தக் கலியாணம் நடக்க வேண்டுமானால் எனது கேள்விக்குப் பதில் கிடைக்க வேண்டும்" என்றதும் மாப்பிள்ளை வீட்டார் மட்டுமல்ல மோகினி வீட்டாரும் அதிர்ந்தார்கள். இதுவரை அன்பு ததும்பிய அவள் விழிகள் இப்பொழுது நெருப்பை உமிழ்ந்து கொண்டிருந்தன. அவளது விழிகளின் கோர

முடியுமா?" என்றதும் சுரேஷ் மின் தாக்குதலுக்கு உள்ளானான். "மிஸ் மோகினி நீங்கள் அடுத்தவனை முட்டாள் என்றா நினைக்கிறீர்கள். இப்படி அவமானப்படுத்துவதற்காகவே என்னை இங்கு வரவழைத்தீர்களா? எனப் பொரிந்து கொட்டினான். "மிஸ்டர் சுரேஷ் தயவு செய்து நான்சொல்வதைக் கேளுங்கள். என்றவாறு தனக்கு ஏற்பட்ட தாக்கத்தைக் கூறத் தொடங்கினாள் மோகினி.

"எனது நண்பி குமாரியென்று ஒருத்தியிருக்கிறாள். அவள் இன்று இருப்பதை நீங்கள் பார்த்தால் நிச்சயமாக வருந்துவீர்கள். சிட்டாகச் சிறகடித்த அவள் வாழ்க்கையில் முகவுரை தொடங்கும் முன்பே முடிவுரை யெழுதப்பட்டது. இன்று அவள் ஒரு பைத்தியம். அதுமட்டுமல்ல அவளது வாழ்க்கை இன்றோ அல்லது ஒருசில மாதங்களிலோ முடியலாம். ஏன் தெரியுமா? என்னைப் போல்தான் அவளும் ஒரு ஏழை. அவளது வாழ்விலும் உங்களைப் போல் ஒரு வெளிநாட்டு மணமகன் புகுந்து கொண்டான். அவன் எப்படியோ H.I.V தொற்றுக்கு இலக்கானவன். தனக்கு எயிட்ஸ் இருப்பது தெரிந்தும் அதனை மறைத்து எனது நண்பியின் அழகில் மயங்கி அவளை மணந்து கொண்டு அவளது வாழ்வையே அழித்தான். அவளது பெற்றோர் பெண்ணுக்கு வளமான வாழ்வைத் தேடிக் கொடுப்பதாக நினைத்து திருமணம் செய்து வைத்தனர். அது அவளது வாழ்வையே துளிர்விட முன்னம் கருக்கி விட்ட போது அவர்கள் இடிந்து போனார்கள். அவளது தந்தை அதிர்ச்சியிலேயே மரணமாக இன்று எயிட்ஸ் தொற்றிய பைத்தியக்காரப் பெண்ணை வைத்துக் கொண்டு தினமும் வருந்தும் தாயைப் பார்த்தால் கல்லும் கசியும் தெரியுமா?. தினமும் நான் அவளைப் போய்ப் பார்ப்பேன் அப்பொழுதே நான் எடுத்த தீர்மானம் தான் இன்று உங்களிடம் கேட்கப்பட்ட கேள்வி" என்று அவள் கூறி முடித்ததும் சுரேஷின் மனமும் ஒருகணம் நெகிழ்ந்தது" மிஸ் மோகினி நீங்கள் பார்த்த ஒருவனை வைத்து அனைவரையும் எடை போட்டுவிட்டீர்கள். ஆனால் உங்களை நான் எப்படி தற்சமயம் நினைக்கிறேன் தெரியுமா? அன்பு, அடக்கம், பொறுமை இவையெல்லாம் நிறைந்த ஆனால் துணிகரமான ஒரு புதுமைப் பெண்ணைத்தான் காண்கிறேன். நீங்கள் கேட்டது இப்பொழுது எனக்குத் தப்பாகத் தெரியவில்லை. உங்களைப் போல் அனைவரும் புதுமைப் பெண்களாகத்தான் இருக்க வேண்டும். அதற்காக கலாசாரத்தை கைவிட்டுவிடக் கூடாது" என்று கூறினான் சுரேஷ். "எனக்கு H.I.V தொற்றுஇல்லையென்பதை நிரூபிக்க நீங்கள் எந்தவைத்தியரிடம் கேட்டாலும்

கினாள்.

சிறிய வயதிலிருந்தே குமாரியும், மோகினியும் ஒன்றாகப் படித்தவர்கள். இருவருமே நல்ல கெட்டிக்காரர்கள். சந்தோசங்களையும், துக்கங்களையும் ஒருவருக்கொருவர் பரிமாறி ஒன்றாக உண்டு ஒன்றாக விளையாடி ஒரே பாடசாலையில் படித்தார்கள். கல்வியில் மட்டும் தான் மோகினி சிறந்தவளாக இருக்கக் குமாரியோ விளையாட்டா? கலைநிகழ்ச்சியா? பேச்சா? எதுவாகவிருந்தாலும் சரி தனது திறமையை அனைத்துத் துறைகளிலும் வெளிக் காட்டத்தவறுவதில்லை. மோகினி அழகியென்றால் குமாரி

பெறுபேறுகளைப்பெற்றுப் பல்கலைக்கழகம் தெரிவான குமாரி பல்கலைக்கழகத்துக்குச் செல்லாமலே தாய் தந்தையரினால் மணம் முடித்து வைக்கப்பட்டாள். அதன் விளைவு இன்று மூலையில் முடங்கிக் கிடக்கிறதுதான் என்றால் மோகினிக்கு நம்ப முடியாமற்தான் இருந்தது. என்ன செய்வது நம் பித்தானேயாக வேண்டும். பரீட்சை நேரத்தில் மோகினியின் தாய் நோய் வாய்ப்பட்டதால் மோகினிக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காததால் குமாரி எவ்வளவு தூரம் கவலைப்பட்டாள். ஆனால் இன்று நான் பார்த்துக் கவலைப்பட வேண்டிய நிலையில் இருக்கிறாளே

கண்ணீர் வடித்திருக்கிறாள். ஒரேயொரு பிள்ளையாக விருந்தாலும் நான் தாய்தந்தைக்குப் பாரமாகவே இருக்கிறேன் என நினைத்து வருந்தியிருக்கிறாள். இவைதானா எனக்குக் கிடைத்த கற்பனைகள். எனது விழிகள் என்றுமே நீரைச் சொரியவே படைக்கப் பட்டனவோ? அவள் சிந்தனைக்கு முத்தாய்ப்பு வைப்பது போல் அவளது தந்தை புறோக்கர் வீட்டில் இருந்து வீட்டுக்கு வந்தார். உள்ளே தாயும் தந்தையுமாக ஏதோ பேசிவிட்டு மோகினியிடம் வந்தனர். அம்மா மோகினி எங்கள் இருவரது நிலையும் உனக்குத் தெரியும். இண்டைக்கோ,நாளைக்கோ என்ற

னால் எனது கேள்விக்குப் பதில் கிடைக்க வேண்டும்'' என்றதும் மாப்பிள்ளை வீட்டார் மட்டுமல்ல மோகினி வீட்டாரும் அதிர்ந்தார்கள். இதுவரை அன்பு ததும்பிய அவள் விழிகள் இப்பொழுது நெருப்பை உமிழ்ந்து கொண்டிருந்தன. அவளது விழிகளின் கோரத்தைக் கண்ட சுரேஷ் ''இந்தப் பொண்ணுக்குள் இப்படியொரு நெருப்பா?'' என ஆச்சரியப்பட்டான். அடுத்து அவள் கேட்ட கேள்வியில் திர்ச்சியும் அடைந்தான். ''மிஸ்டர் சுரேஷ் நான் உங்களைத் திருமணம் செய்ய வேண்டுமானால் உங்களுக்கு H.I.V இல்லை என்ற உறுதிப்பாடு வேண்டும். அதை உங்களால் நிரூபிக்க

போல் அனைவரும் புதுமைப் பெண்களாகத்தான் இருக்க வேண்டும். அதற்காக கலாசாரத்தை கைவிட்டுவிடக் கூடாது'' என்று கூறினான் சுரேஷ். ''எனக்கு H.I.V தொற்றுஇல்லையென்பதை நிரூபிக்க நீங்கள் எந்தவைத்தியரிடம் கேட்டாலும் நான் வரத்தயார்'' என்று அவன் கூறியபோது மோகினி அவனை நோக்கிக் கரம் குவித்தாள். ''நீங்கள் கூறிய வார்த்தைகள் ஒரு வைத்தியரிடம் கிடைக்கும் சான்றை விட மேலானது'' என்று கூறினாள். 'அவள் கூறிய தருணம் அனைவரது உள்ளமும் மகிழ்ச்சியால் நிறைந் திருந்தது.

# [ே]காலம்

எங்கோ ஒரு சில்வண்டு தன் துணையை அழைத்துக் கொண்டிருந்த ஓசையின் மத்தியில் நினைவுக் காற்றில் மனக்கதவாடப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான் அருணன். எவ்வளவு தான் முயற்சி செய்த போதும் நித்திராதேவி அவனை அணைக்க மறுத்துச் சண்டித்தனம் செய்து கொண்டிருந்தாள். நித்திராதேவி மட்டுமா? ஏன் அவனுடைய அவளும்(?) கூடத்தான். அவனுடைய மனடெக் முடிந்த சம்பவங்களை ரிவைன்ட் பண்ணிக்கொண்டிருந்தது. அவளை முதலில் தரிசித்த இனிய நிகழ்வு அவன் கண் முன் விரிந்தது.

வழமையாகக் ஹீரோ ஹொன்டாவில் கல்லூரிக்குப் போகும் அருணன் அன்று ஏனோ பஸ்ஸில் போய்க்கொண்டிருந்தான். இடையில் பஸ் நின்றபோது தற்செயலாக வெளியில் பார்த்த அவன் கண்கள் அங்கேயே ஸ்ரைக் செய்தன. கறுப்புஜுன்ஸ், தொளதொளரீசேட், பாப் செய்யப்பட்ட ப்ரவுன் கூந்தல், கூலிங் கிளாஸ் கண்கள் இவ்வளவும் சேர்ந்த உருவமொன்று அடுத்த பஸ்ஸில் ஏறிக் கொண்டிருந்தது. இவனைக் கேட்காமலே இவன் இதயமும் அந்த பஸ்ஸில் தொற்றிக் கொண்டது.

மறுநாள் அதே பஸ்ஸைத் தேடிப் பிடித்து ஏறிக்கொண்டான். கண்கள் அவளைத்தேடி அலைந்தன. கண்டு கொண்டன. அதே தோற்றம்.அவளை அருகில் சென்று பார்த்து விட எவ்வளவோ முயற்சி செய்தான். முடியவில்லை. ஒரு கிழமையாக அதே பஸ்ஸில் போயும் அவளை அருகில் தரிசிக்க அவனுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவன் மனம் ஆதங்கப்பட்டது.

பலநாள் எதிர்பார்த்த சந்தர்ப்பம் ஒரு நாள் அருணனுக்குக் கிடைத்தது. அவளுக்குப் பின்புறமாக அருணன் அன்று நின்றிருந்தான். கிடைத்தவாய்ப்பை விட்டுவிடாமல் ''மிஸ்! உங்கபேரை அறியலாமா?'' கேட்டுவிட்டான். அவளோ காதில் விழாதது போல் நின்றாள். மீண்டும் மெதுவாக

''மிஸ்! உங்களைத்தான்! உங்க பெயர் என்ன?'' கேட்டான்.

''என்னையா கேட்டீங்க?'' அதிர்ந்து போய்க் கேட்டாள்.

மயில்ப்பெண்ணுக்கு குயில்க் குரலை எதிர்பார்த்தான். ஏமாந்தான். மயிலுக்கு மயில்க்குரல் தானே. அவள் கண்களில் வியப்பும், ஆத்தரமும் போட்டிபோட்டன. இதழ்களில் ஒரு சிரிப்பு. அதில் அவமானமா,பெருமையா அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

''நான் அப்படியென்ன கேட்கக் கூடாததையா கேட்டு விட்டேன்? மனம் கேட்டது.

கடைசிவரை அவள் தன் பெயரைக் கூறவில்லை. ஆனால் அதன் பிறகு அவனைத் தூரநின்று பார்ப்பதும் புன்னகைப்பதுமாக இருந்தாள். எப்பவும் தூர இருப்பதுக்குத் கிராக்கி அதிகம் தானே. எல்லாக் காதலர்கள் போல அவனும் கற்பனைக் கோட்டை கட்டினான். தூக்கத்தையும் கோட்டை விட்டான்.

கட்டிலில் புரண்டு கொண்டிருந்த அருணனின் மனதில் கேள்வி அலைகள் ''அவள் எனக்குக் கிடைப்பாளா? அவளைப் பார்த்தால் இந்துப் பெண் போலி


**அருந்தா**

ல்லை. பொட்டு, நகை ஒன்றையும் காணவில்லை. அம்மா, அப்பா என்ன சொல்வார்களோ?'' என்ன வந்தாலும் எதிர் கொள்வதென முடிவு செய்தான்.அந்தத் துணிவில் தான் அன்று காலை, தன் மனதை வெளிக்காட்டி ஒரு கடிதம் எழுதி அவளறியாமல் அவள் பைக்குள் வைத்திருந்தான். அவள் நாளை என்ன சொல்வாளோ என்ற பயத்தில் நித்திரை ஓடிவிட்டது.

வழக்கம் போல பொழுது விடிந்தது. காதற் பரீட்சையின் முடிவைக் காணப் புறப்பட்டான். எல்லோரும் வந்தார்கள் பஸ் ஸும் வந்தது. ஆனால் அவள்? வரவேயில்லை. நாட்கள் சில நகர்ந்தன. அவளுக்கு என்ன வாயிற்று? அவனுக்குத் தெரியவில்லை. அவனால் இயல்பாக இருக்க இயலவில்லை. பித்துப் பிடித்தவன் போனான். கல்லூரிக்கும் செல்ல மனமில்லை.

வாசலில் மணிச்சத்தம் கேட்டது தபாற்காரன். நண்பன் கரன் தன் தங்கையின் திருமணம் பற்றி எழுதியதோடு, அழைப்பிதழும் அனுப்பியிருந்தான். கொழும்புவாசியான மணமகனின் அழகையும், குணத்தையும் புகழ்ந்திருந்தான். தன்னிச்சையாக அழைப்பிதழைப் பார்த்த அருணனின் விழிகள் விறைத்துப் போயின. மணமகன் அமுதன் என்ன பெயரோடு பிரசுரிக்கப்பட்டிருந்த படத்தில் 'அவனுடைய 'அவள்' சிரித்துக் கொண்டிருந்தாள். அது கலிகாலமே. ஓர் உருவந்தாங்கி அவனெதிரில் நின்று சிரிப்பது போல் அவனுக்குத் தோன்றியது.

# மகளிர் உலகம்





## உங்கள் எதிர்காலம் உங்களிடமே...!

உங்களிடம் உள்ள பல குறுகிய காலக் குறிக்கோள்களில் நீங்கள் காணும் வெற்றி உங்களுக்கு மிகுந்த நம்பிக்கையளிக்கிறது. ஆனால் எந்த மாளிகையும் இரவோடிரவாக எழுந்து விடுவதில்லை. ஒவ்வொரு கல்லாக அடுக்கப்பட்டுத்தான் உயர்கின்றன. அதனால் எவரேனும் ஒரு மாபெரும் காரியத்தைச் செய்து முடித்து விட்டால் அவனைப்பார்த்து "அவன் பெரிய கில்லாடியாக இருப்பான் போலிருக்கிறதே! என்று மலைத்து விடாதீர்கள். நீங்களும் அவனைப் போல் அந்தக் காரியத்தைச் செய்து முடிக்கக் கூடிய கில்லாடிதான் என்பதில் சந்தேகமேயில்லை. கிடைத்த வாய்ப்பை, மிகுந்த தன்னம்பிக்கையுடன் பயன்படுத்திக் கொண்டால் வெற்றி உங்கள் பக்கமே!

உங்களது இலட்சியத்தைப் பற்றித் தினமும் புலனறிவின் மூலம் சிந்திப்பதனால் அது நாளடைவில் உங்கள் ஆழ் மனதில் பதிகிறது. அங்ஙனம் ஆழ் மனதில் பதிந்த எண்ணங்களே வாழ்வில் வெற்றியைப் பெற்றுத்தருகின்றன. உங்கள் மனதை ஒரு சொர்க்க வாசல் என்று எண்ணிக் கொள்ளுங்கள். அதனுள்ளே நீங்கள் நல்ல எண்ணங்களை, உயர் எண்ணங்களைச் சிந்தியுங்கள். உங்கள் வாழ்வில் நீங்கள் பல அதிசயங்களைச் சாதிக்கலாம். உங்களது ஆழ்ந்த விருப்பம் தன்னம்பிக்கை எவ்வளவு உயரமாக உள்ளதோ அதற்கேற்பவே உங்கள் வாழ்வும் உயர்ந்து நிற்கும்.

உங்கள் வாழ்வு உயர்வது உங்களது எண்ணங்களாலேயே.

(தொடரும்)

## மனசே ரிலாக்ஸ்!



ஒரு பெண்ணின் மனதின் இயல்பை விட ஆணின் மனம் சற்று வலிமையானது. பெண்களால் எல்லா விடயங்களையும் சாதித்து விட முடியாது. பொறுமையானவர்களாகப் பெண்கள் வாழ்ந்து வந்தால் சாதித்துச் சாதனை செய்யும் சக்தி பெண்களிடம் உள்ளது. எது விடயமானாலும் பொறுமை என்ற உணர்வைப் பெண்கள் உணர்ந்து ஏற்று நடந்தால் பெண்கள் வாழ்வில் வெற்றி பெறுவது உறுதி. பொதுவாகக் கணவன் மனைவி இருவரிடையுமே இப்போதெல்லாம் கருத்து வேறுபாடு ஏற்பட்டு உறவு விரிசலடைகின்றது. இதற்குக் காரணம் விட்டுக் கொடுக்கும் பொறுமை பெண்களிடம் இல்லாததே.

பெண்களே! நீங்கள் ஏதாவது தவறு செய்து அதனை மறைக்க முயலும் போதும் அது உங்கள் கணவருக்குத் தெரியவரும் போதும் உங்களுடன் முரண்பாடு கொள்வார். வீண் வெறுப்புப் பிரசவிக்கும். இவை தொடருகையில் நீங்கள் பொறுமையாக இருந்து அவரது கோபத்தைக் குறைப்பதே புத்திசாலித்தனம். அதை விடுத்து அவரை எதிர்த்துப் பேசப் போய் அவரின் வெறுப்பை முற்று முழுதாகச் சம்பாதிப்பதோடு அவரை இழக்கவும் நேரிடலாம். இந்தப் பரிதாப நிலை எமக்குத் தேவைதானா?

பெண்களே உங்களிடம் சில வேளை தவறு இல்லாமல் இருக்கலாம். அதற்காக மனதை புண்படுத்தாதீர்கள். பெண்களாகிய நீங்கள் பொறுமையுடன் வாழ்வதால் ஒன்றையும் இழக்கப்போவதில்லை.

மனதை ரிலாக்ஸ் செய்து பொறுமையுடன் சிந்தித்தால் உங்கள் வாழ்வு சிறந்து விளங்கும்.

பொறுத்தார் மட்டுமே பூமியை ஆள முடியும். பொறுமை என்பது பெண்களுக்கு ஆண்டவன் கொடுத்த வரம். அந்த வரத்தை வீண் செய்தல் கூடாது.

நாம் மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்க முடியாத சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால் அதை விட்டுக் கொடுத்தே ஆக வேண்டும் என்ற நிலையில் மனதை சமாதானம் செய்து ஆறுதலடைந்து விட்டுக் கொடுக்க முயல வேண்டும். அதுவே நம்மை உயர்ந்தவராகக் காட்டி நிற்கும். வாழ்வின் மகிழ்ச்சியும், துக்கமும் பொறுமையென்ற சொல்லிலேயே அடங்கி விடுகிறது.

எவன் ஒருவன் பொறுமையோடிருக்கிறானோ அவனே இம்மையிலும் மறுமையிலும் சிறந்த மனிதனாக வாழ முடியும். எனவே பெண்களே நீங்களும் பொறுமையாவனர்களாக மனதை ரிலாக்ஸ் செய்து விட்டுக் கொடுப்பவர்களாகவே வாழ முயற்சியுங்கள்.

*மாலினி.*

கவலைகளும் பிரச்சினைகளும் வந்து கொண்டே இருக்கும். ஆனால் இப்போது இந்த நிமிடம் மகிழ்ச்சியாய் இருங்கள். உங்கள் கடமைகளை மகிழ்ச்சியுடன் செய்து முடியுங்கள்.

## இல்லறம் நல்லறமாக...!



தமிழரின் பாரம்பரியத்தில் விருந்தோம்பல் பண்பு சிறந்து விளங்குகின்றது. வேண்டாதவர்கள் எமது வீடு தேடி வந்தாலும் அவர்களை இன்முகத்துடன் வரவேற்பது விருந்தோம்பலின் முக்கியபங்கு. ஒரு கோப்பை கஞ்சி என்றாலும் வீட்டிற்கு வருபவருடன் பகிர்ந்து உண்ணும் போது ஒரு திருப்தி எமக்கு ஏற்படுகிறது. எமக்கு எதிரியாக இருந்தாலும் வீட்டிற்குள் வராதே என விரட்டியடிக்கக் கூடாது. புன்னகையுடன் வரவேற்று உபசரித்து அவர்களுடன் ஆறஅமரக் கதைத்து வழியனுப்பலே விருந்தோம்பலின் உயர்ந்த பண்பாகும். அவர்கள் தங்கள் கஷ்ட, நஷ்டங்களை எம்மிடம் கூறும் போது அதை அலட்சியம் செய்யாது பொறுமையுடன் கேட்க வேண்டும். எல்லோருடனும் அன்பாகப் பழக நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அன்புள்ளம் யாரிடம் இருந்தாலும் மற்றவர்களைத் தம் வசப்படுத்த முடியும்.

அன்போடு நாம் ஒருவருக்கு உணவு கொடுத்தால் அது எவ்வளவோ புண்ணியமாம். வீட்டிற்கு வரும் விருந்தினரை நாம் உபசரித்தால் அவர்கள் எம்மை நன்கு உபசரித்து மகிழ்வார்கள். எனவே பெண்களாகிய நாம் விருந்தோம்பல் பண்பைச் சீரிய முறையில் கற்றுச் சிறப்பை எய்துவோம்.

*எஸ். மனோ*

## இடியப்பப் புரியாணி



**தேவையானவை:-** *இடியப்பம் - 50, இறைச்சி - 1 கிலோ தேங்காய் - 1, வெங்காயம் - 1கிலோ, தக்காளி - 1கிலோ, கொத்தமல்லி - சிறிதளவு, மஞ்சள்தூள் - 2தேக்கரண்டி, இஞ்சி, பூண்டு, 100கிராம், மிளகாய்த்தூள் - தேக்கரண்டி, எண்ணெய் தேவையானளவு, உப்பு தேவையானளவு.*

**செய்முறை :-**

தேங்காயைத் துருவிப் பால் எடுத்து உதிர்ந்த இடியப்பத்துடன் கலந்து வைக்கவும். வெங்காயம், தக்காளி, கொத்தமல்லிஇலை போன்றவைகளை நறுக்கிக் கொள்ளவும். பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் நறுக்கிய வெங்காயத்தைப் போடவும். வெங்காயம் வதங்கியதும் இஞ்சி, பூண்டு போன்றவற்றைப் போடவும். பிறகு கறியைக் கொட்டவும். கறி வதங்கிய பின்னர் மிளகாய்த்தூள், மஞ்சள்த்தூள், தக்காளி, கொத்தமல்லி உப்பு போன்றவற்றைப் போட்டுக் கறியுடன் சேர்த்து நன்றாகக் கிளறவும். கறி நன்கு வெந்து பிரட்டல் பதத்திற்கு வந்ததும் இடியப்பத்துடன் கொட்டிக் கிளறவும். கிளறிய பின்பு இறக்கிப் பரிமாறவும்.

*எஸ்.சிவகுமாரி.*

## வீரட்டுங்கள் துன்பத்தை!



வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள், பாதிப்புகள் தற்காலிகமானவை என்பதை நாம் உணர்தல் வேண்டும். துன்பங்களின் மூலமாகத்தான் மனிதன் அனுபவங்களைப் பெறுகிறான். இருள் வந்தால் நிச்சயம் பகல் வந்து தானே தீரும். இருள் எப்படி நிலைத்து நீடிப்பதில்லையோ, அதைப் போல துன்பங்களும் நிரந்தரமாக இருந்து விடுவதில்லை.

சூரியன் இல்லாத பட்சத்தில் மின் விளக்கைக் கொண்டு இருளை அகற்றி வெளிச்சத்தை உண்டாக்குவது போல உங்களுக்குத் துன்பங்கள் வருகின்ற போது உங்களில் மறைந்திருக்கும் நம்பிக்கை எனும் சக்தியை வெளிப்படுத்தித் துன்பங்களை விரட்டுங்கள். உலகத்தின் இருளைப் போக்குவது நம்பிக்கை எனும் ஒளி தான் என்பது மனித வரலாறு.

துன்பங்கள் வரும் போது தான் நாம் திடமாக இருக்க வேண்டும். அதனைக் கண்டு மலைத்தோமானால் காற்றோடு பறக்கும் தூசி போல வாழ்க்கை பிடிப்பற்றதாகி வாழ்வின் இறுதிக்கே கொண்டு செல்லும்.

வேலை பார்க்கும் பெண்களுக்குத் துன்பம் அதிகமாகவே காணப்படும். வெளியே சென்று வேலை செய்ய எவ்வளவு திடம் உள்ளதோ அதே போல துன்பத்தையும் தாங்கும் திடம் வேண்டும்.

கணவன், மாமி, மச்சாள், உற்றார் என எப்பக்கத்தால் துன்பம் வந்த வேளையிலும் துவண்டு விடாது அதனை ஒரு சவாலாக எடுத்து அத்துன்பத்தை எதிர்கொள்ள வேண்டும். பெண்கள் எல்லா வகையிலும் முன்னேறி வந்தாலும் துன்பத்தைக் கண்டு துவழும் பெண்களும் இருக்கத் தான் செய்கிறார்கள். நீங்கள் சோர்ந்து போகாதீர்கள். வெல்ல முடியாது என்று எதுவுமே இல்லை.

உங்கள் வாழ்க்கையில் என்றைக்கு நீங்கள் நம்பிக்கை தீபத்தை ஏற்றுகிறீர்களோ அன்றைக்கு உங்கள் வாழ்க்கை பிரகாசமானதாக மாறி விடும். துன்பத்தைக் கண்டு சோர்வடையாமல் எதிர் நீச்சல் போடுங்கள். நன்றாக வாழலாம்.

L. சசிதேவி,
வல்வெட்டித்துறை.

## நட்பென்றால்...!



- நண்பனுக்கு ஆபத்து, துன்பம் ஏற்படும் போது விட்டு விலகல் கூடாது. மாறாக கைகொடுத்து தூக்கிவிடல் வேண்டும் ஆறுதல் கூற வேண்டும்.
- இன்பத்தில் மட்டும் பங்கு கொள்ளாமல் துன்பத்திலும் பங்கு கொள்ள வேண்டும்.
- நண்பியுடன் கூட இருந்தே குழி பறிக்கக் கூடாது. நண்பிக்காக உயிரைக் கொடுக்கவும் அஞ்சாதவளாக இருக்க வேண்டும்.
- நண்பியென்றால் இவளைப் போல் அல்லவா இருக்க வேண்டும் என்று கூறக்கூடிய நண்பியாக இருக்க வேண்டும்.
- நட்பின் இரகசியமே இவ்வாறான சிற்சில விடயங்களிலேயே தங்கியுள்ளது.

*விதுர்சிகா.*

# மரண விளையாட்டு

வதி ஓரங்களில் நின்றவர்கள் அனைவரும் ஸ்தம்பித்தனர். பிளாட்பார பாதசாரிகள் நடப்பது உண்மையா அல்லது சினிமா ஷூட்டிங்கா என ஆச்சரியம் விழிகளில் தெரிய வாய்பிளந்த வண்ணம் பார்த்துக் கொண்டிருந்தனர். ட்ரபிக் பொலிஸ் உலக ஆவேசமாய் விசில் ஊதினார்.

ப்ரியா ரிவால்வரை எடுத்தாள். க்ளிக், க்ளிக் என்று லோட்பண்ணி காரின் சைற் கண்ணாடி வழியே நீட்டிக் குறி வைத்து சுட்டாள். முதல் குறி தவறியது. அடுத்த இருகுறிகளும் பின்ரயர்கள் இரண்டையும் சிதறடித்தன. கார் ரம் குடித்த ரேஸ் குதிரையாய் சடுகுடு ஆடி லைற் போஸ்ருடன் மோதியது. நிரஞ்சினி காரில் இருந்து இறங்க முயற்சித்தாள். அவளுக்கு நீண்ட அவகாசம் கொடுக்காமல் அடுத்த குண்டு பெற்றோல் ராங்கை வெடிக்கச் செய்ய லட்சம் தகர துண்டுகளாய் சிதறி மஞ்சள், சிவப்பு, கறுப்பு வர்ணங்களில் வானவேடிக்கை நிகழ்த்தியது. அர்ஜுனின் கார் கிரீச்சிட்டு நிற்க அதில் இருந்து இருவரும் இறங்கி கருகிக்கிடந்த நிரஞ்சினியை நோக்கிய வண்ணம் நின்றனர்.

அரவிந்த் தன் சதுரங்கத்தில் அடுத்தகாயை நகர்த்த ஆரம்பித்தான். அதன்படி தூக்குத்தண்டனைக் கைதிகள் ஐவரையும் விடுவிக்கும் கட்டம். தன் அண்ணன் திலீபனின் அதிரடிப்படை தளத்திற்கு போன் பண்ணினான். சிறிது நேரத்தில் ரிசீவர் எடுக்கப்பட்டதைத் தெரிந்து "ஹலோ அதிரடிப்படை கப்டன் திலீபன் இருக்கிறாரா?"

"நீங்கள் யார் என்று அறிந்து கொள்ளலாமா?"

ஐம் அரவிந்த் பிறைவேற் டிடெக்டிவ் திலீபனின் தம்பி"

"எஸ் லைனில் இருங்கள்" என்று இருநிமிடத்தில் முரட்டுக் குரல் ஒன்று கேட்டது.

"ஹலோ நான் திலீபன் ஹியர்"

"அண்ணா நான் அரவிந்த்"

"என்னடா என்ன விஷயம்" அண்ணா போன திங்கட்கிழமை மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் ஐவரையும் விடுவிக்க வேண்டும்" என்று தன் திட்டத்தைக் கூறினான்.

என்ரா நேரடியாக உனக்கு அவர்களை விடுவிக்க அதிகாரம் இருக்க என்னை ஏன் வீணாக சிக்கலில் மாட்டுகிறாய் என்னையும் உன் சதுரங்கக் காயாக மாற்றிவிட்டாயா"

"அண்ணா நேரடியாக நான் அவர்களை விடுவிப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. நீயும் கொஞ்சம் "றிஸ்க் எடேன்"

"சரி சரி நானே அவர்களை விடுவிக்கிறேன்."


அண்ணா நீ இருட்டில் இந்தக் காரியத்தை நிகழ்த்துவது நல்லது. இருட்டுத்தான் திருட்டுக்கு உகந்தது.

"தங்கள் ஆணை பிரபு" என்று ரிசீவரை வைத்தான். அரவிந் சதுரங்கத்தில் தானும் ஒரு காயாகி விட்டதை உணர்ந்தான். தன் உதவிக் கப்டனை அழைத்து விடு விடு என்று ஆணைகளை பிறப்பித்தான்.

* * *

சிறையில் அனைத்துக் கைதிகளும் வேலைமுடிந்து தங்கள் இடங்களுக்குச்சென்று கொண்டிருந்தனர். விஜய் உடம்பில் வழிந்த வியர்வையைத் துடைத்த வண்ணம் அறையை நோக்கிச் சென்றான். திடீரென்று வந்து கொண்டிருந்த ஒருசிறைக் காவலாளி விஜயின் மீது மோதினான்.

மோதிய வேகத்தில் இருவரும் விழுந்து உருண்டனர். என்னையா இன்னும் இருட்ட வில்லை அதற்



குள் பார்வை மங்கிவிட்டதா மாடு மாதிரி வந்துவிட்டாய் என்று திட்டத் தொடங்கினான். அவன் திட்டும் சமயம் விஜயின் ஜீன்ஸ் பொக்கற்றில் காவலாளி மடிக்கப்பட்ட காகிதம் ஒன்றைச் செருகினான்.

"**Sorry** கவனிக்கவில்லை" என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டு எழுந்துவிலகிச் சென்றான்.

விஜய் தன் அறைக்குள் நுழைந்தான். சிறிது நேரத்தில் மற்றைய நால்வரும் வந்து சேர்ந்தனர்.

விஜய் எல்லோரையும் அழைத்து டியர் பிரன்ட்ஸ் உங்களுக்கு ஒரு நியூஸ் வந்துள்ளது என்று தன் பொக்கற்றில் இருந்த மடிக்கப்பட்ட் சிறிய காகிதத்தை எடுத்துக் கொடுத்தான். நால்வரும் சுற்றி நின்று வாசித்தனர்.

'இன்று 12மணிக்கு அறைக் கதவு திறந்திருக்கும் சிறையின் பின்புறம் உங்கள் சாமர்த்தியத்தால் வந்து சேரவும். அங்கு கெலிகொப்டர் ஒன்று நூல் ஏணியுடன் நிற்கும். பின்னர் செய்ய வேண்டியது உங்களுக்குத தெரியும்.'

எல்லோரும் படித்து முடித்துத் காகிதத்தை தூள்தூளாக கிழித்து வாஸ் பேசினில் போட்டுத் தண்ணீரை திறந்து விட்டனர். மெல்ல மெல்ல இருட்டத் தொடங்கி இரவுச் சாப்பாடு முடிந்து எல்லோரும் தூங்கினர். விஜய் அன்கோ தூங்குவது போல நடிக்க ஆரம்பித்தனர். நேரம் நள்ளிரவைஎட்டிக் கொண்டிருந்தது.

இரவில் ஆந்தைகள் அபாயகரமாய் அலறின. எங்கும் நிசப்தம். எங்கோ ஒரு மணிக்கூடு பன்னிரண்டு தரம் அடித்து ஓய்ந்தது. சுவர்க்கோழிகளின் கிறீக் கிறீக் என்ற மரத்தை அரிக்கும் சத்தம் பயத்தை அளிக்க வல்லதாயிருந்தது. துணை சேர்ந்து கொண்டது மையிருட்டு. தனக்குள் நடப்பவைகளை காட்டாது இருந்தது அந்த இருள். அந்த மௌனம் இயற்கை உலகின் அநியாயங்களுக்கெல்லாம் துணை போவது போலத் தோன்றியது.

காவலாளிகள் இரண்டாவது முறை ரோந்தை முடித்துக் கொண்டு சென்றனர். இவர்கள் முன்னே சென்றனர். ஒரு

## மாயவன்

காவலாளி தன் நடையின் வேகத்தை குறைத்தான். தன் பொக்கற்றில் இருந்த சாவிக்கொத்தை எடுத்து விஜய் ஆட்களின் அறையைக் குயிக்காக திறந்து விட்டுத் தொடர்ந்து சென்றான்.

ஓரக் கண்களால் அதனை அவதானித்துக் கொண்டிருந்த விஜய் தன் சகாக்களை அழைத்துக் கொண்டு மெல்ல வெளியே எட்டிப்பார்த்தான். அதே சமயம் ஹெலிகொப்டர் ஒன்று வரும் சப்தம் சிறிதாகக் கேட்டது. 'பலோமீ' என்று மெல்ல மெல்ல சுவருடன் சாய்ந்தபடி நடந்தான். ஒரு திருப்பத்தில் காவலாளி ஒருவன் நடந்து வந்து கொண்டிருந்தான். பட்டென்று விஜயின் நிழல் காவலாளியின் நிழலில் பட்டது. காவலாளி மெல்ல வந்து அங்குமிங்கும் பார்த்து விட்டு விஜய் அன்கோ இருந்த சுவர்ப் பக்கம் நெருங்கினான். சுவருடன் பல்லிபோல் ஒட்டிக் கொண்டிருந்த விஜய் பாய்ந்து பட்டென்று காவலாளியின் கழுத்தை மடக்கி முறித்தான். தட்டென்று காவலாளி விழ அவனை மறைவான இடத்தில் போட்டுவிட்டு தொடர்ந்து சென்றார்கள்.

ஒவ்வொரு இடமாகக் கடந்து சென்றார்கள். பின்புறத்தை அடைந்தார்கள்.25அடி உயரத்தில் இருந்த போக்கஸ்லைற் வட்டமாக சுழன்று சுற்றுப் பிரதேசத்தைப் பகலாக்கிக் கொண்டிருந்தது. விஜயும் சகாக்களும் லைற்வெளிச்சத்தின் பாதையில் இருந்து விலகி நடந்தனர். போக்கஸ் லைற் மீண்டும் அப்பிரதேசத்தை அக்கு அக்காக வெளிச்சமாக்கியது.

ரஞ்சித் சைகை செய்ய எல்லோரும் பட்டென்று படுத்துப் புதரினுள் மறைந்தனர். லைற் வெளிச்சம் அப்பால் சென்றதும் எழுந்து பதுங்கிப் பதுங்கிச் சென்று தம் முன்னால் நின்ற மதிலினை ஒரேதாவலில் தாவிப் பட்பட்டென்று குதித்து வெளியான பிரதேசத்திற்கு வந்தனர்.

## தொடர்கதை

ஹெலிஹொப்டரின் சப்தம் அதிகரித்தது. ஹெலிகொப்ரின் சப்தம் அனைத்துக் காவலாளிகளையும் விழிப்புறச் செய்தது. ஹெலி கொப்டர் மிகத்தாழப் பறக்க அதிலிருந்து

## அங்கம் 20

நூலேணி இறங்கத் தொடங்கியது. விஜய் அன்கோ பாய்ந்து சென்று பட்பட்டென்று ஏணியில் ஏறும் போது காவலாளி ஒருவன் அபாய சைரனை ஒலிக்க அப்பிரதேசம் துப்பாக்கிக் குண்டுகளால் அதிர்ந்தது.

பறந்து கொண்டிருக்கும் ஹெலியின் நூலேணியில் ஐவரும் வரிசையாக ஏறி ஹெலிகொப்டரினுள் நுழைந்தனர். ஜெகன் ஹெலியில் இருந்த ஒருத்தனை நோக்கி "யார் எங்களை விடுவிக்கச் சொல்லி ஓடர் அனுப்பியது"? என்று கேட்டான்.

"ஐ டோன்ற நோ சோ பட எங்களிற்கு எந்தத் தகவலையும் கூறச் சொல்லி அனுமதியில்லை"

"எம்மை எங்கே அழைத்துச் செல்லுகிறீர்கள் என்றாவது சொல்லுங்கள்."

"போனதும் தெரியும் பேசாமல் வாருங்கள் என்றுகூறி பைலட்டின் காதினுள் ஏதோ கிசுகிசுத்தான். ஹெலிகொப்டரில் இருந்த மூன்று நபர்களில் ஒருவன்.

* * *

அர்ஜுன் தன் கராத்தே கிளாசில் "பிளாக் பெல்ற்" ஸ்ருடன்ஸிற்குப் பழக்கிக் கொண்டிருந்தான். அப்போது ரெலிபோன் கிணுகிணுத்தது. ஒரு ஸ்ருடன்ற் வந்து அழைக்க அவனுடன் சென்று ரெலிபோன் ரிசீவரை எடுத்தவாறு "ஹலோ அர்ஜுன் ஹியர்"

தெரியும் அர்ஜுன் எனக்கு உன்னைத் தெரியும். ஆனால் உனக்கு என்னைத் தெரியாது"

'யார் நீ உனக்கு என்ன வேண்டும்'

'அவசரப்படாதே பையா விவரமாகக் கூறுகிறேன் கொஞ்சம் பொறு'

"நேரத்தை வீணாக்கிப் பீடிகை போடாமல் நேரடியாக விஷயத்திற்கு வா" என்றவன் அருகில் நின்ற ஸ்ருடன்சிடம் அரவிந்தை அல்லது ரம்யாவை அழைத்துவரும்படி கட்டளையிட்டான் எழுத்து மூலம்.

"அர்ஜுன் நீ இப்போது அரவிந்துடன் இணைந்து நடத்திக் கொண்டிருக்கும் கேஸிலிருந்து விலக வேண்டும்"

"ஓகோ அப்படி வருகிறாயா. சரி நான் இந்தக் கேஸிலிருந்து விலகி விடுகிறேன். இதனால் எனக்கு என்னலாப்பம் கிடைக்கும்"

"உனக்கு என்னென்ன தேவையோ அத்தனையும் கிடைக்கும். முதலில் கோடி ரூபாய் பெறுமதியான தங்கம் தருகிறோம். பின்னர் எமது தலைவருக்கு அடுத்ததாக அனைத்து அதிகாரங்களுடனும் பதவி. இதைவிடவேறுஎன்ன வேண்டும்.


மிஸ்டர் இவற்றையெல்லாம் தருவாய். ஆனால் எனக்கு இதையெல்லாம் தேவையில்லை. நான் கேட்பதை உன்னாலோ அல்லது உங்கள் தலைவனாலையோ தர முடியுமா?

"அப்படியென்ன கேட்கப் போகிறாய் மிஸ்டர் அர்ஜீன்?"

"எனக்கு என்ன தேவையென்றால்...."

"என்ன வேண்டும் குய்க்காக சொல்லு" எனக்கு என்னவேண்டுமென்றால் பிறந்த தாய் நாட்டில் சுதந்திரத்துடன் வாழும் உரிமைதான். எதிரியிடம் அடிபணிந்து வாழும் கேடுகட்ட வாழ்க்கையல்ல. என் சொந்த முயற்சினால் கிடைத்த பதவியும், அதனால் கிடைக்கும் சொத்தும் எனக்குப் போதும். ஒருவனுக்குத் துரோகம் செய்து பெற்ற பிச்சையல்ல. பெற்றோருடனும் நண்பனுடனும், மனைவியுடனும் வாழும் சுதந்திர வாழ்க்கையே வேண்டும்

(தொடரும்)



# கம்ப்யூட்டர்க் கல்வி



## இன்ரநெற்றும் குழந்தைகளும்



இன்ரநெற்றைக் கேள்விப்படாத, பயன்படுத்தாத மனிதர்களே இல்லை எனும் அளவுக்கு இன்ரநெற் உலகை ஆக்கிரமித்திருக்கிறது. தகவல் பரிமாற்றத் தொழில் நுட்ப வரலாற்றில் இன்ரநெற்றின் அறிமுகமானது ஒரு பெரிய திருப்புமுனை எனக் குறிப்பிடலாம். எல்லா வயதினருக்கும் ஏற்ற ஏராளமான தகவல்களைத் தன்னகத்தே கொண்ட இந்தத் தகவல் களஞ்சியத்தின் நன்மைகள் ஏராளம், மாணவர்கள் தங்கள் கல்விக்குத் தேவையான விடயங்களை வெகு எளிதாகப் பெறலாம். சஞ்சிகைகள், செய்தித் தாள்கள் வாசிக்கலாம். உலகின் மூலை முடுக்கெல்லாம் தொடர்பு கொள்ளலாம். மொத்தத்தில் இன்ரநெற்றானது ஒரு பெரிய தனி உலகம் எனலாம்.

இப்போதைய பெற்றோர்களில் அநேகர் தங்கள் குழந்தைகள் பெரும்பாலான ஓய்வு நேரங்களை இன்ரநெற்றில் கழிப்பதை அவதானிக்கின்றனர். பெரும்பாலான பெற்றோர்களுக்கு இன்ரநெற் பற்றிய சரியான அறிவு, அந்தப் புது உலகத்தின் ஆழ அகலம்,. சாதக பாதகங்கள் முழுமையாகத் தெரிவதில்லை. தங்கள் குழந்தைகள் நிறைய நல்ல தகவல்களைப் பெற்றுத் தங்கள் அறிவை இன்ரநெற் மூலமாகப் பெருக்கிக் கொள்கின்றனர்என்றே அநேகமான பெற்றோர்கள் கருதுகிறார்கள். குழந்தைகளுக்கு இந்தப் புதிய உலகத்தில் எப்படி வலம் வருவது என்று வழிகாட்ட அவசியமில்லை என்றும் அவர்கள் நினைக்கின்றனர். ஆனால் உண்மை அதுவன்று. எவ்வாறு பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைமற்றைய விடயங்களில் வழி நடத்துகின்றார்களோ அதேயளவு கவனம் இன்ரநெற் உலகத்திலும் அவசியமாகின்றது.

இன்ரநெற் ஓர் அதிசய உலகம். எங்களுடைய இந்த உலகத்தைப் போலவே அங்கும் மனிதர்கள் இருக்கிறார்கள். நூலகம் இருக்கிறது. நூதனசாலை இருக்கிறது. பாட்டு இருக்கிறது. படம் இருக்கிறது. நல்லவர்கள் இருக்கிறார்கள். கெட்டவர்களும் இருக்கிறார்கள். கெட்டவர்களா? இன்ரநெற்றில் கெட்டவர்களா? உங்கள் புருவங்கள் உயரக் கூடும். துரதிர்ஷ்டவசமாக அவர்களும் இருக்கிறார்கள். ஆகவே ஆபத்துக்களும் இருக்கின்றன.

புதிய விடயங்களை அறிய ஆவலாக இருப்பது குழந்தைகளின் இயல்பு. இந்த இயல்பை வளர்க்க இன்ரநெற் ஒரு உந்து சக்தியாக அமைகிறது. குழந்தைகளின் இன்ரநெற் அனுபவமானது மகிழ்ச்சியானதாகவும், ஆரோக்கியமானதாகவும், வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் இருக்க அவர்களுக்குப் பெற்றோர்களின் வழி நடாத்தல் மிகவும் அவசியமாகிறது. இந்த வழிகாட்டலானது ஒரு குழந்தையின் எதிர்காலத்தைச் சரியானமுறையில் செப்பனிடுகிறது.

இனி ஆபத்துக்களைப் பற்றி ஆராய்வோம்.

1. பொருத்தமில்லாத தகவல்கள் **(Exposure to Inappropriate Materials)**

இன்ரநெற்றில் பாலியல், விபச்சாரம், வக்கிரம். வன்செயல், இனவாதம், சட்டவிரோதச் செயல்கள் என்பனவற்றைத் தூண்டுகின்ற கதைகள், கட்டுரைகள், படங்கள் என்பனவும் இருக்கின்றன. இந்த வெப் பக்கங்கள் **(Web Pages)** உங்கள் குழந்தைகளுக்குத் தவறான வழிநடத்தல்களை அளிக்கக்கூடும்.

2. பாலியல் ரீதியான உடல் துன்புறுத்தல்கள் **(Physical Molestation)**


இது இன்ரநெற் உலகின் மிக ஆபத்தான விளைவு. இன்ரநெற்றானது **Chat-Line** மூலமாகவும் **e-mail** மூலமாகவும் முகம் தெரியாத புதிய நண் பர்களை உங்கள் குழந்தைகளுக்குப் பெற்றுத் தருகின்றது.

(தொடரும்)

# டெஸ்ற் கிரிக்கெற் வரலாற்றில் சத்தமின்றி ஒரு புரட்சி

**Feb.23; 2002** தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ் பேர்க் நகரம்; ஆஸ்திரேலிய - தென்னாபிரிக்க அணிகளிற்கிடையேயான இரண்டாவது டெஸ்ற் போட்டி ஏறத்தாழ இரு தசாப்தங்களின் பின் வரலாறு ஒருமுறை புதுப்பிக்கப்படுகின்றது. ஆம்!, தென்னாபிரிக்கப் பந்துவீச்சுக்களையெல்லாம் துவம்சம் செய்து ஆக 212 பந்து வீச்சுக்களையே எதிர்கொண்டு ஓர் இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்ததன் மூலம் - 1982இல் இந்தியாவிற்கெதிராக இங்கிலாந்தின் தலை சிறந்த சகல துறை வீரர் இயன்போத்தமின் சாதனையை முறியடிக்கிறார் ஆஸ்திரேலியாவின் அடம் கில்கிறிஸ்ட். டெஸ்ற் ஆட்டங்களின் துடுப்பாட்டப் போக்கில் இது ஓர் அநாயாசமான சாதனை தான் என உலகமே பேசித்தீர்த்தது.

இது நிகழ்ந்து மூன்று கிழமைகளின் பின்... **March 15, 2002;** நியூசிலாந்தின் கிறிஸ்ற் சேர்ச் நகரம்; இங்கிலாந்து - நியூசிலாந்து இடையேயான முதலாவது டெஸ்ற் ஆட்டம். இங்கிலாந்து அதன் இரண்டாவது இன்னிங்ஸில் ஆடிக்கொண்டிருக்கின்றது. ஒரு புறம் கிரஹாம் தோப் வேக வேகமாக ஓட்டங்களைக் குவிக்க, மறுபுறம் கிரிக்கெற் சாதனைகளின் புள்ளிவிபரவியலாளர்கள் பரபரப்பாகிக் கொண்டு தவிக்கின்றனர். அப்பாடா! தப்பினார் கில் கிறிஸ்ட். அவரிலும் பார்க்க 19பந்துகளைக் கூடுதலாக எதிர் கொண்டே தனது இரட்டைச்சதத்தை ஒப்பேற்ற முடிந்தது தோப்பினால். அத்துடன் ஓய்ந்ததா பரபரப்பு? இல்லையே அடுத்தநாளும் தொடர்ந்தது.



பந்தைத் தூக்கி விளாசும் அஸ்ரில்

வெற்றி பெறுவதற்கு 550 ஓட்டங்கள் பெறவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையில், நிலை தடுமாறிக் கொண்டிருந்தது நியூசிலாந்து. 119/3 என்ற அவல நிலையில் ஆடுகளத்துள் நுழைகிறார் நாதன் அஸ்ரில். தொடர்ந்து போட்டி நடைபெற்ற "ஜடே" அரங்கமே புல்லரிக்கத் தொடங்கியது. மறுபடியும் பரபரப்பான புள்ளிவிபரவியலாளர்களால் சாதனைப் பட்டியல்கள் படுவேகமாகப் புனரமைக்கப் படத் தொடங்கின. ஆனாலும் அவர்கள் ஈடு கொடுக்க முடியாத அளவிற்கு அஸ்ரில் பெரும் சூறாவளியாகிக் கலக்கிக் கொண்டிருந்தார். எல்லைக் கோட்டைத் தாண்டியும், தடவியும் பந்துகள் சீறிக் கொண்டிருந்தன. என்ன செய்வதென்றே தெரியாது தவித்த இங்கிலாந்து ஒருவாறு சமாளித்து மறுமுனையில் இலக்குகளை வீழ்த்தத் தொடங்கியது. அதற்கேற்ப 333 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஒன்பது இலக்குகள் கைப்பற்றப்பட நிம்மதிப் பெருமூச்சு விட்டார் நாஸார் ஹீசேன். ஆட்டத்தில் ஸ்திரமான நிலைக்கு வந்து விட்டதுடன் களத்தடுப்பில் காயமுற்றிருந்த கிறிஸ் கெயின்ஸ் அஸ்ரிலோடு வந்து இணைய மாட்டார் என்ற எதிர்பார்ப்பும் இங்கிலாந்திற்கிருந்தது.

இருந்தபோதும் காயங்காரணமாக வயோதிபமடைந்த கெயின்ஸ்(!), லூ வின்செனட் என்ற "பொல்லுடன்" (அட! **By - runner**தான் ) எழுந்து வந்தார். பிறகென்ன,



I.CC டெஸ்ற் கிண்ணத்துடன் ஆஸி.அணி

வெளுத்துக் கட்டினார் அஸ்ரில். டெஸ்ற் சரித்திரத்தின் மிகப்பெரிய வெற்றியை நோக்கிச்சென்று கொண்டிருந்தது நியூசிலாந்து. நடுவழியில், பாவம்! சாதனை படைத்து ஒரு மாதம் முடிய முன்னரேயே கில்கிறிஸ்ரின் பெயர் நீக்கப்பட்டது. வெறும் 153 பந்துகளில் இரட்டைச் சதத்தைப் போட்டுத் தள்ளினார் அஸ்ரில். இரண்டு பந்துகளைத் தொலைத்து, 28பவுண்டரிகள், 11சிக்ஸர்கள் அடங்கலாக 222 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் - பத்தாவது இலக்கிற்காக 118 ஓட்டங்களைக் கெயின்சுடன் பகிர்ந்து ஜெயிப்பதற்கு இன்னும் 99 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில் அஸ்ரிலும் நியூசிலாந்தும் அதிக எதிர்பார்ப்புடன் முன்னேறினர். ஆட்டம் நிறைவுற இன்னும் ஒரு முழு நாள் பாக்கி இருக்கின்றது. அப்போது தான்.....

படம் பூரா கவுண்டமணியிடம் உதைவாங்கி அலுத்தாலும் இடையிடையே அவரிற்கே அல்வா கொடுக்கும் செந்திலைப்போல மத்தியூ ஹொகார்ட்டிடமிருந்து வந்த பந்து அஸ்ரிலின் துடுப்பின் வெளிப் புறத்தைத் தொட்டுத் தடவி விக்கெட் காப்பாளரிடம் போய்ச் சேர்ந்தது. அத்துடன் அஸ்ரில் நடத்திய திகில் நாடகம் நிறைவிற்கு வர, இங்கிலாந்து தப்பிப் பிழைத்தது. ஒரு மாபெரும் வெற்றியை மயிரிழையில் தவற விட்ட போதும் டெஸ்ற் கிரிக்கெற் வரலாற்றில் படிப்படியாக ஏற்பட்டு வந்த ஒரு புரட்சியை வெளி உலகிற்கு அம்பலப்படுத்தி ஓய்ந்தார் அஸ்ரில்.

## புரட்சியின் வித்துக்கள்

பதினொரு சோம்பேறிகள் ஆட பதினோராயிரம் சோம்பேறிகள் பார்த்து இரசிக்கும் ஆட்டம் என்ற "மரியாதை"யைக் கிரிக் கெட்டிற்குக் கொணர்ந்த டெஸ்ற் போட்டிகள், இன்று இந்தளவிற்கு விறுவிறுப்பு மிக்க பரிணாமத்தை அடைந்திருக்கின்றதென்றால் அதற்குப் பல காரணங்களுள. அவற்றுள் மிக முக்கியமானது அதிகரித்த ஒரு நாள் போட்டிகளின் ஆட்டப் பாங்கேயெனின் அது மிகையன்று. அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்கும் துடுப்பாட்டமும், இலக்குகளை வீழ்த்துவதையே இலட்சியமாகக் கொண்ட பந்து வீச்சும் ஒருநாள் போட்டிகளிலிருந்து மெல்ல மெல்ல டெஸ்ற் ஆட்டங்களையும் பதம் பார்க்கத் தொடங்கியுள்ளன. இதன் விளைவே இப்போதைய டெஸ்ற் போட்டிகள் குறிப்பிட்ட கால எல்லைக்கு மிகவும் முன்பாகவே முடிவடையத் தொடங்கியுள்ளதுடன் பார்வையாளர் மத்தியில் ஒரு புதுவித வரவேற்பையும் பெறத்தொடங்கியுள்ளன.

இலக்கைக் கைப்பற்றும் நோக்குடன் பந்து வீசப்படும் போது பந்து வீச்சாளர் பல தந்திரங்களைக் கையாள முற்படுவார். அப்போது வீசப்படும் பாதகமான வீச்சுக்கள் துடுப்பாட்ட வீரரிற்கு மிகவும் சாதகமாக அமைய ஓட்டங்கள் குவியும்: வீரரிற்கு மிகவும் சாதகமாக அமைய ஓட்டங்கள் குவியும். அந்த ஆனந்தத்தில் மேலும் சில ஆபத்தான, அநாயாசமான முயற்சிகளிலே துடுப்பாட்ட வீரர் இறங்கும் போது ஆட்டமிழக்கின்றார். இந்த ஒரு நாள் ஆட்டப்பாணியே இன்றைய டெஸ்ற் போட்டிகளிலும் நிலவுகின்றது. ஆனால் ஆரம்ப டெஸ்ற் போட்டிகளின் போக்கே வேறு. அங்கு ஆறுதலாக - மிகப்பொறுமையாக மட்டைவீச்சாளர் ஆட அதற்கேற்ப மிகநேர்த்தியாகப் பந்துவீச்சாளர் வீசிக்கொண்டிருப்பார். இலத்திரனியல் தொழில்நுட்பம் அசுர வளர்ச்சியடைந்துள்ள இக்காலத்தில் - ஓய்வுப் பொழுதை உல்லாசமாய்க் கழிக்க எத்தனையோ அம்சங்கள் வந்துவிட்ட நிலையில் - இனிமேலும் இரசிகர்களைக் கட்டிப்போட வேண்டுமென்றால் இப்படியான புரட்சிகள் மிக அவசியமானவையே.

சர்வதேசக் கிரிக்கெட் வானில் ஜொலிக்க - ஒரு நாள் மற்றும் டெஸ்ற் போட்டிகள் இரண்டிலும் மின்ன சில துடுப்பாட்ட வீரர்கள்காட்டும் **Double - Game** (டெஸ்ற்றில் அதிரடி; **One - dayer**இல் நிதானம்!)உம் மேற்படி மாற்றத்திற்கு ஒரு அத்தியாவசியமான காரணமாகும். அது மட்டுமன்றி ஐந்து நாட்கள் உடல் அலுக்க ஆடிவிட்டு, ஒரு முடிவு காணாமற்போகக்கூடாது என்ற எண்ணம் வீரர்கள் மத்தியில் தோன்றியுள்ளமையும் இங்கு கவனிக்க வேண்டியதே. சந்தர்ப்பவசமாக நிகழ்ந்தாலே தவிர மறுபுறம் தனிநபர் சாதனைகளை ஓரந்தள்ளி ஒட்டுமொத்த அணியின் வெற்றியே இன்று முக்கிய இலக்காகக் கருதப்படுகின்றது.

## புரட்சியின் சூத்திரதாரிகள்

எழுபதுகளின் நடுப்பகுதியில் இருந்து எண்பதுகளின் பிற்பகுதி வரை கிரிக்கெட் சாம்ராஜ்ஜியத்தின் முடிசூடா மன்னர்களாகத் திகழ்ந்த கரீபியன் தீவினரால் **(West Indies)** ஊன்றப்பட்ட வித்து, டெஸ்ற் கிரிக்கெட் போட்டிகளின் இன்றைய ஜாம்பவான்களான கங்காருதேசத்தால் விசுவரூபமெடுத்திருக்கின்றது. "அதிரடி மன்னன்" விவியன் ரிச்சாட்ஸ், கோர்டன் கிரீன்டீஜ் போன்ற மேற்கிந்திய வீரர்களின் இயல்பாகவே ஆக்ரோஷம் மிக்க விளையாட்டுப்பாணியை, டெஸ்ற் கிரிக்கெட் போட்டிகளில் வெற்றி பெறுவதற்குரிய ஒருநுட்பாக ஆஸ்திரேலியர்கள் கையாளத் தொடங்கியபோதே ஏனைய அணிகளும் மெதுவாக விழித்தன. ஆனால் அதற்குள்ளாகவே ஆஸ்திரேலியர்கள் அதிகளவு சாதித்து விட்டார்கள். தமக்கு மட்டுமன்றி கிரிக்கெட் உலகிற்கே ஒரு மாற்றத்தை ஏற்படுத்திய இச்சாதனைக்காக ஆஸி. அணித்தலைவர் ஸ்ரீவ் வோவும் பயிற்றுநர் ஜோன் புச்சானனும் வரலாற்றின் பதிவுகளில் உன்னத இடம்பிடிப்பர் என்பது திண்ணம்.

ஒரு நாளிலேயே 350 ஓட்டங்களைக் குவித்து, மறுநாள் பாதியின் முன் 500இனை அண்மித்துவிட்டு எதிரணியைத் துடுப்பெடுத்தாடப் பணிக்கும் போது ஆட்டத்தை வெல்வதற்கான சாத்தியமும், கால அவகாசமும் அதிகமாகின்றது. V.V.S லக்ஸ்மனின் மட்டையடிக் கவிதைகளிலும் ஹர்பஜன் சிங்கின் மாயாஜால வீச்சுக்களிலும் மதிமயங்கமுன் - கொல்கத்தாவின் ஈடன் கார்டின்ஸின் துவளும்வரை - தொடர்ச்சியாகப் பதினாறு டெஸ்ற் போட்டிகளைக் கபளீகரம் செய்தபோது மேற்படி உத்தியையே ஆஸ்திரேலியா கையாண்டது. அதன் பின்னரே இப்புதுப்பாணியை ஏனைய அணிகளும் அமுல்படுத்தத் தொடங்கின. முதல் இலக்கிற்காக ஜோடி சேர்ந்து, சாதனை எண்ணிக்கையாக இருநூறிற்கும் மேற்பட்ட ஓட்டங்களை அதிக தடவை கடந்த ஹெய்டன் - லாங்கரிலிருந்து ஏழாவதாகக் களமிறங்கும் கில் கிறிஸ்ட் வரையான பலம்மிக்க துடுப்பாட்ட வரிசையும் ஷேர்ன்வோன், மக்ராத் போன்ற உச்சத் தரம் வாய்ந்த பந்து வீச்சுப் பலமும் சேர்ந்து - சர்வதேசக் கிரிக்கெட்சபை (I.C.C)யின் டெஸ்ற் கிண்ணப்போட்டியில் 5 - 1 என தென்னாபிரிக்காவை வீழ்த்திய இந்த அணி டெஸ்ற் சரித்திரத்தில் முக்கிய தானத்தை வகிக்கும் என்பதை எவரும் மறுக்க முடியாது.



விவியன் ரிச்சார்ட்ஸ் & கோர்டன் கிரீன்டீஜ்

ஏதோ ஓர் உற்சாகத் தேடலிற்காய் இப்படிஆடினாலும் இதனால் கிரிக்கெட்டின் தரம் பாதிப்புறும் எனச் சில பழமைவாதிகள் முணுமுணுக்கும்போதும் வேக வேகமாய் மாறிச் செல்லும் நவஉலகின் போக்கிற்கேற்ப டெஸ்ற் ஆட்டத்திலும் இப்படியான பரிணாமம் ஏற்பட்டிருப்பது காலத்தின் தேவையாகும். பங்களாதேசுடன் என்றாலும் ஒருநாளிலே 500ஓட்டங்களிற்குமேல் அள்ளிய இலங்கையின் சாதனை; ஏழுதடவை தொடர்ச்சியாக முட்டை இட்ட பேடுதானே வருகின்றதென எண்ணிய இங்கிலாந்து வீரர்களை சதமடித்து ஏங்கவைத்த அகார்கரின் (அறை)கூவல்!; தனது இரட்டைச் சதத்தின் இரண்டாவது சதத்தை 39 பந்துகளிலேயே முழக்கமிட்டு முடித்த அஸ்ரிலின் அநாயாசம்; ஆடும் இன்னிங்சுகளின் எல்லாம் ஐந்து இலக்குகளைத் தேடும் முரளியின் முன்னேற்றம் போன்றவையே எதிர்கால டெஸ்ற் போட்டிகளிற்கு இரசிகர்கள் மத்தியில் ஒரு வரவேற்பை ஏற்படுத்தப் போகின்றன.

**க.சேந்தன்**

குறுகிய நேரத்தில் அதிக உற்சாகத்துடன் ஆடப்பட்டு இரசிக்கப்படும் உதைபந்து போன்ற போட்டிகளின் போட்டியிலிருந்து கிரிக்கெட் தப்பிப்பிழைக்க வேண்டுமானால் ஒரு நாள் போட்டியையே மேலும் சுருக்க வேண்டும் என்ற கருத்தே எழுந்துள்ள நிலையில், இப்படியான அதிரடியான மாற்றங்கள் நிகழாவிடத்து டெஸ்ற் கிரிக்கெட்டின் கதி "அந்தோ" வாகிவிடுமென்பது தெளிவு. எனவே 125 வருட வரலாற்றைக் கொண்ட டெஸ்ற் போட்டிகள் வெறும் 31வயதே நிரம்பாத ஒருநாள் ஆட்டத்தின் பாதிப்பிற்கு ஆட்பட்டுள்ள போதும் அது பல விடயங்களில் அனுகூலமாய் அமைந்திருப்பது மகிழ்ச்சியே.

இங்கே இரசிக்கத்தக்க இன்னொரு விடயத்தையும் பார்கலாம் அதாவது மாறியுள்ள டெஸ்ற்கிரிக்கெட்டின் போக்கிற்கேற்ப அஸ்ரில் போன்றோரின் சாதனைகளே இனிமேல் ஆட்டங்காணுமே தவிர பிரையன் லாராவின் நிம்மதிக்கோ (375 - தனிநபர் அதிகூடிய ஓட்டம்) இலங்கையின் பெருமிதத்திற்கோ ($^{952}/_{6}$ - அணியின் அதிகூடிய ஓட்டம்) இனிமேல் பெரும்பாலும் சோதனைகள் இருக்காது.

* * *

## சிரிக்கலாம் வாங்க...

"ஸாரி சார்.......
கிரவுண்டெல்லாம்
ஒரே சகதி..!
அநியாயமா
வழுக்குது!"





பாஸ்ட் பௌலராவது
மண்ணாங்
கட்டியாவது.......
முதல்ல அதைத் தூரப்
போடுங்க!




## வானொலியின் பயன்பாடு

விஞ்ஞான வளர்ச்சியில் முன்னேறும் நாங்கள் விந்தைகள் பல செய்து விண்ணில் நடைபெறும் மாற்றத்தினையும் அறிய மனதுக்குரிய மன்னவனாக வானொலி திகழ்கின்றது. பொன்னான செய்தியினையும் மண் வாழ் உயிரினங்களையும் மண்ணியல் இயல்புகளையும் எமக்குத் துரிதகதியில் ஒலி செய்து மிளிர வைக்கின்றது.

அந்நிய தேசச் செய்திகளையும் அருவியின் ஓசைபோல அடுத்த நிமிடம் அறிகின்றோம். அந்நிய நாட்டுப் பாஷைகளையும் நாம் எளிதில் அறிந்து பயில்கின்றோம். விநாடிக்கு விநாடி பாடசாலை நிகழ்வினையும் தெரிவித்து மாணவ சமூகத்திற்குப் பெரிதும் உதவுகின்றது.

சிறுவர் தொடக்கம் பெரியோர் வரை இன்புற்று வாழ சுகவாழ்வு, பலவகை விளையாட்டு நிகழ்வுகள் பலவகை மருத்துவ நிகழ்வுகள் புண்பட்ட இதயத்திற்குப் புன்முறுவல் ஏற்படுத்தும் பாடல்களையும் பல்வேறு சுவையான நிகழ்வுகளையும் நாம் காதால் கேட்டு மகிழ்கின்றோம்.


வி. சோபனா,
யா/வட்டு மத்திய கல்லூரி.

## நாய்



K.K. அனுஷன்,
யா/அருணோதயக் கல்லூரி

## யானை



த.பாலகுமார்,
யா/ மத்திய கல்லூரி.

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்



அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக உங்களிற்கு வர்ணம் தீட்ட ஆசை தானே? இதோ இங்கு தரப்பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். என்ன நீங்கள் நிறந்தீட்டத்தயார்தானே?



## நான் வளர்க்கும் செல்லப்பிராணி



நான் வளர்க்கும் செல்லப் பிராணி கிளி ஆகும். அதன் பெயர் பற்றம்மா. அது என்னோடு நல்ல பிரியம். அது பழங்களை மட்டுமே விரும்பி உண்ணும். அதன் மேனி வெண்பஞ்சு போன்றது. மேனியின் நிறம் பச்சை. அதனுடைய சொண்டு மிளகாய் போன்றது. அது கூடுதலாகக் கொவ்வைப் பழத்தை விரும்பி உண்ணும். ஒருநாள் நான் குடும்பமாகக் கோயிலுக்குச் சென்றிருந்த போது அந்த கோயிலில் ஒரு வியாபாரி இருந்தார். அவர் ஒரு கூட்டில் கிளிகள் வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார். பின் எல்லாம் விலைப்பட்டு விட்டன. இது மட்டும் விலைப்படவில்லை அது கூட்டில் சோகமாக உட்கார்ந்திருந்தது. எனக்கோ அதைப் பார்க்கப் பாவமாகவும், ஆசையாகவும் இருந்தது. உடனே நான் அப்பாவை வாங்கித் தரும்படி கேட்டேன் அப்பா அதனை உடனே எனக்கு வாங்கித் தந்தார். அதில் இருந்து நான் அதனோடு நல்ல பிரியம். அதற்கு உணவு வைத்து அதை சுறுசுறுப்பாக இருக்க வைத்தேன். பின் அது சுறுசுறுப்பாக என்னுடனேயே வளர்ந்து வருகிறது.

I.வினோயினி,
J/H/L/Collage.

கண்ணுக்கு புலப்படும் கடவுளாக விளங்கும் உன் சகோதரனையே நீ வழிபட முடியா விட்டால் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்திருக்கும் கடவுளை எப்படி நீ வழிபட முடியும்.

*சுவாமி விவேகானந்தர்*

## விடுகதைகள்

✡ வீட்டுக்குள் வீடு கட்டி வீட்டையே கொள்ளையிடுவான் அவன் யார்?
எலி

✡ சிவப்பு வீதியில் வெள்ளைக் கல்லு அது என்ன?
பல்லு

✡ வெள்ளை வீதியில் கறுப்புக்கார் ஓடுது அது என்ன?
கண்

✡ ஆடையுடன் வீற்றிருப்பாள் அவளைப் போல் பெற்றெடுப்பாள் அனைவருக்கும் பசி தீர்ப்பாள்?
நெல

✡ உயரத்தில் பிறந்து ஊர் எல்லாம் சுற்றி உடைபட்டுச் சாவான் அவன் யார்?
தேங்காய்

த.நிதர்சன

## பொது அறிவு

☼ ஒலிம்பிக் விளையாட்டின் தாயகம் எது?
*கிரீஸ*

☼ சாரணர் இயக்கத்தைக் கண்டு பிடித்தவர் யார்?
*பேடன்பவல்*

☼ இலங்கையின் செய்மதிப் பரிவர்த்தனை நிலையம் அமைந்துள்ள இடம் எது?
*பாதுக்கை*

☼ இலங்கையின் வரலாற்று ஆதார நூல் எது?
*மகாவம்சம்*

☼ இலங்கையில் அதிக உஷ்ணம் மிகுந்த இடம் எது?
*அம்பாந்தோட்டை*

☼ பூமிக்கு அண்மையில் உள்ள கோள் எது?
*புதன்*

☼ நோர்வே நாட்டின் தலை நகர் எது?
*ஒஸ்லோ*

யோ.சுதர்சினி,
உடுவில் மகளிர் கல்லூரி.

வலம்புரியின் ஆதரவுடன் நடத்தப்பட்ட மூத்த பத்திரிகையாளர் அமரர் செல்லத்துரை ஞாபகார்த்தச் சிறுவர் பாடல் போட்டியில் பரிசு பெற்ற கவிதை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

## ஒன்றாய்க் கூடி நன்றாய் வாழுவோம்

சின்னஞ்சிறிய சிறுவர் நாம்
சிரித்து மகிழும் சிறுவர் நாம்
கன்னங் கரிய காக்கையைப் போல்
பிரிவு இல்லாச் சிறுவர் நாம்

பென்னம் பெரிய தடைகளைத் தாண்ட
பெரியோர் வழிபற்றும் சிறுவர் நாம்
தன்மானம் கொண்ட தமிழ்த் தாயின்
தயவில் வாழும் சிறுவர் நாம்

உண்ண உறங்க முடியவில்லை - சொந்த
ஊரில் வாழவும் முடியவில்லை
எண்ண எழுத இயலவில்லை
எடுத்தியம்பவும் முடியவில்லை

பள்ளி செல்லும் வயதினிலே - எங்கள்
பக்குவத்தைச் சிதைக்கின்றார்
துள்ளி ஓடும் பிஞ்சுகளையும்
துப்பாக்கியால் துளைக்கின்றார்

ஒன்றாய்க் கூடி ஒற்றுமையாய்
ஒரே நாட்டில் வாழ்கையிலே
கன்னா பின்னா யுத்தமொன்று - எங்களை
சின்னா பின்னமாக்கிறது.

சின்னஞ் சிறிய சிறுவர்நாம்
நாளை நாட்டை ஆழ்கையிலே
ஒன்றாய் வாழும் தத்துவத்தை
நன்றாய் எழுதிக் காட்டுவோம்.

எம். பிருந்தா,
கோண்டாவில்.

## சென்றவார விவேகப் புதிருக்கான விடைகள்

**1141, 1561, 1981**

நா.மகேந்திரலிங்கம்.

## இவ்வார கணிதப் புதிர்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

இடமிருந்து வலமாகவோ மேலிருந்து கீழாகவோ மூலை விட்டமாகவோ கூட்டி வரும் எண்களின் தொகை 175ஆக வருமாறு வெற்றிடங்களை எண்களால் நிரப்புக.

*P.அன்ரன் ஜெயக்குமார்,*
*குருநகர்.*

## நான்



எனது பெயர் சூசைப்பிள்ளை நஜீவ். நான் தரம் 10இல் கல்வி கற்கிறேன். எனக்குப் பிடித்த பாடம் விஞ்ஞானம். நான் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் கல்வி கற்கிறேன். மற்றும் உதைபந்தாட்டத்தில் எனக்கு நல்ல பயிற்சி உண்டு. நான் வீட்டில் மூத்தவன். எனக்கு இரண்டு தம்பி உண்டு. எனது குடும்பத்துடன் இன்பமாக உள்ளேன்.

சூ.நஜீப்

## வாய்ப்பேச்சு வீரமாகாது!

ஒரு காட்டில் பல விலங்குகள் வாழ்ந்து வந்தன. அந்த விலங்குகளுக்கிடையே ஒரு கொழுத்த மான் வாழ்ந்து கொண்டிருந்தது.

நல்ல உயரமாகவும், சதைப் பிடிப்புடனும் இருந்ததால் அந்தக் காட்டில் வசிக்கும் விலங்கினங்களுக்குள்தானே அதிக பலசாலி என்ற இறுமாப்பு அந்த மானுக்கு உண்டு.

பலவீனமான பயந்த விலங்குகளை அந்த மான் அடிக்கடி விரட்டியடிக்கும்.


அவை தன்னைக் காணும் போது தனது வலிமைக்கு அஞ்சியே ஓடுவதாக நினைத்துக் கொண்டு மான் தற்பெருமை கொள்ளும்.

ஒருநாள் காட்டின் பக்கமாக ஒரு வெள்ளாடு மேய்ந்து கொண்டிருந்தது.

அகம்பாவம் பிடித்த மான் வேகமாக ஓடி வந்து ஆட்டை முட்டித் தொந்தரவு செய்தது.

மானின் செயலைக் கண்டு எரிச்சலடைந்த ஆடு. ''நீ ஏன் என்னைத் தொந்தரவு செய்கிறாய். நான் என் உணவுக்காக இலை தழைகளை மேய்ந்து கொண்டிருக்கிறேன். இதனால் உனக்கு என்ன நஷ்டம்'' என்று கேட்டது.

''நான் இந்தக் காட்டின் பலம்



வாய்ந்த விலங்கு, மற்ற எந்த விலங்காக இருந்தாலும் என்னிடம் அடங்கிப் போக வேண்டும். இல்லா விட்டால் அந்த விலங்குடன் சண்டை பிடித்து வெற்றி கொள்வேன'' என்று மான் அகங்காரமாகப் பதில் சொல்லிற்று.

''உன்னிடம் அப்படியென்ன தகுதியிருக்கிறது'' என்று ஆடு கேட்டது.

''எனக்குப் பிற விலங்கினங்களைக் குத்திக் கிழிக்கும் கொம்பு இருக்கிறது. விரைந்து செல்லும் கால்கள் இருக்கின்றன. மின்னெனப் பாயும் மெல்லிய உடலுக்குரியவனாக நான் இருக்கிறேன் எனக்கிருக்கும் இந்தச் சிறப்பு வேறு யாருக்காவது உண் டா?'' என்று மான் கேட்டது.

அப்போது சில வேட்டை ஓநாய்கள் பயங்கரமாகக் குரைக்கும் ஓசை கேட்டது அடுத்த கணமே மானின் முகத்தில் பீதி தென்பட்டது.

வேட்டை நாய்களின் குரைப்பு ஒலி நெருங்கிவருவது போல இருந்தது. அவ்வளவு தான் மான் ஒரே ஓட்டமாக ஓடி மறைந்து விட்டது. அதனைக் கண்டு ஆடு வாய் விட்டுச் சிரித்துக் கொண்டது.

சிறுவர்களே!கதையைப் படித்தீர்களா!

வீரமும், சிறந்த தகுதியும் இல்லாதவர்களே வாயால் வீரம் பேசுவார்கள். அவர்களது செயல்கள் ஒரு போதும் வெற்றியை அளிக்கமாட்டாது. எனவே நீங்கள் தற்பெருமை பேசாது அமைதியாக உங்கள் வாழ்வில் முன்னேறிச் செல்லுங்கள்.

*தொகுப்பு:- சுஜா*

# வீ. எம். கே. யின்

**இவரைத் தெரியுமா – பரிசுப் போட்டி இல: – 23**



படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?

ஒளி தரும் பெயர் கொண்ட நடிகர் இவர். இவரைத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

‘இவரைத் தெரியுமா போட்டி இல:- 23’
‘வீ. எம். கே. ஜுவலர்ஸ்’
இல. 305,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:-
சரியான விடை எழுதும் மூன்று போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும். பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசு களை ‘வலம்புரி’ காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல: – 23**

படத்தில் உள்ளவரின் பெயர் :-..............................
அனுப்புபவரின் முழுப் பெயர் :-..............................
அனுப்புபவரின் முகவரி :-..............................
..............................
..............................

## இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல ௨௨ சரியான விடை




நடிகை ரம்பா

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல. 22 இல் பங்குபற்றி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:**

முதற்பரிசு :– அ.றாஜீவன்
புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி.

இரண்டாம்பரிசு: – ஐ.சசிகலா
392/19, ஸ்ரான்லி வீதி,
சி.ஜீ.ஆர்,
யாழ்ப்பாணம்.

மூன்றாம்பரிசு: – வி.ஸ்ரீகணன்
358/8, நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**சரியான விடைகளை எழுதிப் பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:-**
*F.ஹரல்டினா ஆனைக்கோட்டை, ம.சோபிகன் இணுவில், ச.பதுமன் நாகர்கோவில், பா.சாம்பவி நல்லூர், ச.தமிழினி சுழிபுரம், அ.அன்ச யூலியஸ்நாயகம் குருநகர், ப.கேசிகா வேலணை, V.கஜேந்திரசர்மா அச்சுவேலி, ச.சுகிந்தன் யாழ்ப்பாணம்.*

### விஞ்ஞான சங்கம்....

*(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

சரியான விடையைக் கூப்பனில் எழுதி 09.08.2002 இதற்கு முன்னர்

பத்திராதிபர், யாழ்.விஞ்ஞான சங்கம்(A)
மே/பா.விலங்கியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

*புதிர் இல.07*
*சரியான விடை:- 12நிமிடங்கள்*

குறிப்பு: பரிசுப்பணத்தினை உரியவர்கள் வாரநாட்களில் காலை 9.00மணி தொடக்கம் 4.30மணிவரை விஞ்ஞான பீடாதிபதி அலுவலகம், யாழ். பல்கலைக்கழகம் எனும் முகவரியில்பெற்றுக் கொள்ளலாம்.

*சரியான விடை எழுதி அனுப்பிய பலரில் பரிசு பெறும் அதிர்ஷ்ட சாலிகள.*

1. சபாரத்தினம் அனுசன்
இலகடி. அல்வாய் கிழக்கு
அல்வாய்.


2. பரராஜசிங்கம் ஸர்மிலன்
புகையிரத வீதி அருகாமை
கோட்டைக்காடு, மல்லாகம்.

3.சாந்தகுமார் சுதர்மராஜ்
30, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

முழுக்க முழுக்கச் சர்க்கரையாக இருக்காதே! உலகம் உன்னை விழுங்கி விடும். முழுவதும் எட்டிக்காயாக இருந்து விடாதே! உலகம் உன்னை உமிழ்ந்து விடும்.
*பாரசீகப் பழமொழி*

# பேனா நண்பர்கள்






ச.சத்தியலிங்கம்
சேச்லேன், திருநெல்வேலி கிழக்கு
யாழ்ப்பாணம்.
பத்திரிகை வாசித்தல்,
சினிமாப்பாட்டு பாடுதல்.




ம.நஜீவ்காந்
வயது - 17
கந்தரோடை வீதி,
மல்லாகம்
வானொலி, பத்திரிகை
கிரிக்கெற், உதைபந்தாட்டம்



சு.மணிவண்ணன்
வயது - 20
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
வழமையானவை




இ.சிறிரஞ்சன்
வயது - 20
வாளையம்மன் கோயிலடி
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.
பேனாநட்பு, தொலைக்காட்சி



பி.ராஜ்குமார்
வயது - 17
395/67, அல்லகரைவீதி,
இறம்பைக் குளம், வவுனியா.
விளையாட்டு, T.V
பத்திரிகை, கவிதை

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 24



*அனுப்ப வேண்டிய முகவரி*

**குறுக்கெழுத்துப் போட்டி இல -24**
*‘சங்குநாதம்’,*
*இல:- 15, வெள்ளாந்தெரு,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் :- ..............................
விலாசம் :- ..............................
..............................
..............................

............ இங்கே வெட்டுக..............................

## இடமிருந்து வலம்

(1) கருணை - இதனைக் குறிக்கும் (4) எண்களிலொன்று (5) இது சுட்டாலும் வெண்மை தரும் (6) தீமையை விளைவிக்கும் விளையாட்டு (7) அமுது என்றும் சொல்வர் (8) வண்டி, தேர் ஆகியவற்றைக் குறிக்கும் (9) மருத்துவக் குணமுடைய வீட்டு மரங்களிலொன்று

## மேலிருந்து கீழ்

(1) படைத் தலைவனை இப்படியுமழைப்பர் (2) இது நிறைந்த உணவை உண்டால் ஆரோக்கியமாக வாழலாம் (3) இதன் இசைக்கு ஊரும் உயிரினமொன்று மயங்கும் (5) நாற்சந்தி - இதனை இப்படியுமழைப்பர் (7) துக்கம் - இதனைக் குறிக்கும்

**குறுக்கெழுத்துப்போட்டி இல.23 இன் விடைகள்**

**இடமிருந்து வலம்**

**1. திருவள்ளுவர் 3. கறுப்பு 6. பஸ்பம் 8. பணம் 9. ரம்பம் 10. கடிதம் 12. கரை**

**மேலிருந்து கீழ்**

**1. திரவியம் 2. வறுமை 3. கப்பல் 4. புஸ்வாணம் 5. பாம்பு 6. பம்பரம் 7. பரம்பரை 11. தம்பி**

**பரிசு பெற்றோர் பெயர் விபரம்**

முதற் பரிசு :~ யோ.விக்டர் அரவிந்தன்
ஆண்டு - $10^{A}$
சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்,
சங்கானை.

இரண்டாம் பரிசு :~ க.பாலசுப்பிரமணியம்
பாடசாலை வீதி,
இருபாலை கிழக்கு,
கோப்பாய்.


மூன்றாம் பரிசு :~ S.தர்சினி
பதுபை பதி,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

**போட்டியில் கலந்து கொண்டு பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம.**

*த.மதிசன் யாழ்ப்பாணம், க.ஜனிவா நாவற்குழி, தி.தயந்தன் மானிப்பாய், நா.மாலா வண்ணார்பண்ணை, சி.துஷ்யந்தி யாழ்ப்பாணம், லோ.அனுலா கரவெட்டி, ஸ்ரீ.மயூதரன் திருநெல்வேலி, து.றஜனிகாந்தா சங்கானை, கே.அரசேஸ்வரன் யாழ்ப்பாணம், இ.சிவேஸ்வரன் யாழ்ப்பாணம்.*

குறிப்பு:~
குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “குறுக்கெழுத்துப் போட்டி இல.24” எனத் தவறாது குறிப்பிடவும். அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி 10-08-2002. பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை ‘வலம்புரி’ காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.


| | |
|---|---|
| முதற் பரிசு:- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |




## ஜெய் படத்தில் 45 நிமிட கிராபிக்ஸ்

மாதேஷ் இயக்கத்தில் 'ஜெய்' படத்தில் நடிக்கிறார் பிரசாந்த். இந்தப் படத்துக்காக இதுவரை ஏற்காத கெட்டப்பில் நடை, உடை, பாவனை என எல்லா அம்சங்-களிலும் மாற்றம் செய்யப் போகிறார்களாம்.

அத்துடன் படத்தில் நாற்பத்தைந்து நிமிட கிராஃபிக்ஸ் காட்சியும் இடம் பெறுகிறதாம். இதற்காக ஒரு பெரிய டீம் களத்தில் இறங்கி வேலை செய்து வருகிறது. படத்துக்காக ஒட்டுமொத்த மாறுதல் செய்வது நல்லதுதான். அப்படியே நடிப்பிலும் ஒரு மாற்றம் வேண்டுமே, முயற்சி செய்வாரா?



## அறிமுகமாகும் மும்பை மோடல்



'மோகமுள்' படத்தைத் தயாரித்த டி.என். ஜானகிராமன்தான், இந்த ஜங்ஷனையும் தயாரிக்கிறார். இயக்குநர் ஆர்.எஸ். ராமநாதன், கல்லுக்குள் ஈரம் படத்தின் மூலம் நடிகராக அறிமுகமாகி ஒரு சில படங்களில் நடித்தாலும் பாரதிராஜா, மனோஜ்குமார் ஆகியோரிடம் உதவி இயக்குநராகப் பல படங்களில் பணிபுரிந்தார். அந்த அனுபவமும், கதை விவாதங்களில் கொண்ட பயிற்சியும்தான் அவரை இந்த ஜங்ஷனை இயக்க, வியக்க வைக்கும் அளவிற்கு உதவியிருக்கிறது.


'துள்ளுவதோ இளமை' படத்தில் இரண்டாவது ஹீரோவாக நடித்த அபிநய், இந்தப் படத்தில் கதாநாயகனாக அறிமுகமாகி றார். மும்பை மாடல் கேர்ள்ஸ் கனிஷ்கா, ஆமனா இருவரும் கதாநாயகிகளாக அறிமுகமாகிறார்கள்.

தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையின் தலைவர் கே.சி.என். சந்திரசேகர் தலைமை தாங்க, ஏ.சி. சண்முகம் (எம்.ஜி.ஆர். இன்ஜினீயரிங் காலேஜ் ஆஃப் குரூப் _ சென்னை) அவர்கள் குத்து விளக்கேற்றி பூஜையைத் தொடங்கி வைத் தார். பூஜை முடிந்த கையோடு ஏ.வி.எம். ஸ்டூடியோவிலேயே படப்பிடிப்பை சுடச்சுட ஆரம்பித்தார்கள். பரத்வாஜின் இசையில் ஒரு பாடலும் பதிவு செய்யப்பட்டது. "கல்லூரி காலத்தில் படிக்கும் சக மாணவியுடன் ஏற்படும் நட்புக்கும் _ காதலுக்கும் வித்தியாசம் தெரியவேண்டும். அதே சமயம் படித்து முன்னேற நினைப்பவர்களும் உண்டு, சீரழிபவர்களும் உண்டு. படிக்கும் பருவத்தில் ஏதேனும் ஒரு நடிகை மீது இனம் புரியாத பாசமும் காதலும் பிரியமும் ஏற்படும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அதே நடிகையுடன் நட்புடன் பழகும் வாய்ப்புகள் கிடைத்தால் எப்படி இருக்கும் என்பன போன்ற கருத்துக்களை மையமாக வைத்து யூத்ஃபுல்லாக சப்ஜெக்ட் பண்ணியிருக்கேன்" என்றார் இயக்குநர் ஆர்.எஸ். ராமநாதன். ஏராளமான திரையுலகப் பிரமுகர்கள் விழாவிற்கு வந்து தயாரிப்-பாளரையும், இயக்குநரையும் வாழ்த்திச் சென்றார்கள்.

## வீரலட்சுமியின் பின் சிறந்த நடிகைக்கான விருது தனக்கே என்கிறார் சிம்ரன்...



'ரமணா' படத்தில் விஜயகாந்துக்கு ஜோடி இல்லை என்ற தகவல் ரசிகர் களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்திவிட்டதாம். அதனால் கதையில் சிலபல மாறுதல்களைச் செய்து சிம்ரனை ஜோடியாக்கி-விட்டார்கள்.



இதில் ஒரு குழந்தைக்குத் தாயாக நடிக்கி றார். இப்போதெல்லாம் சிம்ஸ் தன் இமேஜைப் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் கேரக்டர்களைத் தேர்வு செய்வதில் ஆர்வம் காட்ட ஆரம்பித் துவிட்டார். 'யூத்' படத்தில் ஒரு பாட் டுக்கு படு கவர்ச்சியாக ஒரு டான்ஸ் ஆடி யிருக்கும் சிம்ரன், 'கோவில்பட்டி வீரலட்சுமி' படம் வெளியான பிறகு சிறந்த நடிகைக்கான விருது நிச்சயம் என்கிறார். லட்சங்களை மட்டுமே விரும்பிய சிம்ரன், இப்போது லட்சியத்துக்காகவும் நடிக்க ஆரம்பித்தது ஏனோ?



வில்லன் படத்தில்
அஜீத்- கிரண்






எதற்கும் அலட்டிக் கொள்ளாதவர் விஜய். அதிலும் எப்படி? தன் கல்யாணத்தன்று மணப்பெண் ஓடிப் போனால்கூட சிரித்துக் கொண்டே அடுத்த வேலையை பார்க்கும் ஆசாமி. அவருக்கே காதல் தோல்வி வருகிறது. என்ன செய்தார் விஜய்? நான்ஸ்டிக் தோசைக்கல் லில் வெண்ணை தோசை சுட்ட மாதிரி அலட்டிக் கொள்ளாமல் மிச்ச கதையை நகர்த் தியிருக்கிறார் இயக்குனர் வின்சென்ட் செல்வா.

இங்கே பட்டதை சொல்வேன், இங்கே பட்டதை செய்வேன் என்று மனசையும் புத்தியையும் அடிக்கடி சுட்டிக் காட்டும் விஜய்க்கு இந்த அலட்டிக் கொள்ளாத பாத்திரம் அட்சய பாத் திரம்போல் பயன்பட்டிருக்கிறது. (ரொம்ப அழுது, ரொம்ப அலட்டிக்க வேண்டாமே!) தான் காதலித்த சந்தியாவுக்கு நிச்சயதார்த்தம் நடந்து முடிந்தவுடன் கூசாமல் அவரை பார்த்து ஐ லவ் யூ சொல்லும்போது லேசாக நிமிர்ந்து உட்கார வைக்கிறார். விஜயை கல்யாணத்தன்று ஏமாற்றிவிட்டு போன சிந்துவை காட்டி கதையில் பெருத்த திருப்பத்தை தரப்போகிறார் என்று எதிர்பார்த்தால் பைனான்ஸ் கம்பெனிக்காரர்கள் தோற்றார்கள் போங்கள். பட்டை நாமம் போடுகிறார் இயக்குனர். அவ்வப்போது விஜய் ரசிகர்களையும் மனதில் வைத்துக் கொண்டு ஒரு கானா ஸ்டைல் பாட்டையும் போட்டு கலகலப்பு மூட்டியிருக்கிறார். ஆள்தோட்ட பூபதியும் நானடா.... அந்த அமரத்தோட்ட பூபதியும் நானடா... அர்த்தத்தை விடுங்கள், ஆட்டம் ஜோர்.

வேண்டும் வேண்டும் என்ற அளவிற்கு சண்டைக்காட்சிகளில் அள்ளிக் கொடுக்கிறார் விஜய். க்ளைமாக்சில் சண்டைக்கு வாய்ப்பிருந்தும் ரூமிற்குள்ளேயே வைத்து கதையை முடித் திருக்கிறார் இயக்குனர். செலவைப்பற்றி யோசித்திருப்பாரோ செல்வா!

முன்னே பின்னே தெரியாத செடிக்கெல்லாம் தண்ணி ஊத்தறே.... கூட பொறந்த தம்பிக்கு தண்ணி ஊத்த மாட்டேங்கறீயே.. என்று குடிக்க பணம் வாங்கிக் கொண்டு போகும் வி.எம்.சி ஹனிபா விலாநோக சிரிக்க வைக்கிறார். இன்னொரு பக்கம் விவேக். இரண்டு பேரும் அடிக்கும் லூட்டியில் இரண்டு பட்டு போகிறது தியேட்டர். அதிலும் ஆட்டோவில் ஏறி அரைவட்டம் அடித்து திரும்புவதற்குள் அவசரமாக இறங்கி அதுகுள்ள வடபழனியில் இருந்து டி.நகர். வந்தாச்சா என்று கேட்டுவிட்டு ஆட்டோ கூலி கொடுக்கும் ஹனிபா, ஆட்டோவில் ஏற வரும் விவேக்கிடம் இது டி.நகர்தான் என்று மல்லுக்கு நிற்பது சுவாரஸ்யம்.



யுகேந்திரனின் வில்லத்தனத்தினத்தில் எள்ளும் இல்லை, கொள்ளும் இலை.

இசையில் 'மினி'சர்மா ஆகியிருக்கிறார் மணிசர்மா. விஜயையும் விவேக்கையும் தவிர யூத்தில் சொல்லிக் கொள்ள யூத்தாக எதுவும் இல்லை.

இப் பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது